

# காவியம் செய்த

# மூவர்





கமக வெளியீடு

கழக வெளியீடு: ௮௯௨

# காவியம் செய்த மூவர்

ஆசிரியர் :

திருக்குறள்மணி, வித்துவான், செஞ்சொற்புலவர்,

**திரு. அ. க. நவநீதகிருட்டிணன்**

தமிழாசிரியர்,

*ம. தி. தா. இந்துக் கலாசாலை,*

*திருநெல்வேலி.*

[*Approved by the Madras Text-Book Committee, for class use, non-detailed study for form V, Vide Fort St., George Gazette, page* 22 *dated* 10-4-1957.]

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.,

திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: Oct., 1956.
Reprints: June, 1957; July, 1957; May, 1958.

# KAVIYAM CHEITHA MOOVAR

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

98, EAST CAR STREET, TIRUNELVELI.

[Paper used: double crown 24 lbs white printing]

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 25,000.

# பதிப்புரை

செந்தமிழ் மொழிக்கண் நந்தா விளக்காக மிளிருவன காப்பியங்கள். அவை பல்வகை அறங்கள், நாடு நகர் பழக்க வழக்கப் பண்புகள், வரலாறுகள் முதலியனவற்றைப் புனைந்து உரைக்கும் பெற்றியனவாம்.

இக் காப்பியங்கள் பல்வகையின; பல வரலாற்றைப் புனைந்துரைப்பன; அவையிற்றுள், தமிழ்கூறுநல்லுலகுக்கு முப்பெருங் காப்பியத்தை ஆக்கித் தந்த பெரியார் மூவர்களின் வரலாற்றுண்மையையும் அவர்கள் செய்த காப்பிய வண்மையையும் சுருங்கிய முறையில் ஒருங்கே கிளப்பதே 'காவியஞ் செய்த மூவர்' என்னும் இவ் அரிய நூல். இம் மூவராவார், இளங்கோவடிகள், கூலவாணிகன்சாத்தனுர், சேக்கிழார் ஆகியோர். இவர்கள் முறையே ஆக்கிய காவியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரிய புராணம் என்னும் மூன்றுமாம்.

இத்தகைய மூவர்களின் வரலாற்றையும், அவர்கள் செய்த காவியச் சிறப்பையும் மாணவரும் தெளிவாகத் தெரிந்து மகிழும் வண்ணம் எளிய இனிய செந்தமிழ்நடையில் எழுதியுதவியவர் வித்துவான், திரு. அ. க. நவநீதகிருட்டிணன் அவர்கள். அவர்கட்குக் கழகத்தார் நன்றி.

இச் சீரிய நூலை நன்முறையில் அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். இஃது உயர்நிலைப்பள்ளி மாணவர்கட்குத் துணைப்பாட நூலாகப் பயன் படும் வகையில் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியப் பெருமக்களும், அருந்தமிழ் நாட்டு மக்கள் யாவரும், இந்நூலைப் பெற்றுப் பெரிதும் ஆதரிப்பதுடன், எமக்கும் இப் பணிபோன்ற நன்னூல் வெளியீட்டுப் பணிக்கு உதவியளிப்பார்களென நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# அணிந்துரை

கன்னித் தமிழ்மொழியில் காவியங்கள் பல உண்டு. அவற்றுள் பெருங்காவியங்கள் சிலவே. அவற்றுள்ளும் முதற் பெருங்காவிய மாகத் திகழ்வது சிலப்பதிகாரமே. அதனை அடுத்துத் தோன்றிய மணிமேகலை இரண்டா வது பெருங்காவியமாகும். இளங்கோவடிகள் அருளிய சிலப்பதிகாரத்தைச் சமண காவியம் என்பர். சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலை யைப் பௌத்த காவியம் என்பர்.

இவற்றிற்குப் பின்னர்ப் பத்தாம் நூற்றாண் டில் தோன்றிய சிந்தாமணியே பெருங்காவிய மாகும். இதனை யடுத்துப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழார்பெருமான் பெரிய புராணம் என்னும் பெருங்காவியத்தை அரு ளினார். அப் பெரியபுராணம் சைவக் காவியம்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரிய புராணம் ஆகிய முப்பெருங் காவியங்களைப் பற்றியும் தற்கால இளைஞர் உலகம் தெளிவாகத் தெரியவேண்டும். அவற்றைப் பிற்காலத்தில் நான்முழுதும் ஓதி உணர்ந்து இன்புற வேண்டும்; அதற்குரிய உணர்ச்சியை இளமை உள்ளத்திலேயே எழுமாறு செய்யவேண்டும். இவை போன்ற நன்னோக்கங்களுடன் இனிய

எளிய நடையிலும் புதிய முறையிலும் 'காவியம் செய்த மூவர்' என்னும் இச் சின்னூல் உரு வாக்கப் பெற்றது.

இதனைத் தமிழ்மாணவர் உலகம் பெற்றுப் பயனெய்துமாறு சிறந்த முறையில் வெளியிட்டும், சிற்றறிவுடையேனாகிய எளியேனைப் பல கால் நூல்கள் எழுதுமாறு ஊக்குவித்தும், தமிழ்த்தாய்க்குத் தனிப்பெரும் பணி புரிந்து வரும் தமிழ்க் காவலராகிய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையாப்பிள்ளை யவர்கட்கு எப்பொழுதும் எனது நன்றி கலந்த வணக்கம் உண்டு.

தமிழ் வெல்க!

அ. க. நவநீதகிருட்டிணன்

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| | க. தமிழ்க் காவியங்கள் | ,, |
| | உ. தமிழில் முதற் பெருங்காவியம் | 5 |
| க. | இளங்கோவடிகள் | 9 |
| | க. இலக்கியப் புரட்சி | ,, |
| | உ. இளங்கோ துறவு | 10 |
| | ங. குன்றக்குறவர் கூறிய செய்தி | 12 |
| | ச. கண்ணகி வரலாறு | 15 |
| | ரு. கண்ணகியின் காவியக் கோவில் | 38 |
| | சு. இளங்கோவின் சமயம் | 41 |
| | எ. சிலப்பதிகாரச் சிறப்பு | 47 |
| உ. | சாத்தனுர் | 51 |
| | க. பெயர்க்காரணம் | ,, |
| | உ. திருக்குறட் பற்று | 53 |
| | ங. ஆசிரியர் வரலாறு | 54 |
| | ச. மணிமேகலைக் காவிய மாண்பு | 61 |
| | ரு. மணிமேகலை வரலாறு | 64 |
| | சு. மணிமேகலையில் ஒளிரும் மணிகள் | 85 |
| ங. | சேக்கிழார் | 91 |
| | க. ஆசிரியர் வரலாறு | ,, |
| | உ. பெரியபுராணம் ஒரு பெருங்காவியம் | 105 |
| | ங. பெரியபுராணத்தின் பெருமை | 109 |
| | ச. சேக்கிழார் புலமைச் சிறப்பு | 113 |

# காவியம் செய்த மூவர்

## தோற்றுவாய்

### க. தமிழ்க் காவியங்கள்

தெய்வத்தன்மை வாய்ந்த தீந்தமிழ் மொழிக்கண் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றிய நூல்கள் பலவுள. அவற்றுள் மிகவும் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலே. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பும் மரபே தொன்றுதொட்டு நின்று நிலவி வருவதாகும். அம்முறையை நோக்கினால் செம்மை சான்ற செந்தமிழ் நூல்கள் பல, தொல்காப்பியத்திற்கு முற்பட்ட நாளில் தோன்றியிருத்தல் வேண்டுமன்றோ! அவையெல்லாம் பொங்கி எழுந்த கடலால் மங்கி மறைந்தொழிந்தன. இந்நாளில் சங்க இலக்கியங்கள் என்று கொண்டாடப் பெறும் தண்டமிழ் நூல்கள் பலவும் தொகைநூல்களே. நல்லிசைப் புலவர்கள் பல்லோரால் பல்வேறு காலங்களில் பாடப்பெற்ற பைந்தமிழ்ப் பாக்களின் தொகுப்புக்களே அந் நூல்கள்.

தமிழகத்தில் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வந்த பழங்குடி மக்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பாராட்டிப் பாடிய பாக்கள் பலவற்றைச் சங்கத் தொகைநூல்களில் காணலாம். குறுநில மன்னர்களின் சிறப்பைக் குறிப்பிடும் பாக்களையும் பார்க்கலாம். இரவலர்க்கு வரையாது வழங்கிய வள்ளல்களின் வண்மையை வகுத்துரைக்கும் பாக்களையும் நோக்கலாம். தமிழ்நாட்டு மன்னர்களின் தந்நிகரில்லாத வீரத்தையும் மறவர்களின் போர்த்திறனையும் புகழ்ந்துரைக்கும் கவிதைகளையும் காணலாம். கருத்தொருமித்த காதலர் வாழ்க்கையில் காணும் இன்ப நிகழ்ச்சிகளை விளக்கும் இனிய பாடல்களையும் பார்க்கலாம்.

இங்ஙனம் மன்னர், மறவர், புலவர், செல்வர், வள்ளியோர், காதலர் முதலாயினருடைய வாழ்வில் நிகழ்ந்த சுவையான பகுதிகளைத் தனித்தனியே எடுத்துரைக்கும் இனிய பாடல்களையே எல்லா நூல்களினும் காணலாம். சிறப்புடைய ஒருவரது பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள வாழ்க்கை நிகழ்ச்சிகள் அனைத்தையும் தொடர்பாக வகுத்துரைக்கும் சங்கத் தமிழ்நூல் ஒன்றேனும் கண்டோமில்லை. பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று பாராட்டப்பெறும் பழந்தமிழ்ப் புலவர் பாரத வரலாற்றை வெண்பா யாப்பால் விரித்துரைத்தார் என்பர். அந்நூல் இந்நாளில் முழுவடிவுடன் காணப்பெறவில்லை. ஒருசில பாக்களே ஆங்காங்கு உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளன. ஆகவே கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னர் ஒரு பொருள்பற்றிய தொடர்

நிலைச் செய்யுட்களால் ஆகிய நூல்கள் தமிழில் தோன்றவில்லை.

குலத்தாலும் பிற நலத்தாலும் தன்னேரில்லாத தகைமை எய்திய தலைவன் ஒருவனது அரிய வரலாற்றை அழகுற விளக்கும் நூலே காப்பியம் எனப் படும். இதனைப் பெருங்காப்பியம் என்றும் சிறு காப்பியம் என்றும் இருவகையாகப் பிரிப்பர். அணி யிலக்கணம் வகுத்த தண்டியாசிரியர் இருவகைக் காப்பியத்திற்கும் இலக்கணம் வகுத்துள்ளார்.

பெருங்காப்பியத்தில் வாழ்த்து, வணக்கம், உரைக் கும் பொருளுணர்த்தல் என்ற மூன்றனுள் ஒன்று, முதற்கண் அமையவேண்டும். இவற்றுள் இரண்டு வரினும் இழுக்கன்று. மூன்றும் ஒருங்கு வரினும் உயர்வே என்பர் ஆன்றோர். கற்பார்க்கு அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கனையும் பயக் கும் நல்லியல்புடையதாய் நூல் இருக்கவேண்டும். தன்னோடு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதானைத் தலைவ னாகக்கொண்டு நடக்கவேண்டும். மலை, ஆறு, கடல், நாடு, நகரம், பருவம், கதிரவன் தோற்றம் - மறைவு, திங்கள் தோற்றம் இவை போன்றவற்றின் இனிய வருணனைகள் அமையவேண்டும். திருமணம், முடி சூட்டல், பொழில்விளையாட்டு, புனல்விளையாட்டு, மக்கட்பேறு, ஊடல்வாட்டம், கூடல்இன்பம் இவை போன்ற சிறப்புக்களைச் சித்திரிக்க வேண்டும். மந்தி ரம் இருத்தல், தூதுவிடுத்தல், பகைமேற் செல்லல், போர்புரிதல், வெற்றியுறுதல் முதலாய நிகழ்ச்சிகளைத் தொடர்பாக மொழிதல் வேண்டும். காதை, சருக்கம், இலம்பகம், படலம் முதலிய பாகுபாடுகளைப் பெற்று வரல் வேண்டும். கற்பார்க்கும் கேட்பார்க்கும் ஒன்

பான் சுவைகளும் மாறி மாறி ஊட்டுதல் வேண்டும். இத்தகைய பல்வேறு இயல்புகளும் அமையப் புலவரால் புனையப்பெறும் இனிய கதைச் செய்யுட் கோவையே பெருங்காப்பியம் என்று குறிக்கப்படும்.

அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கு உறுதிப்பொருள்களையும் நன்கு உணர்த்துவதே நன்னூலின் இலக்கணம் என்பர் முன்னோர். பெருங்காப்பியம் அந் நான்கையும் விளக்கும் பெற்றியுடையதே. ஏதேனும் ஒன்று குறையினும் அது சிறு காப்பியமெனச் செப்பலுறும். ஆனால், உறுதிப்பொருள் உணர்த்தும் திறத்தையன்றிப் பெருங்காப்பியத்திற் குரிய பிற உறுப்புக்களில் சில குறைந்துவரினும் அதுவும் பெருங்காப்பியம் என்றே பேணத்தகும். இத்தகைய காப்பியம் ஓரேவகையான செய்யுளானும் பலவகைச் செய்யுளானும் உரை விரவியும் வரும். இதனைப் பொருட்டொடர்நிலைச் செய்யுள், கதைச் செய்யுள், அகலக்கவி, தொடர்நடைச் செய்யுள், விருத்தச் செய்யுள் எனப் பல பெயரால் வழங்குவர்.

காப்பிய இலக்கணங்களில் குறைவுறுது, கற்பவர் கேட்பவர் உள்ளங்களைக் கவரும் கதைச் செய்யுள் நூல்கள் தமிழில் பல உள்ளன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன ஐம்பெருங் காப்பியங்கள் ஆகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய ஐந்தும் அப் பெருங்காப்பியங்கள் ஆகும். இவையன்றி ஐந்து சிறுகாப்பியங்களும் உள்ளன. யசோதர காவியம், சூளாமணி, உதயண குமார காவியம், நாககுமார காவியம், நீலகேசி ஆகிய ஐந்தும் அச் சிறுகாப்பியங்கள் ஆகும்.

ஐம்பெருங் காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணி மேகலை, சிந்தாமணி ஆகிய மூன்றுமே இற்றை நாளில் முழு வடிவுடன் நமக்குக் கிடைத்துள்ளன. ஏனைய இரு நூல்களும் அங்ஙனம் கிடைக்கவில்லை. அந் நூல் களின் ஒரு சில பாக்களே ஆங்காங்குக் காணப்படு கின்றன. உரையாசிரியர்கள் சிலர் அப் பாக்களைத் தம் உரையினுக்கு இடையே மேற்கோளாகக் காட்டுகின் றனர். ஐஞ்சிறுகாப்பியங்களுள்ளும் நாககுமார காவியம் ஒழிய ஏனைய நான்குமே வெளியாகியுள்ளன. இவை யல்லாத வேறு சில பெருங்காப்பியங்களும் சிறு காப்பியங்களும் தமிழில் எழுந்துள்ளன. இராமா யணம், பாரதம், பெரியபுராணம், கந்த புராணம் முதலியனவும் பெருங்காப்பிய வரிசையில் எண்ணத் தக்க பெருமையுடையனவாகும்

தமிழில் தொண்ணூற்றாறு வகையான சின் னூல்கள் உண்டு. அவைகளைப் பிரபந்தங்கள் என்பர். அப் பிரபந்தங்களில் சில சிறுகாப்பிய வரிசையில் சேர்க் கத் தக்க சிறப்புடையனவாகும். பரணி, உலா, மடல், பிள்ளைத்தமிழ், ஆற்றுப்படை போன்ற சிறு நூல்கள் ஒப்பிலாச் சிறப்புடைய ஒருவனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெறும் பண்புடையன. ஒரு சில வருணனைகளையும் பெற்று நடக்கும் பெற்றியுடையன. ஆதலின் அவைகளைச் சிறுகாப்பியங்கள் என்று குறித் தல் பொருத்தமாகும்.

## உ. தமிழில் முதற் பெருங்காவியம்

கன்னித் தமிழ்மொழியில் இந்நாள்வரை எண் ணற்ற காவியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் பெருங்காவியங்கள் சிலவே. சிறுகாவியங்கள் பலவாம்.

ஐம்பெருங்காவியங்களும் ஐஞ்சிறுகாவியங்களும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க செந்தமிழ்க் காவியங்களாகும். ஐம்பெருங்காவியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரமே தமிழில் தோன்றிய முதற் பெருங்காவியம். அது தோற்றத்தால் மட்டுமன்றி ஏற்றத்தாலும் முதன்மை பெற்ற காவியமாகும்.

இத்தகைய சிலப்பதிகாரம் முதன்முதல் தமிழிலேயே ஆக்கப் பெற்றது. பிற மொழியினின்று மொழி பெயர்க்கப்பெற்ற வழிநூலன்று. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விரவிய இணையற்ற காவியமாகும். இடையிடையே இனிய உரைநடை மருவிய உயர்ந்த இலக்கியமாகும். இந்நூலின் இனிமையில் மனத்தைப் பறிகொடுத்த உரிமைக் கவிஞராகிய பாரதியார்,

—"நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு."

என்று பாராட்டினார். கற்பவர் கேட்பவர் நெஞ்சையெல்லாம் கவர்ந்து கொள்ளும் பேராற்றல் அப்பெருங் காவியத்திற்கு உண்டு என்று நன்றாகக் கண்டு கூறினார் அக் கவிஞர்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, தமிழர் இன்றியமையாது கற்கவேண்டிய ஐந்து இலக்கியங்களைத் தமது 'இலக்கிய பஞ்சகம்' என்ற கவிதையில் அறிமுகம் செய்து வைக்கிறார். அவற்றுள் முதலிடம் பெறுவது தமிழ்மறையெனத் தலைக்கொண்டு போற்றும் திருக்குறட் பெருநூலாகும். அதனையடுத்து இரண்டாவதாகச் சிலப்பதிகாரத்தை அறிமுகப்படுத்துகிறார்.

"தேனிலே ஊறிய செந்தமி ழின்சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளள வும்நிதம்
ஓதி உணர்ந்தின் புறுவோமே."

என்பது கவிமணியின் கவிதையாகும். தேனில் ஊறிய தீந்தமிழின் சுவையான பகுதிகளையெல்லாம் தேர்ந் தெடுத்துத் தொகுத்த நூலே சிலப்பதிகாரம். அதனைத் தமிழர் வாழ்நாள் முழுதும் பலகால் ஓதி வளமான இன்பத்தைப் பெறுதல்வேண்டும் என்று அறிவுறுத் தினர்.

ஒரு நூல் ஒப்புயர்வற்றதாக அமைதற்கு மற்றொரு காரணமும் கூறலாம். நூலைத் தரும் ஆசிரியன் மாசற்ற தூய வாழ்வுடையவனாகத் தேசுற்று விளங்கவேண்டும். அவன் தனது வாழ்வு முழுவதையும், தான் இயற்றும் ஒரே நூலுக்குத் தந்து உதவுதல் வேண்டும். அவனது சிந்தனையெல்லாம் எந்த நாளும் அந்த நூலைப் பற்றியன வாகவே இருந்து உருப்பெறுதல் வேண்டும். அந்நூலைத் தவிர ஒரு வரியேனும் உரைக்கவேண்டும் என்ற உள்ளம் அவனுக்கு உண்டாதல் கூடாது. அவனது வாழ்வில் வறுமையோ துயரமோ குறுக்கிடவும் கூடாது. இன்பம் நிறைந்த தூய வாழ்வுடைய இணை யற்ற பேரறிவாளனாகிய ஓர் ஆசிரியனால் ஆக்கப் பெறும் நூல் ஐயமின்றி மெய்யாகவே தனிப்பெருஞ் சிறப்புடையதாகத் திகழும்.

இவ் வகையில் எழுந்த நூல்கள் தமிழில் மூன்றே உள்ளன. அவை திருக்குறள், சிலப்பதிகாரம், பெரிய புராணம் என்பன. இம் மூன்றுள் முதன்மை வாய்ந்த திருக்குறளை அருளிய திருவள்ளுவர் தெய்வப் புலவர் என்று போற்றும் சிறப்புற்றவர். சிலப்பதிகாரத்தைத்

தந்த செந்தமிழ் வல்லார் சேரநாட்டுப் பேரரசன் இமய வரம்பனது இளைய புதல்வராவர். இளங்கோவாகிய அவர் இளமையிலேயே துறவு பூண்டு, இளங்கோ வடிகளென விளங்கிய பெருங்கவிஞராவர். அவர் தூய்மையான துறவற நெறியில் நின்ற வாய்மையாளர். அறிவு நலங்கனிந்த அரசத் துறவியார். பெரியபுராணம் தந்தருளிய பேராசிரியர் சேக்கிழார் பெருமானோ சோழப் பேரரசின் முதல் அமைச்சராகத் திகழ்ந்த மதிவல்லார். தெய்வப் புலமைச் சேக்கிழார் என்று சைவத் தமிழுலகம் போற்றும் சான்றோராவர்.

ஒப்புயர்வற்ற செந்தமிழ் நூல்களைத் தந்தருளிய முப்பெருங் கவிஞருள் ஒருவராகிய இளங்கோ அறிவிலும் திருவிலும் அரசராக விளங்கிய பெருமையர். தூய துறவுநெறியிலே நின்று செந்தமிழைச் சந்தமுற ஆய்ந்துணர்ந்தவர். அவர் தமது புலமை நலத்தை யெல்லாம் சிலப்பதிகாரக் காவியம் ஒன்றற்கே பயன்படுத்தினர். அந்தப் பெருநூலைத் தவிர ஒரு வரியேனும் அவர் உள்ளத்தில் கவிதையாக உருவெடுக்கவில்லை. ஆதலின் முதன்முதல் தமிழில் அவரால் உருவாக்கப்பெற்ற பெருங்காவியமாகிய சிலம்புச் செல்வம் பல்லாற்றானும் முதன்மைபெறும் நல்லியல் புற்றது.

# க. இளங்கோவடிகள்

## க. இலக்கியப் புரட்சி

தமிழில் காவியம் தோன்றுதற்கு வித்திட்ட வித்தகர் இளங்கோவடிகளே என்று இயம்பலாம். தமிழ் இலக்கிய உலகிற்கே புதுநெறி யொன்றை வகுத்துப் புகுத்திய புலவர் அவராவர். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் அவர் தமிழில் ஓர் இலக்கியப் புரட்சியை உண்டுபண்ணிவிட்டார். அவர் காட்டிய புதுவழியைப் பின்பற்றிப் புலவர் பலர் அரிய காவியங்களை ஆக்கினர்.

இளங்கோவடிகளின் இனிய நண்பராகவும், சேரனது பேரவைப் புலவராகவும் விளங்கிய சீத்தலைச் சாத்தனார், அடிகளாரைப் பின்பற்றிப் பெருங்காவியம் ஒன்றை அமைத்தார். அவர், இளங்கோ அருளிய சிலப்பதிகாரத்தோடு தொடர்புடைய மணிமேகலை வரலாற்றைக் காவியமாக வகுத்து உதவினார். ஆதலின், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒரே காலத்தில் தோன்றிய ஒன்றோடொன்று பெரிதும் தொடர் புடைய பெருங் காவியங்களாகும்.

இங்ஙனம் தமிழில் முதற்காவியம் கண்ட இளங்கோவடிகள் காவிய உலகிலும் மற்றொரு புரட்சியை உண்டு பண்ணினார். வடமொழியில் பழங் காவியம் என்று பாராட்டப்பெறுவது வான்மீகியின் இராமாயணம் ஆகும். கிரேக்க மொழியில் தோன்றிய பழங்காப்பியம் ஹோமர் பாடிய இலியட் என்னும் இலக்கியமாகும். இலியட் நாட்டு இளவரசன், மெனலஸ் என்ற மன்னர்பெருமானின் அழகிய மனைவியாகிய ஹெலன் கோமகளைச் சிறை செய்ததால் நேர்ந்த

போரைச் சித்திரிப்பது அக் காப்பியம். இலத்தீன் மொழியின் பழங்காவியமாக இலங்குவது வர்ஜில் என்பார் வழங்கிய ஈனிட் என்னும் இனிய நூலாகும். அஃது ஈனியஸ் என்ற அரசனது வரலாற்றை விரித்துரைப்பதாகும். ஆகவே எந்த நாட்டுப் பழங்காப்பியத்தைப் பார்த்தாலும் முடிமன்னர் வரலாற்றையே வகுத்துரைக்கக் காணலாம்.

இளங்கோவடிகள் முதலில் அமைத்த இனிய காவியமாகிய சிலப்பதிகாரமோ முடிமன்னரைத் தலைவராகக் கொண்டதன்று. குடிமக்களுள் ஒருவனாகிய கோவலனைத் தலைவனாகவும், ஒரு பெண்ணாகிய கண்ணகியைத் தலைவியாகவும் கொண்டு பாடப்பெற்றது. இங்ஙனம் குடிமக்களைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்ற முதற்காவியம் சிலப்பதிகாரமே. ஆதலின் காவிய உலகிலும் இளங்கோவடிகள் ஒரு புரட்சியை ..ண்டு பண்ணினார் என்று சொல்லுதல் பொருந்தும்.

## உ. இளங்கோ துறவு

தமிழ்க் காவியங்களுள் முதன்மை பெற்றதாகிய சிலப்பதிகாரத்தை மொழிந்தருளிய இளங்கோவடிகள், சேரவேந்தன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இளைய மகனாராவர். இவரைப்பெற்ற தாய், சோழன் மணக்கிள்ளியின் மகள் நற்சோணையாவள். நெடுஞ்சேரலாதனுக்கும் நற்சோணைக்கும் மைந்தர் இருவர் பிறந்தனர். அவருள் மூத்தவன் செங்குட்டுவன் என்பான். பேரரசனாகிய நெடுஞ்சேரலாதன் ஒருநாள் தன் மைந்தர் இருவரும் இருபால் அமரப் பெருமையுடன் அத்தாணி மண்டபத்தில் அரசு வீற்றிருந்தான். அவ் அரசவையுள் புகுந்து பரிசில் பெறவந்த நிமித்திகன் ஒருவன்,

மன்னனையும் மைந்தரையும் அடிமுதல் முடிவரை ஆய்ந்து கூர்ந்து நோக்கினான்.

பின்னர், அந் நிமித்திகன் மன்னனை நோக்கி, "அரசரேறே! நின் மைந்தர் இருவருள் இளங்கோவே அரசற்குரிய இலக்கணங்கள் எல்லாம் இனிது அமையப் பெற்றுள்ளான். அவனே நினக்குப் பின்னர் நீள்முடி தரித்தற்குத் தகுதியுடையவன்," என்று இயம்பி நின்றான். நிமித்திகன் மொழியைக்கேட்ட செங்குட்டுவன் விழிகளில் சினத்தீ பொங்கியது. அவனது உள்ளத்தில் கோபக்கனல் கொந்தளித்தது. இதனைக் குறிப்பால் உணர்ந்த இளங்கோ ஆசனம்விட்டு எழுந்தார். நிமித்திகனைப் பலவாறு கடிந்து பேசினார். இவன் அரசு முறை அறியாது பிதற்றினான் என்று பழித்துரைத்தார். அவனை அரசவையைவிட்டு அகலுமாறு செய்தார். "யான் இப்போதே அரச வாழ்வை நீத்துத் துறவுக்கோலம் கொள்வேன்," என்று உறுதி கூறினார்.

இளங்கோவின் உறுதிமொழியைக் கேட்ட தந்தையாகிய இமயவரம்பன் சிந்தை கலங்கினான். இளங்கோவை மார்போடு அணைத்து, "மகனே! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? சிறிதும் ஆராயாது துறவுகொள்ளத் துணிந்துவிட்டாயே! அரசுக் கோலத்துடன் அண்ணனுக்குத் துணையாக இருத்தல் ஆகாதா?" என்று பலவாறு வருந்தி மொழிந்தான். அரசவையில் அமர்ந்திருந்த அமைச்சர் முதலாயினார் வியப்பும் திகைப்பும் அடைந்தனர். அண்ணனாகிய செங்குட்டுவனோ இளவலின் சிறந்த உள்ளத்தைக் கண்டு வியந்தான். துறவுபூணத் துணிந்த அவனது உறுதியைக் கண்டு இரங்கினான். தன் இளவலை நோக்கித், "தம்பி! நினது உறுதிப்படியே தவக்கோலம்

தாங்கினும் நகரைவிட்டு அகலாது, எனது நல்லாட்சிக்குத் துணைபுரிய வேண்டும்,'' என்று அன்புடன் வேண்டினன்.

இங்ஙனம் தந்தையும் தமையனும் சிந்தையில் நிறைந்த அன்பால் செப்பிய மொழிகளை, இளங்கோ செவியுறக் கேட்டனர். எனினும் தாம் கொண்ட உறுதியில் சிறிதும் தளர்ந்தாரல்லர். அவ் அரசவையிலேயே தவக்கோலம் தாங்கி, அரண்மனையினின்று நீங்கினர். வஞ்சிமாநகரின் கீழ்த்திசையில் அமைந்த குணவாயில் கோட்டம் என்னும் சமண் பள்ளியைச் சார்ந்து வாழ்ந்து வரலாயினர்.

அரசர்க்குரிய ஆடையணிகளை நீக்கி, அருந்தவருக்குரிய கல்லாடை புனைந்து இளங்கோவடிகள் என்று எல்லோரும் ஏத்துமாறு தூய துறவற வாழ்வைத் தொடங்கினர் இளங்கோ. அன்றுமுதல் பல்வேறு சமய நூல்களை ஆராயத் தலைப்பட்டார். சங்கத் தமிழ் நூல்களையெல்லாம் சங்கையறக் கற்கலானர். இன்பத் தமிழையே தமக்கு ஏற்ற துணையாகக் கொண்டு, பொழுதை இனிது போக்கினர். கல்வித் துறையிலேயே தமது கருத்தை யெல்லாம் செலுத்திய அடிகளார் அரும்பெருந் தமிழ்க் கவிஞரானர். அவர் மேற்கொண்ட தூய துறவுநெறி, புலமையைப் பெருக்கிக் கொள்ள அரிய வாய்ப்பாயிற்று. புலமைநலங் கனிந்த அடிகளார் தமது புகழுடம்பை நிலைநாட்டத்தக்க காலத்தை எதிர்நோக்கி இருந்தார்.

## ௩. குன்றக்குறவர் கூறிய செய்தி

தந்தையாகிய இமயவரம்பனுக்குப் பின்னர்ப் பொன்முடி புனைந்து சேரநாட்டை ஆண்ட செங்குட்டு

வன் ஒரு சமயம் மலைவளம் காணப் புறப்பட்டான். அவனுடன் இளங்கோவடிகளும் சென்றனர். அது சமயம் மதுரை மாநகரத்தினின்று வந்த செந்தமிழ்ப் புலவராகிய சீத்தலைச் சாத்தனாரும் அவர்களுடன் சேர்ந்து புறப்பட்டார். மன்னன் செங்குட்டுவன் தன் படைகள் புடைசூழப் பேரியாற்றங்கரை மணல்மேட்டை அடைந்தான். ஆங்குக் கூடாரம் அமைத்து எல்லோரும் இன்பமாக அமர்ந்திருந்தனர்.

செங்குட்டுவன் மலைவளம் காண வந்திருக்கும் செய்தியை மலைவாழ் வேட்டுவர் அறிந்தனர். மலையிலுள்ள மாண்புறு பொருள்களை எல்லாம் கையுறையாக எடுத்துக் கொண்டு மன்னனைக் காண வந்தனர். பேரியாற்றங்கரை மணல்மேட்டில் மகிழ்வுடன் வீற்றிருந்த மன்னனைக் கண்ணுற்றனர். அவன் திருமுன்பு எய்தி, 'ஏழ் பிறப்படியேம்; வாழ்க! நின்கொற்றம்' என்று அவனை வாழ்த்தி அடிபணிந்து நின்றனர். குன்றக் குறவர்தம் வரவைக் கண்ட செங்குட்டுவன் அவர்கட்கு மலர்முகம் காட்டினான். "நீவிர் வாழும் மலை நாட்டில் நிகழ்ந்த சிறப்பு ஏதேனும் உளதோ?" என வினவினான்.

நெடுவேள் குன்றத்தில் தாம் கண்ட வியத்தகு நிகழ்ச்சியை வேந்தனுக்கு அறிவித்தற் பொருட்டே ஆங்கு வந்த வேட்டுவர், "அரசர் பெருமானே! திருமுன்பில் தெரிவிக்கற்பாலதாகிய அரியதொரு செய்தியுண்டு. திருச்செங்குன்று மலைமேலுள்ள ஒரு வேங்கை மரத்தின் நீழலில் மார்பு ஒன்றை இழந்த மங்கை ஒருத்தி வந்து நின்றாள். விரித்த கூந்தலோடும் பெருத்த கவலையோடும் காணப்பட்டாள் அக் காரிகை. அன்னவளைக் கண்ணுற்ற யாங்கள், அவள் அண்மையிற் சென்று,

நீர் யார்?' என வினவினோம். அவள், 'மாடமதுரையோடு அரசு கேடுற வல்வினை வந்து உருத்த காலைக் கணவனை அங்கு இழந்து போந்த கடுவினையேன் யான்' என்று மறுமொழி தந்து நின்றாள். அன்று மாலைப் பொழுதில் விண்ணிலிருந்து விமானம் ஒன்று இறங்கியது. அதன்கண் தேவர்கள் பலர் அமர்ந்திருந்தனர். அவர்கள் அப் பெண்ணின்மீது மலர்மாரி சொரிந்தனர். அவ் விமானத்திலிருந்த அவள் கணவனைத் தேவர்கள் அவளுக்குக் காட்டினர். கணவனைக் கண்ட அக் காரிகை கழிபேருவகையுடன் அவ் விமானத்தில் ஏறிக்கொண்டாள். சிறிது நேரத்தில் அவ் விமானம் விண்ணில் மேல் நோக்கிப் பறந்து மறைந்தது. அப் பெண்ணின் நல்லாள் பெருந்தெய்வமாகவே விளங்கினாள். அவள் எந்த நாட்டைச் சேர்ந்தவளோ? யார் பெற்ற மகளோ? நாங்கள் அறியோம். இவ் அரிய செய்தியை அரசர் பெருமானிடம் அறிவித்தற்காகவே இங்கு வந்தோம்'' என்று சொல்லி வாழ்த்தி நின்றனர்.

குன்றக் குறவர் கூறிய செய்தியைக் கேட்டுச் செங்குட்டுவன் முதலானோர் பெருவியப்புக் கொண்டனர். அப்போது அங்கிருந்த தமிழாசிரியராகிய சாத்தனார் மட்டும் இச் செய்திகேட்டு வியப்புறாது சிறிதே புன்முறுவல் பூத்தவராய் இருந்தனர். அது கண்ட செங்குட்டுவன் புலவரது புன்முறுவலுக்குக் காரணம் யாதோ என வினவினான். உடனிருந்த இளங்கோவடிகளும் அதன் உண்மையுணரும் விருப்பைக் குறிப்பால் உணர்த்தினர். சேரனின் கோப்பெருந்தேவியாகிய வேண்மாளும் புலவரின் சொற்களைக் கேட்கும் வேட்கையுடன் இருந்தாள். ஆங்கிருந்த அமைச்சர் முதலான சுற்றத்தவரெல்லாம் புலவரது கருத்தை அறியும் ஆர்வத்துடன் இருந்தனர்.

இங்ஙனம் எல்லோருடைய உள்ளத்தையும் ஒருவழிப் படுத்திக் கொண்டு பெரும் புலவராகிய சாத்தனார் கண்ணகியைப் பற்றிய செய்தியைச் சொல்லத் தொடங்கினார். இவ்விடத்து இளங்கோவடிகள் 'தண்டமிழாசான் சாத்தன் இஃது உரைக்கும்' என்று குறித்த திறம் பெருத்த இன்பத்தை விளைப்பதாகும்.

வேட்டுவர், தம் மலைநாட்டில் கண்ட மங்கையின் வரலாற்றைச் சொல்லத் தொடங்கிய நல்லிசைப் புலவராகிய சாத்தனார், "வேந்தர் வேந்தே! அவ் வேட்டுவர், வேங்கை மர நீழலில் நிற்கக் கண்ட பொற்கொடியாள் சோழ நாட்டைச் சேர்ந்தவள். காவிரிப்பூம்பட்டினத்தில் தோன்றிய கற்புடையாள். அவள் பெயர் கண்ணகி. சிறந்த பத்தினித் தெய்வமாவாள். அவள் மதுரை மாநகரத்திலிருந்து இந்நாடு நோக்கி வந்தாள்," என்று கூறி, மேலும் விளக்கமாக அவள் வரலாற்றை விளம்பினார்.

## ௩. கண்ணகி வரலாறு

**கண்ணகி கடிமணம்**

கற்பரசியாகிய **கண்ணகி**, காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் மரபில் தோன்றியவள். பெருங்குடி மரபைச் சார்ந்த மாநாய்கன் என்பானுக்கு மகளாகப் பிறந்தவள். அவ்வூரிலேயே பெருங்குடி மரபைச் சேர்ந்த மாசாத்துவான் என்னும் பெருவணிகனும் இருந்தான். அவனுக்குக் குமரவேள் அனைய திருமகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் **கோவலன்**. அக் கோவலனுக்கும் கண்ணகிக்கும் மணஞ்செய்து மகிழ்ந்தனர் பெற்றோர். சில ஆண்டுகள் இவ் விருவரும் கருத்தொருமித்த காதலராய் மனையறத்தில் இனிது வாழ்ந்தனர்.

*மாதவி கலைத்திறன்*

இவர்கள் பிறந்த காவிரிப்பூம்பட்டினத்திலேயே கணிகையர் குலத்துதித்த மாதவி என்னும் மங்கையும் வாழ்ந்தனள். அவள் தன் குலத்திற்கேற்ப ஆடல் பாடல்களில் அரிய திறல் பெற்று விளங்கினுள். அழகி லும் இணையற்று ஒளி வீசினுள். சிறந்த கலையரசியாகத் திகழ்ந்த மாதவியின் கலைத்திறனைச் சோழன் கரிகாலன் கேள்வியுற்ருன். அரசவையில் மாதவியின் நடன அரங் கேற்றம் நடைபெற ஏற்பாடு செய்தான். நாட்டிலுள்ள பெருஞ்செல்வர்க்கெல்லாம் அரங்கேற்றத்திற்கு வரு மாறு அழைப்பு விடுத்தான். பெருவணிகனுகிய மாசாத்துவான் மகன் கோவலனுக்கும் அழைப்பு வந்திருந்தது. கோவலன் பல கலைகளை நுட்பமாகக் கற்றுணர்ந்தவன். கலையின் உயர்வு இனிமைகளைக் கண்டு பாராட்டும் கலைச்சுவைஞன். ஆதலின் மாதவி யின் நடன அரங்கேற்றத்தைக் காணக் கோவலன் பேராவலுடன் அரசன் பேரவை அடைந்தான்.

சோழன் பேரவையில் நடனம் ஆடிய நங்கை மாதவி கலையரசியாக மட்டுமின்றி எழிலரசியாகவும் காணப்பட்டாள். அவள் தனது கலைத்திறமையாலும் கட்டழகாலும் அனைவருடைய உள்ளத்தையும்கவர்ந்து விட்டாள். சோழன் கரிகாலன், மாதவிக்குத் 'தலைக் கோலரிவை' என்ற தலைசிறந்த பட்டமளித்துப் பாராட் டினுன். ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன்னைப் பரிசாக வழங்கினுன். தான் அணிந்திருந்த பச்சை மணிமாலை யொன்றை இச்சையுடன் கொடுத்தான். இங்ஙனம் அரசனுல் சிறப்பிக்கப் பெற்ற மாதவி பெருமகிழ்ச்சி யுடன் தனது மனையடைந்தாள்.

### கோவலன் கலைச்சுவை

மனையகம் புகுந்த மாதவி பணிப்பெண் ஒருத்தியை அழைத்தாள். கரிகாலன் வழங்கிய மரகதமாலையை அவள் கையில் கொடுத்தாள். "இதனைக் கையில் ஏந்திச் செல்வக் காளையர் வந்து சேரும் நாற்சந்தியில் நிற்பாயாக. இம் மாலைக்கு விலையாக ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன்னை அளிக்கும் இளைஞனை நமது இல்லத்திற்கு அழைத்து வருக. அவனையே என் காதலனாக யான் ஏற்றுக்கொள்வேன்," என்று சொல்லி அனுப்பினாள்.

அவளும் நகர நம்பியர் பலரும் உலவும் சந்தியில் வந்து நின்றாள். அவ்வழியே வந்த கோவலன் அம் மாலையின் விலை, மாதவியின் பரிசமெனத் தெரிந்தான். பணிப்பெண் பகர்ந்தவாறே ஆயிரத்தெண் கழஞ்சுப் பொன்னையும் கொடுத்து மாதவியின் மனையகம் அடுத்தான். அவளது கலையினும் அழகினும் காதல் மயக்கினும் மூழ்கினான். தனது மனையகத்தை அறவே மறந்தான்.

கோவலனைப் பிரிந்த கண்ணகி பெருந்துயருற்றாள். பிரிவுத் துயரால் வருந்திய அப் பெண்ணிற்குத் தேவந்தியென்னும் பார்ப்பனத்தோழி இடையிடையே ஆறுதல் கூறிவந்தாள். கண்ணகி தனது வருத்தத்தைச் சிறிதும் வெளிப்படுத்தாமலும் கணவனை வெறுத்தலின்றியும் ஒழுகி வந்தாள். கோவலனோ தனக்குரிய பெருஞ் செல்வத்தையெல்லாம் மாதவியிடமே கொண்டு கொடுத்து மருவி மகிழ்வானாயினான்.

### இந்திரவிழா

காவிரிப்பூம்பட்டினத்தில் ஆண்டுதோறும் இந்திர விழா மிகச் சிறப்பாக நடைபெறும். சித்திரைத்திங்கள்

நிறைமதி நாளில் தொடங்கி இருபத்தெட்டு நாட்கள் அப் பெருவிழா நிகழும். விழாவின் முடிவில் முழுநிலா நாளில் நகரமாந்தர் எல்லோரும் கடலாடுதற்குச் செல்வர். கோவலன், மாதவியுடன் கூடிவாழும் நாளில் இந்திரவிழா வந்துற்றது. நகரமக்கள் பல்வேறு அணிகள் பூண்டு ஆரவாரத்துடன் கடல்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். அக் காட்சியைக் கண்ட மாதவி தன் காதலனுடன் கடலாடுதற்குச் செல்ல விரும்பினாள். இருவரும் கடற்கரை அடைந்தனர். ஆங்குப் புன்னைமர நிழலில் புதுமணல் பரப்பின்மேல் விதானம் அமைத்துத் தங்கினர்.

**கோவலன் பிரிவு**

மலர்ந்த முகத்துடன் திகழ்ந்த கோவலன்பால் மாதவி தனது மகரயாழைத் திருத்திக் கொடுத்தாள். அவனும் அதனை மகிழ்வுடன் வாங்கி இன்னிசை எழுப்பிப் பலவகை வரிப்பாட்டுக்களைப் பண்ணமையப் பாடினான். அவனுடைய பாட்டுக்கள் வேறொரு மகள்பால் அவன் விருப்பம் கொண்டதுபோன்ற குறிப்பை உணர்த்தின. அதனால் ஊடல்கொண்ட ஆடலரசியாகிய மாதவி, காதலன் கையிலிருந்த யாழைப் பைய வாங்கினாள். வினைப்பயன் விளையுங் காலமாதலின் தானும் வேறோர் ஆண்மகனிடத்து விருப்புக்கொண்டது போன்ற குறிப்புடன் சில வரிப்பாடல்களைப் பாடினாள். அவற்றைக்கேட்ட கோவலன் கொடுங் கோபம் கொண்டு மாதவியை விட்டகன்றான். தனது மனையகம் நோக்கி விரைந்து நடந்தான்.

**கண்ணகி மாண்பு**

பன்னாட்களாகக் கணவனைப் பிரிந்து வருந்தும் கண்ணகி முன்னைநாள் இரவில் கண்ட தீக்கன

வொன்றைத் தன் தோழியாகிய தேவந்தியுடன் கூறிக் கொண்டிருந்தாள். அவள், 'நின் கணவர் விரைவில் வந்து சேருவார், கவலற்க' என்று தேற்றினாள். அவ் வேளையில் மனையகம் புகுந்த கோவலன் வாடிய மேனி யுடன் வந்த கண்ணகியைக் கண்டான். அவளை நெருங்கி, "கண்மணி! நின்னைப் பிரிந்து இன்னல் பல இழைத்துவிட்டேன். மாயப் பொய் கூட்டும் மாயத்தா ளாகிய மாதவி என்னை வஞ்சித்துவிட்டாள். அவ ளுடன் கூடிக் களித்து, நம் குல முன்னோர் தேடிக் குவித்த குன்றனைய செல்வத்தையெல்லாம் தொலைத் தேன். யான் உற்ற வறுமை, எனக்குப் பெருநாணத் தைத் தருகிறது," என்று சொல்லி நின்றான்.

கோவலன் சொற்களைக் கேட்ட கண்ணகி, மாத விக்குக் கொடுக்கப் பொருள் இல்லாமையால் இங்ஙனம் வருந்துகின்றான் போலும் என்று நினைந்தாள். புன் முறுவல் பூத்த இன்முகம் காட்டி, "ஏன் வருந்து கிறீர்கள்? என்பால் இன்னும் விலையுயர்ந்த இரு சிலம்புகள் உள்ளன. அவற்றை எடுத்துக்கொள்ளுங் கள்," என்று கூறிச் சிலம்புகளைக் கையேந்தி நின்றாள். கற்பரசியாகிய கண்ணகியின் அற்பு நிறைந்த உள்ளத் தைக் கண்ட கோவலன், "இச் சிலம்பை முதற் பொருளாகக்கொண்டு மீண்டும் வாணிகம் நடத்து வேன். இழந்த பொருளையெல்லாம் ஈட்டுவேன். நீ என்னுடன் மதுரை நகருக்கு எழுவாயாக," என்று அன்புடன் வேண்டினான்.

**மதுரைக்கு எழுதல்**

இரவின் கடையாமத்தில் எவரும் அறியாத வண்ணம் இருவரும் மனையினின்று வெளியேறினர்.

காவிரியின் வடகரை வழியாக ஒரு காததூரம் நடந்து சென்று பொழிலொன்றை அடைந்தனர். ஆங்குக் கவுந்தியென்னும் தவமுதியாள் ஒருத்தி தவச்சாலை அமைத்துத் தங்கியிருந்தாள். சமண் சமயத்தைச் சார்ந்த பெண்துறவியாகிய கவுந்தியைக் கோவலனும் கண்ணகியும் கண்டனர். அவள்பால் தாம் மதுரை மாநகருக்குச் செல்லும் செய்தியை அறிவித்தனர். அவளும் உடன் வருவதாகப் புறப்பட்டனள். மூவரும் மதுரை நோக்கி நடந்தனர். கண்ணகி கதிரவன் வெயில்காலும் பகற்பொழுதில் நடந்துசெல்ல வருந்தினாள். ஆதலின் நிலாத்தோன்றிய இராப்பொழுதெல்லாம் நடந்து, சோழநாட்டு வளங்களை எல்லாம் கண்டு களித்தவண்ணம் உறையூர்ப் புறஞ்சோலை ஒன்றை வந்துற்றனர்.

**உறையூர்ச் சோலையில் உறைதல்**

கோவலன் முதலான மூவரும் உறையூர்ச் சோலையில் தங்கியிருந்த வேளையில், அங்கு வம்பப் பரத்தையுடன் தூர்த்தன் ஒருவன் வந்துற்றான். கண்ணகியையும் கோவலனையும் கண்ணுற்ற அவர்கள், கவுந்தியை நெருங்கி, “மதனும் இரதியும் போன்ற இவர்கள் யாவர்?“ என்று வினவினர். “இவர்கள் என் மக்கள்; அவர்களை நெருங்காமல் அகன்று போங்கள்,“ என்று கடிந்து மொழிந்தாள் கவுந்தி. அதுகேட்ட அத்தீவினையாளர், “ஈதென்ன வியப்பு! ஒரு தாயின் மக்கள் காதலராக வாழ யாங்கள் கண்டதில்லையே!” என்று சொல்லி நகையாடினர். அவர்களுடைய இழிந்த மொழிகளைக் கேட்ட கவுந்தி கடுங்கோபம் கொண்டாள். “நீவிர் இம் முதுகாட்டில் திரிந்துழலும் குறுநரிகள் ஆகக்கடவீர்,” என்று சபித்தாள்.

கவுந்தியடிகளின் சாப மொழிகளைக் கேட்டுக் கண்ணகியும் கோவலனும் பெரிதும் வருந்தினர். அவ் இழிகுல மக்களின் அறியாமைக்கு இரங்கினர். பேதைமையால் பேசிய அவர்களை மன்னித்துச் சாப விடை கொடுத்தருள வேண்டினர். தவமகளாகிய கவுந்தியும் கோபம் தணிந்து, "இவர்கள் பன்னிரு திங்களளவும் இவ் இன்னலைப் பெற்றுப் பின்னர் முன்னை உருப் பெறுவாராக!" என்று சாபவிடை அருளினாள். அதன் பின்னர் ஆங்கு வந்த மறையோன் ஒருவனால் மதுரைக்குச் செல்லும் வழியை அறிந்து பன்னாள் நடந்து, ஒரு நாள் வைகறைப் பொழுதில் பார்ப்பனச் சேரியொன்றின் பக்கத்தில் அமைந்த கோயிலை அடைந்தனர். கோவலன் அவ்விடத்தில் கண்ணகியையும் கவுந்தியடிகளையும் இருக்கச்செய்து, காலைக்கடன் கழித்தற் பொருட்டுப் பொய்கை யொன்றிற்குச் சென்றான்.

**கோசிகனைக் காணல்**

அப்பொழுது மாதவியால் அனுப்பப்பட்ட கோசிகன் என்னும் அந்தணன் அங்கு வந்த கோவலனைச் சந்தித்தான். அவனைப் பிரிந்த பெற்றோர், மணி இழந்த நாகம்போல் வருந்திக் கலங்கி ஒடுங்கினர் என்று உரைத்தான். சுற்றமெல்லாம் உயிர் நீங்கிய உடம்பு போல் துயர்க்கடலில் மூழ்கியதென மொழிந்தான். இராமனைப் பிரிந்த அயோத்தி மக்களைப்போன்று, புகார் நகரிலுள்ளார் அனைவரும் புலம்பி வருந்தினர் என்று புகன்றான். காதலனைப் பிரிந்த மாதவியோ கவலை மிக்குச் செயலற்றுப் படுக்கையில் கிடக்கிறாள் என்று பகர்ந்தான். அவள் கொடுத்தனுப்பிய முடங்கலையும் தந்து நின்றான்.

அம் முடங்கலின் முகப்பில் மாதவியின் மணங்கமழ் கூந்தல் இலச்சினையைக் கண்டு மனம் குழைந்தான். முடங்கலைப் பிரித்து வாசித்து மாதவியின் கருத்தை உணர்ந்தான். ஊழ்வினையின் உறுபயனை நினைந்து உள்ளம் வருந்தினான். அவ் ஓலை, தனது பெற்றோர்க்கு அனுப்புதற்கும் ஏற்ற பெற்றியதாக இருத்தலைக் கண்டான். "இதனையே எனது வணக்கத்துடன் தந்தையிடம் கொண்டு காட்டுக," என்று வேண்டி அக் கோசிகனை வழியனுப்பினான்.

**மதுரை அடைதல்**

பின்னர்க் கோவலன் முதலான மூவரும் ஆங்கு நின்றும் புறப்பட்டு முன்போலவே இரவில் வழி நடந்து காடும் நாடும் கடந்து செல்வாராயினர். சின்னாட்களில் நீடுமிக்க மாட மதுரையின் மதிற்புறத்தே வந்து சேர்ந்தனர். ஆங்கிருந்த தவச்சாலை ஒன்றில் சென்று தங்கினர். மறுநாட் காலையில் கோவலன் எழுந்து, கவுந்தியிடமும் கண்ணகியிடமும் விடைபெற்று மதுரை மாநகருட் புகுந்தான். பற்பல தெருக்களிலும் சென்று, மதுரைப் பெருவளத்தையெல்லாம் கண்டு மகிழ்ந்தான். மீண்டு வந்து மதுரைச் சிறப்பையும் பாண்டி மன்னவன் செங்கோன்மையையும் கவுந்தியடிகட்குக் கூறினான். அப்பொழுது அங்கு வந்த நட்பாளனாகிய மாடலன் என்னும் மறையவனைக் கண்டு அவனுடன் உரையாடிக் கொண்டிருந்தான்.

**கண்ணகி அடைக்கலம்**

அவ் வேளையில் அங்கு வந்த ஆயர் முதுமகளாகிய மாதரியைக் கவுந்தியடிகள் கண்டாள். அவளுடைய உயர்ந்த குணநலங்களை உணர்ந்த கவுந்தியடிகள்,

அவள்பால் கண்ணகியை அடைக்கலமாக ஒப்புவிக்கக் கருதினாள். மாதரியை அழைத்து, "இவள் பெருஞ் செல்வக் குடியிற்பிறந்தவள். கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வம். இவளை நினக்கு அடைக்கல மாகத் தருகின்றேன். இவளுக்குத் தாயும் தோழியும் நீயேயாகி இனிது பேணுவாயாக. பத்தினிப் பெண்டிர் இருந்த நாட்டில் வானம் பொய்யாது; வளஞ் சுருங் காது; மன்னவர் கொற்றம் சிதையாது என்பர் ஆன் றோர். மேலும் தவத்தினர் அடைக்கலம் சிறிதாயினும் மிகப் பெரிய இன்பத்தைப் பின்பு பயப்பதாகும்," என்று கூறிக் கண்ணகியை மாதரிபால் ஒப்புவித்தாள்.

அவள் மகிழ்வுடன் ஏற்றுக் கவுந்தியிடம் விடை பெற்றுக் கண்ணகியைக் கோவலனுடன் தன் மனைக்கு அழைத்துச் சென்றாள். அவர்கள் இருவரையும் புது மனை யொன்றில் இருக்கச் செய்தாள். கண்ணகிக்குத் துணையாகத் தன் மகள் ஐயை என்பவளை அருகில் இருத்தினாள். அடிசில் அமைத்தற்கு வேண்டும் பொருள்களை எல்லாம் கொடுத்து உதவினாள். கண்ணகி அவற்றைக்கொண்டு காதலற்கு உணவாக்கி அன்புடன் ஊட்டினாள். இருவரும் அமுதுண்ட பின்னர்ச் சிறிது இன்பமுடன் உரையாடி மகிழ்ந்தனர். கோவலன் தனது பொருந்தாச் செயலை நினைந்து இரங்கினான். கற்புத்திறம் கடவாத கண்ணகியின் பொற்பினைப் போற்றினான். அவளுடைய சிலம்புகளுள் ஒன்றைப் பெற்று விற்றற் பொருட்டு மதுரை மாநகர்க் கடைத்தெருவிற் புகுந் தான். ஆயர் சேரியினின்று புறப்படுங்கால் எதிரே கொல்லேறு பாய வந்ததனைத் தீநிமித்தமெனச் சிந்தை யில் கொள்ளாதவனாய்ச் சென்றான்.

### பொற்கொல்லனைக் காணுதல்

மதுரைப் பெருந் தெருவொன்றில் புகுந்த கோவலன், தட்டார் பலர் தன்னைப் பின் தொடர்ந்து வரப் பெருமிதமாக நடந்துவரும் பொற்கொல்லன் ஒருவனைக் கண்டான். இவன் மன்னனால் மதிக்கப்பெற்ற மாண்புடையன் போலும் என்று மனத்துட்கொண்டு, அவனருகில் சென்றான். "அரசன் தேவி அணிதற்கேற்ற இச் சிலம்பினை நீ விலைமதிக்க வல்லாயோ?" என்று வினவினான். அப் பொற்கொல்லனும் தான் வல்லவன் என்று பணிவுடன் சொல்லவே, கோவலன் சிலம்பினை அவனுக்குக் காட்டினான். அரண்மனைச் சிலம்பைக் களவாடிய பொய்யனாகிய அப் பொற்கொல்லன், கோவலன் காட்டிய சிலம்பைக் கையில் வாங்கினான். அதன் செய்தொழிற் சிறப்பையெல்லாம் கூர்ந்து நோக்கினான். "இஃது அரசன் பெருந்தேவிக் கல்லது பிறருக்குப் பொருந்தாது. இதனை யான் அரசனுக்கு அறிவித்து வருமளவும் நீவிர் என் சிறுமனைக்கு அருகாகிய இவ் விடத்தில் இருப்பீராக," என்று கூறி அரண்மனை நோக்கி நடந்தான்.

### பொற்கொல்லன் சூழ்ச்சி

அப் பொற்கொல்லன் தான் அரண்மனைச் சிலம்பை வஞ்சித்த செய்தி வெளிப்படுவதன் முன் இப் புதிய சிலம்பை மன்னனுக்குக் காட்டித் தப்பித்துக்கொள்ள எண்ணினான். அரண்மனையை அடைந்த பொற்கொல்லன், கோப்பெருந் தேவியின் ஊடல் தணிக்க அவள் கோயில் நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கும் பாண்டியன் நெடுஞ்செழியனைக் கண்டு வணங்கினான். "அரசே! அரண்மனைச் சிலம்பைத் திருடிய கள்வன் அடியேனுடைய குடிசையில் வந்திருக்கின்றான்,"

என்று பணிந்து முறையிட்டான். வினை விளையும் காலமாதலின் வேந்தன் யாதும் ஆராயாது காவலாளரைக் கூவி அழைத்தான். "தேவியின் சிலம்பு இவன் குறித்த கள்வன் கையகத்தே இருக்குமாயின் அவனைக் கொன்று, சிலம்பைக் கொண்டு வருவீர்," என்று கட்டளையிட்டான். பொற்கொல்லன் தன் எண்ணம் பலித்ததென்று உள்ளம் களித்தான். காவலாளருடன் சென்று கோவலனைக் காட்டினன். "இவர்கள் அரசன் ஆணையால் சிலம்புகாண வந்தார்கள்," என்று கோவலனுக்குக் கூறினன்.

**கோவலன் கொலையுண்ணல்**

அரசன் ஆணையைச் சிரமேல் தாங்கி வந்த காவலாளர் கோவலனைக் கூர்ந்துநோக்கி, "இவன் கள்வனல்லன், கொலை செய்தற்கு உரியனுமல்லன்," என்று உரைத்தனர். அங்ஙனம் கூறிய காவலாளரை மறுத்து இகழ்ந்து 'இவன் கள்வனே' எனப் பல காரணங்களைப் பொருத்தமாக எடுத்தியம்பினன். அவனுடைய சொற்களைக் கேட்ட காவலருள் கொலையஞ்சாப் பாதகன் ஒருவன் விரைந்து சென்று கோவலனை வாளால் எறிந்து வீழ்த்தினன். ஊழ்வினை உருத்து வந்தமையால் புகழ்படைத்த பாண்டியன் செங்கோல் வளைந்தது. கோவலன், பொற்கொல்லன் சூழ்ச்சியால் கொலையுண்டு வீழ்ந்தான்.

**கண்ணகி செய்தி அறிதல்**

இவ்வேளையில் கண்ணகி இருந்த இடைச்சேரியில் தீச் சகுனங்கள் பல தென்பட்டன. அவற்றைக் கண்ட மாதரி முதலானோர் தீது நிகழாவண்ணம் திருமாலை வேண்டிக் குரவைக்கூத்து நிகழ்த்தினர். கூத்தின் முடி

வில் மாதரி நீராடுதற்பொருட்டு வையைத் துறைக்குச் சென்றாள். அப்பொழுது கோவலன் சிலம்பு திருடிய கள்வனென்று அரசனால் கொலை செய்யப்பெற்ற செய்தியை மதுரையுள்ளிருந்து வந்த மகளொருத்தி சொல்லக் கண்ணகி கேட்டாள். அவ்வளவில், அவள் அடைந்த துயருக்கோர் அளவில்லை. மயங்கி விழுந்தாள். பலவாறு புலம்பி அழுதாள். 'அந்தோ! என் செய் வேன்' என்று அலறித் துடித்தாள். மீண்டும் கோவல னைக் காணுதற்கு எழுந்து ஓடினாள். ஆய்ச்சியர் நடுவே நின்று, சூரியனை நோக்கி, "காய்கதிர்ச் செல்வனே! நீ அறிய என் கணவன் கள்வனோ?" என்றாள். "நின் கணவன் கள்வனல்லன்; அவனைக் கள்வனென்ற இந் நகரை விரைவில் தீயுண்ணும்," என்று வானில் குர லொன்று எழுந்தது.

**கோவலன் கண்ணகியைத் தேற்றுதல்**

கதிரவன் கூறிய சொற்களைக் கேட்ட கண்ணகி, அங்குநின்றும் அடங்காத சீற்றத்துடன் புறப்பட்டாள். கையில் மற்றொரு சிலம்பைத் தாங்கிக் கண்டார் நடுங்கும் வகையில் வீதி வழியே விரைந்து சென்றாள். ஆங்குள்ள மகளிரை நோக்கி, "என் கணவனை முன் போலக் காண்பேன்! அவன் சொல்லும் நல்லுரையைக் கேட்பேன்! அங்ஙனம் கேளேனாயின் என்னை இகழ் மின்!" எனச் சூளுரைத்தாள். கோவலன் கொலையுண்டு கிடந்த இடத்தை அடைந்தாள். அவனது உடம்பைத் தழுவித் தரையில் புரண்டு புலம்பிக் கதறினாள். அவ் வளவில் கோவலன் உயிர்பெற்றெழுந்தான். "கண்ணே! மதிபோன்ற முகம் வாடியதே!" என்று சொல்லித் தன் கையால் அவள் கண்ணீரைத் துடைத்தான். அவள் தன் அடிகளைப் பற்றி வணங்கி நிற்க, "நீ இங்கிருக்க,

என்று சொல்லி ஊனுடல் ஒழித்துத் துறக்கம் புகுந்தான்.

**கண்ணகி வழக்குரை**

மீண்டும் கண்ணகி தணியாத கோபத்துடன் அவ்விடத்தினின்று அகன்ருள். பாண்டியன் அரண்மனை வாயிலை அடைந்தாள். அவ்வேளையில் கோப்பெருந்தேவி, தான் கண்ட தீக்கனுக்களை அரசனிடம் கூறிக்கொண்டிருந்தாள். அரசன் அனுமதி பெற்றுக் கண்ணகி அவன்முன் சென்று நின்ருள். கண்ணீர் ஆருகச் சொரியக் கையில் தனிச்சிலம்புடன் நின்ற கண்ணகியைப் பாண்டியன் நெடுஞ்செழியன் பார்த்தான். "கண்ணீர் சொரிய வந்து நிற்கும் பெண்ணே! நீ யார்?" என்று வினவினுன்.

வினவிய மன்னனுக்கு மறுமொழி கூறத் தொடங்கினுள் கண்ணகி: "அடைக்கலம் புகுந்த புறவின் துயர் போக்கத் துலைபுக்கான் சிபி வேந்தன். கன்றை இழந்த பசுவின் கண்ணீர் தன் நெஞ்சைச் சுட்டமையால் தன் அருமை மகனைத் தேர்க்காலில் கிடத்திக் கொன்று முறை செய்தான் மனுவேந்தன். இத்தகைய செங்கோன்மையிற் சிறந்த மன்னர்கள் இருந்தாண்ட பெரும்பெயர்ப் புகார் என் பதியாகும். அவ்வூர்ப் பெருங்குடியர் மரபில் தோன்றிய மாசாத்துவான் என்னும் வணிகன் பெற்ற மகன் கோவலன். அவன் ஊழ்வினை செலுத்திய காரணத்தால் வாழ்தல் வேண்டி நின்னகர்ப் புகுந்து, என் சிலம்பினை விற்க வந்தான். அவன் கள்வனென்று நின்னுல் கொலைக்களப்பட்டான்! அவன் மனைவி யான். என் பெயர் கண்ணகி," என்று கூறினுள்.

கண்ணகியின் மறுமொழியைக் கேட்ட மன்னன் "கள்வனைக் கொல்லுதல் கொடுங்கோன்மையாகாதே, அஃது அரச நீதியன்றோ?" என்றான். கண்ணகி தன் கணவன் கள்வனல்லன் என்பதைக் காட்டும் பொருட்டு "என் சிலம்பிலுள்ள பரல் மாணிக்கம்," என்றாள். அரசன், "என் தேவியின் சிலம்பிலுள்ள பரல் முத்து," என்று மொழிந்து, கோவலனிடமிருந்து பெற்ற சிலம்பைக் கொணருமாறு பணித்தான். ஏவலாளன் அதனைக் கொணர்ந்து வைக்கவே, கண்ணகி அச் சிலம்பை எடுத்து ஓங்கி நிலத்தில் எறிந்து உடைத்தாள். அப்போது அதனுள்ளிருந்த மாணிக்கங்கள் மன்னவன் வாயில் சென்று தெறித்தன.

### பாண்டியன் இறத்தல்

கண்ணகியின் சிலம்பினின்று தெறித்த மாணிக்கங்களைக் கண்ட மன்னனது வெண்கொற்றக் குடை தாழ்ந்தது. கையிலிருந்த செங்கோல் தளர்ந்து தரையில் விழுந்தது. அவன் உள்ளமும் உடம்பும் ஒருங்கு நடுங்கின. "பொற்கொல்லன் புன்சொல்லைக் கேட்டு நீதி தவறிய யானோ அரசன்! யானே கள்வன்! புகழ் மிகுந்த தென்னாட்டு ஆட்சி என்னால் பழியுற்றதே. என் வாழ்நாள் இன்றோடு முடிவதாக!" என்று சொல்லி மயங்கி வீழ்ந்தான். அரியணையிலேயே அவன் உயிர் நீங்கியது. மன்னன் இறந்ததை அறிந்த கோப்பெருந் தேவியும் உடன் உயிர்நீத்தாள்.

### கண்ணகி மதுரையை எரித்தல்

இங்ஙனம் கணவனுக்குற்ற கடும்பழியைப் பாண்டியன் முன்னர் வழக்காடி ஒழித்த கற்பரசியாகிய கண்ணகி, தான் கொண்ட வெகுளி தணிந்தாளில்லை.

"யான் பத்தினி என்பது உண்மையானால் இம் மதுரை மாநகரத்தையும் ஒழிப்பேன்," என்று சபதம் கூறினாள். மன்னன் அரண்மனையைவிட்டுப் புறப்பட்டு மதுரையை மும்முறை வலம் வந்தாள். தனது இடது மார்பைத் திருகி எடுத்து வானில் சுழற்றி எறிந்தாள். உடனே, நகரின் பல இடங்களையும் பெருந்தீப்பற்றி எரிக்கத் தொடங்கியது.

அத் தீயின் வெம்மைக்கு ஆற்றாத மதுராபதி என்னும் பெண்தெய்வம் கண்ணகியின் முன்னர்த் தோன்றியது. அவளை நோக்கி, "யான் இந்நகரின் தெய்வம். இந் நகரிலிருந்த பாண்டியர்களுள் எவரும் கொடுங்கோன்மை உடையரல்லர். இப்போது இறந்த நெடுஞ்செழியனும் அத்தகையனே. எனினும் இத் துன்பம் நினக்கு விளைந்தமைக்குக் காரணம் வினைப் பயனே. சிங்கபுரத்து அரசனாகிய வசு என்பானிடம் பணிசெய்துவந்த பரதன் என்பான், அவ்வூர்க் கடைத் தெருவில் பண்டம் விற்றுக்கொண்டிருந்த சங்கமன் என்னும் வணிகனைப் பகைவனது ஒற்றன் என்று அரசன்பால் பிடித்துக் கொடுத்துக் கொலைசெய்து விட்டான். அச் சங்கமனின் மனைவியாகிய நீலி பெருந் துயருற்றுப் பலவிடத்தும் அலைந்து திரிந்தாள். பதினான்காம்நாள் ஒரு மலைமீது ஏறி "எனக்கு இத் துன்பத்தை இழைத்தோர் மறுபிறப்பில் இத்தகைய துன்பத்தை எய்துவாராக," என்று சாபமிட்டுக் குதித்து உயிர்நீத்தாள். அப் பரதனே கோவலனாகப் பிறந்தான். ஆதலின், நீங்கள் முன்னைத் தீவினையால் இவ் இன்னலை அடைந்தீர்கள். நீ இற்றைக்குப் பதினான்காம் நாள் பகல் கழிந்தபின், நின் கணவனைக்

காண்பாய். அவனுடன் விண்ணுலகம் அடைவாய்,'' என்று சொல்லிக் கண்ணகியைத் தேற்றியது.

**கண்ணகி சேரநாடு செல்லுதல்**

பின்னர்க் கண்ணகி மதுரையினின்று நீங்கி, வையைக் கரைவழியே மேற்கு நோக்கி நடந்தாள். மலை நாடாகிய சேரநாட்டை அடைந்தாள். திருச்செங் குன்று என்னும் மலைமேல் ஏறி, ஒரு வேங்கை மரத்தின் பாங்கர் வந்து நின்றாள். அதற்குள் பதினான்கு நாட் களும் கழிந்தன. அன்று பகல் கழிந்த மாலைப்பொழுதில் கோவலன் தேவவடிவுடன் விமானத்தில் தேவர்கள் சூழ வந்திறங்கினான். அங்கு நின்ற கண்ணகியைத் தன்னுடன் விமானத்தில் ஏற்றிக்கொண்டு தேவர்கள் மலர்மாரி பொழிய விண்ணுலகு அடைந்தான்.

**செங்குட்டுவன் செய்தி உணர்தல்**

இக் காட்சியைக் கண்ணாரக் கண்ட குன்றக் குற வர்கள் 'இவள் நாம் வணங்கத்தக்க நற்றெய்வமாவாள்' என்று குரவையாடி வழிபட்டனர். அவர்கள் தாம் கண்ட இவ் அரிய காட்சியை அரசனுக்கு அறிவிக்க விரும்பினர். மன்னனாகிய செங்குட்டுவன் மலைவளம் காணும் மனத்தனாய்ப் பேரியாற்றங்கரையில் தங்கி யுள்ள செய்தியைத் தெரிந்தனர். மலைபடு பொருள்களை யெல்லாம் மன்னனுக்குக் கையுறையாக எடுத்துக் கொண்டு அவனைக் காண வந்தனர். பேரியாற்றங்கரை மணல்மேட்டில் மகிழ்வுடன் வீற்றிருந்த மன்னனைக் கண்டு அடிபணிந்து வாழ்த்தினர். மலைநாட்டில் தாம் கண்ட வியத்தகு நிகழ்ச்சியை மன்னற்கு விளம்பினர்.

வேட்டுவர் மொழியைக்கேட்ட வேந்தர்பெருமான் வியப்புற்றான். அவன் தேவியாகிய வேண்மாளும்

வியப்படைந்தாள். இளங்கோவடிகளோ எல்லையில லாத பெருவியப்புடன் அமர்ந்திருந்தார். இவர்களுடன் ஆங்கிருந்த நன்னூற் புலவராகிய சாத்தனரோ வியப் பேதுமின்றிச் சிரிப்புடன் இருந்தார். செங்குட்டுவன் முதலான மூவரின் குறிப்பை அறிந்த பெருந்தமிழ்ப் புலவர், மதுரையில் நிகழ்ந்த, கண்ணகி பற்றிய செய்தி களையெல்லாம் ஒன்றுவிடாது எடுத்துரைத்தார். அவளைப்பற்றி விசாரித்தறிந்த வரலாற்றையெல்லாம் விளக்கமாக அவர்கட்குச் சொன்னர்.

**கண்ணகிக்குக் கல்லெடுத்தல்**

சீத்தலைச் சாத்தனர் கூறிய செய்திகளையெல்லாம் கருத்துடன் கேட்ட செங்குட்டுவன் தன் கோப்பெருந் தேவியை விருப்புடன் நோக்கினன். "அரசியே! பாண்டியன் நெடுஞ்செழியனுடன் உயிர்நீத்த அவன் பெருந்தேவி சிறந்தவளா? கணவன் இறந்த பின்னர் அவனது கடும்பழி அகற்றி நம்நாடு புகுந்த கண்ணகி சிறந்தவளா?" என்று வினவினன். அதுகேட்ட வேண்மாள், "கணவனுடன் உயிர்நீத்த காரிகையாகிய பாண்டிமாதேவி வானுலகில் அவனுடன் சீருறுவா ளாக! நம்நாடு நோக்கி வந்த பத்தினித் தெய்வத்தைப் பரசுதல் வேண்டும்," என்று பதிலுரைத்தாள்.

உடனே, செங்குட்டுவன் தனது அமைச்சரை நோக்கினன். அவர்கள், "பத்தினிக் கடவுளின் படிவம் சமைத்தற்குரிய கல்லைப் பொதியத்திலிருந்தேனும் இமயத்திலிருந்தேனும் எடுத்து வருதல் வேண்டும். பொதியக்கல்லைக் காவிரியினும், இமயக்கல்லைக் கங்கை யினும் நீராட்டித் தூய்மை செய்யவேண்டும்," என்று சொல்லி நின்றனர். அதுகேட்ட செங்குட்டுவன்,

"பொதியத்தில் கல்லெடுத்துக் காவிரியில் நீராட்டுதல் சேர மன்னரது வீரத்திற்குப் பொருந்தும் செயலன்று. ஆதலின், இமயத்திலேயே கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டுவோம்" என்று வீரமொழி பகர்ந்தான். செங்குட்டுவன் வீரவுரை கேட்ட படைத்தலைவரும் அதுவே தகுமெனப் பாராட்டினர். அன்றே அனைவரும் அங்கு நின்றும் புறப்பட்டு வஞ்சிமாநகர் அடைந்தனர். உடனே செங்குட்டுவனது வடநாட்டுச் செலவு குறித்து நகரெங்கும் முரசறையப்பட்டது.

**செங்குட்டுவன் வடநாட்டுச் செலவு**

அவ்வமயம் இமயத்திலிருந்து வந்த முனிவர் சிலர் செங்குட்டுவனைக் கண்டு செய்தியொன்று கூறினர். வடநாட்டு மன்னர் பலர் கூடியிருந்த திருமண விருந்தொன்றில் கனகன், விசயன் என்னும் இரு மன்னர் தமிழ் வேந்தரை இகழ்ந்து உரைத்ததாக அம் முனிவர்கள் மொழிந்தனர். "தமிழ் நாட்டை ஆளும் முடி மன்னர்கள் இமய நெற்றியில் வில்லும் புலியும் கயலும் பொறித்த நாளில் எம்போன்ற மன்னர்கள் இல்லை போலும்!" என்று சொல்லி இகழ்ந்த அவ் இழிமொழி, செங்குட்டுவனுக்குப் பெருஞ்சீற்றத்தை உண்டுபண்ணியது. "இவ் இழிவு நமக்கேயன்றிச் சோழ பாண்டியர்க்கும் இகழ்ச்சியை விளைப்பதன்றோ! ஆதலின் இங்ஙனம் இகழ்ந்த ஆரிய மன்னர் முடிமேலேயே பத்தினிப் படிவத்திற்குரிய கல்லை ஏற்றிக் கொணர்வேன்," என்று வஞ்சினம் கூறினான்.

நிமித்திகன் குறித்த நல்வேளையில் செங்குட்டுவன் வாளையும் குடையையும் பெயர்த்து வடதிசைச் செலவிற்கு நாட்செய்தான். நால்வகைப் படைகளும் புடை

சூழத் தனது பட்டவர்த்தனக் களிற்றின்மேல் ஏறி வடநாடு நோக்கிப் புறப்பட்டான். அப்போது வட நாட்டிலுள்ள நூற்றுவர்கன்னர் என்னும் மன்னரால் அனுப்பப்பெற்ற தூதுவர், மன்னனைக் கண்டு, கங்கையைக் கடத்தற்குப் படகுகள் தயாராய் இருக்கும் செய்தியைத் தெரிவித்தனர். அச் செய்தி கேட்டு மகிழ்வுற்ற செங்குட்டுவன் வடநாடு நோக்கி விரைந்து சென்முன். தன் நட்பாளராகிய கன்னர்களால் அமைக்கப்பெற்ற நாவாய்களில் ஏறிக் கங்கையைக் கடந்து தன் படையுடன் வடகரை அடைந்தான். தன் பகைவர் நாடாகிய உத்தரகோசலத்தை நண்ணி, ஆங்குப் பாடிவீடு அமைத்துத் தங்கினுன். சேரன் படையுடன் பாசறையில் தங்கியுள்ள செய்தியைக் கனக விசயர் அறிந்தனர். உத்திரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் ஆகிய மன்னர்களுடன் கனகவிசயர் பெரும்படை சூழப் போருக்கு எதிர்ந்தனர்.

**வடவருடன் கடும்போர்**

வடநாட்டு மன்னர் படையுடன் போருக்கு வருதலைக் கண்ட செங்குட்டுவன் ஆண் சிங்கமொன்று யானைக் கூட்டத்தின் நடுவே பாய்ந்து உழக்கியவாறு போல, அவ் வடவர் படைகளின் நடுவே புகுந்து பாய்ந்து கொன்று குவித்தான். ஒருநாள் பகற்பொழுதிற்குள் அவ் ஆரியப் படையெலாம் சின்ன பின்னமாகச் சிதறுண்டு ஓடின. தமிழ் நாட்டு மன்னரை இகழ்ந்த கனகன் விசயன் என்ற இரு மன்னரும் செங்குட்டுவனுல் சிறைசெய்யப்பட்டனர். தேவாசுரப்போர் பதினெட்டு ஆண்டுகள் நிகழ்ந்தது என்பர். இராம

ராவணப் போர் பதினெட்டுத் திங்கள் நிகழ்ந்தது என்பர். பாரதப் போர் பதினெட்டு நாட்கள் நடந்தது என்பர். செங்குட்டுவன் கனகவிசயருடன் நடத்திய போரோ பதினெட்டு நாழிகையில் முடிந்தது என்று உலகவரெல்லாம் வியந்து உரைக்குமாறு ஒரே பகற் பொழுதில் வென்று வாகைமாலை சூடினான்.

பின்னர்ச் செங்குட்டுவன் தன் படைத்தலைவனுக்கு வில்லவன்கோதை என்பானுடன் படைகளை அனுப்பி இமயத்தினின்றும் பத்தினிக் கடவுளின் படிவத்திற்கு வேண்டிய கல்லைக் கொண்டுவருமாறு செய்தான். அதனைக் கனகவிசயர் முடிமேல் ஏற்றிக் கங்கையாற்றை அடைந்தான். அதனைக் கங்கையில் முறைப்படி நீராட்டித் தென்கரை சேர்ந்தான். ஆங்கு நூற்றுவர் கன்னரால் அமைக்கப்பெற்ற பாடியில் தங்கிப் போரில் வெற்றியுற்ற படையினர்க்கும் படைத்தலைவர்கட்கும் பரிசில்கள் வழங்கிப் பாராட்டினான்.

### மாடலனுக்குக் கொடை

இச் சமயத்தில் கங்கையாடி வந்த மாடலன் என்னும் மறையோன், செங்குட்டுவனைக் கண்டு வாழ்த்தி, '**மாதவி கடற்கரையில் பாடிய கானல்வரிப் பாட்டு, கனகவிசயரின் முடித்தலையை நெரித்தது**' என்று மொழிந்தான். அது கேட்ட செங்குட்டுவன், அம் மறையவனை நோக்கி, "இங்குள்ளார் பலர் அறியாத நகைமொழியை அன்றோ நவின்றாய்; அதன் பொருளை எல்லோரும் அறியச் சொல்லுக," என்றனன். அவனும் காவிரிப்பூம் பட்டினத்தில் கோவலனும் மாதவியும் இந்திரவிழாவின் இறுதி நாளில் கடலாடச் சென்றது முதலாக இது

காறும் நிகழ்ந்த வரலாற்றை எடுத்துக்கூறித் தனது நகை மொழியை விளக்கினான்.

இங்ஙனம் பல்வேறு செய்திகளைத் தெரிந்து வந்துரைத்த அந்தணனாகிய மாடலனுக்குச் சேரர் பெருமான், தன் நிறையாகிய ஐம்பது துலாம் செம் பொன்னைத் தானமாகக் கொடுத்தான். பின்னர்த் தன் பெரும்படையுடன் தென்திசை நோக்கிப் பெயர்ந்தான். வடநாட்டுச் செலவை மேற்கொண்ட முப்பத்திரண்டு திங்களுக்குப் பிறகு வஞ்சிமாநகரத்தை வந்தடைந் தான். வடவரை வென்று வாகை சூடி வரும் சேரர் பெருமானை இளங்கோவடிகளும் அமைச்சர் முதலாயி னோரும் வெற்றி முரசம் முழங்க ஆரவாரத்துடன் வர வேற்றனர். கோப்பெருந் தேவியாகிய வேண்மாள், வெற்றிமாலை புனைந்து வரும் வேந்தர்பெருமானைப் புன்முறுவல் பூத்த இன்முகம் காட்டி அன்புடன் வர வேற்று ஆரத்தழுவி அகமகிழ்ந்தாள்.

**கண்ணகி கல்நாட்டு விழா**

செங்குட்டுவன், கனகவிசயரது முடிமேல் சுமத்திக் கொணர்ந்த கல்லைச் சிற்பிகளைக் கொண்டு கற்பரசி கண்ணகியின் பொற்புறு வடிவமாகச் சமைக்குமாறு பணித்தான். நூலோர் குறித்த நன்னாளில் கண்ணகி யாகிய பத்தினிப் படிவம் நாட்டப்பெற்றது. அவ் விடத்தில் அழகியதொரு கோவிலை அமைத்தான் செங் குட்டுவன். பத்தினித் தெய்வத்திற்குக் குடமுழுக்கு விழா நடத்த நன்னாள் குறிக்கப்பெற்றது. அவ் விழா விற்கு வருமாறு பன்னாட்டு மன்னர்க்கும் செங்குட்டு வன் அழைப்பு அனுப்பினான். கடல்சூழ் இலங்கைக்

கயவாகு மன்னனும் வடநாட்டு மன்னர் பலரும் விழா விற்கு வந்திருந்தனர். கண்ணகி கோயில் குடமுழுக்கு விழாச் சிறப்புற நடைபெற்றது.

இஃது இங்ஙனமாகக், கோவலன் கொலையுண்ட செய்தியை மாடலனால் அறிந்த மாசாத்துவான் துறவு பூண்டான். அவனது பெருமனைக் கிழத்தி உயிர் துறந்தாள். கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கனும் துறவு பூண்டான். அவள் தாய் உயிர்நீத்தாள். மாதவியும் அவள் மகள் மணிமேகலையும் துறவு பூண்டனர். இவற்றையெல்லாம் கண்டு எல்லையற்ற துயருற்ற கண்ணகியின் செவிலித்தாயும், அடித்தோழியும், பார்ப்பனத் தோழியாகிய தேவந்தியும் ஆகிய மூவரும் கண்ணகியைக் காண விரும்பி மதுரைக்கு வந்தனர். அங்கு அவளைக் காணாது, அவளது சினத்தால் மதுரை செந்தீப் பற்றி எரிந்த செய்தி அறிந்தனர். கண்ணகியை அடைக்கலமாகப் பெற்ற மாதரி மகள் ஐயை என் பாளைக் கண்டனர். அடைக்கலப் பொருளை காக்க முடியாமல் உயிர் நீக்கிய மாதரியின் மறைவைத் தெரிந்து வருந்தினர். அவ் ஐயையை உடன் அழைத் துக்கொண்டு வையைக் கரைவழியே மலைநாடு நோக்கி நடந்தனர். திருச்செங்குன்று மலைமீது ஏறிக் கண்ணகி யின் கோயிலைக் கண்டனர்.

ஆங்குக் கண்ணகிக்கு விழா நடத்திச் சிறப்புற இருந்த செங்குட்டுவனை அம் மூவரும் கண்ணுற்றனர். அவனுக்குத் தங்களைப்பற்றி அறிவித்தனர். பின்னர்ப் பத்தினியை நோக்கி, அவளது பெற்றோரும் உற்றோரும் உற்றநிலையை எடுத்துரைத்தனர். மாதரி மகள் ஐயை யைக் காட்டி அழுது அரற்றினர். அவ் வேளையில்

## ரு. கண்ணகியின் காவியக் கோவில்

சேரர் பெருமாளுகிய செங்குட்டுவன் வஞ்சிமா நகரில் பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குக் கற் கோவில் எடுத்துக் காவலர் பலர் சூழ வழிபட்டான். அவன் தம்பியாராகிய இளங்கோவடிகளோ உல கெலாம் நிலவி ஒளிவீசும் காவியக்கோவிலை அமைக்க உளங்கொண்டார். கண்ணகி கோவில் குடமுழுக்கு விழாச் சிறப்புற நடைபெற்று முடிவுற்ற பின்னர், ஒரு நாள் தமது இருக்கையாகிய குணவாயில் கோட்டத்தில் நண்பராகிய சாத்தனருடன் உரையாடிக் கொண்டிருந் தார்.

அடிகள் தமது உரையாடலுக்கு இடையே கண்ண கிக்குக் காவியக் கோவில் அமைப்பது பற்றிய தம் கருத் தைப் புலப்படுத்திஞர். "கண்ணகியின் வரலாறு ஒன் பான் சுவைகளும் பண்புற அமைந்த உயர்வுடைய தன்றே! உலகிற்குச் சிறந்த உண்மைகளைப் புலப் படுத்தும் ஒப்பிலாச் சிறப்புடையதன்றே! கற்பில் தவருத காரிகை, தெய்வமெனக் கொண்டாடும் திரு வுடையள் என்ற உண்மையை உலகில் நிலை நாட்டிய தன்றே! அறநெறி பிறந்த அரசரை அறக்கடவுளே ஒறுக்கும் என்பதை வலியுறுத்தியதன்றே! ஒருவன் செய்த வினை, அவனை விடாது வந்து பற்றிப் பயனூட் டும் என்பதை நன்கு எடுத்துக் காட்டியதன்றே! இத் தகைய சிறந்த வரலாற்றை நாமெல்லாம் கண்ணுரக் காணும் வாய்ப்பைப் பெற்றேம். வருங்காலத் தமிழகம் இதனை அறிதல் வேண்டுமன்றே! இந்த மெய்ம்மை வரலாற்றை வையம் முழுதும் பரப்ப வேண்டிய பொறுப்பு நம்மைச் சார்ந்ததாகும். இது பற்றிய நும் கருத்து யாது?" என்று வினவிஞர் இளங்கோ.

அடிகளாரின் ஆர்வமிக்க உரையைக் கேட்ட சாத்தனார், "அடிகளே! கண்ணகி சோழ நாட்டில் பிறந்தாள். பாண்டிய நாட்டில் தன் கணவனை இழந்து கைம்மைக் கோலம் தாங்கினாள். சேரநாட்டில் தெய்வமாகச் சிறந்து விளங்கினாள். அவளது வாழ்வின் முதலும் நடுவும் இறுதியும் மூவேந்தர்களுடைய தலைநகரங்களிலேயே நிகழ்ந்தன. ஆதலின் முடிகெழு வேந்தர் மூவருடைய சிறப்புக்களும் அவளுடைய வரலாற்றில் தக்க இடம் பெறுதல் வேண்டும். அரசியற் செய்திகளை யெல்லாம் பிறப்பிலேயே உணர்ந்த பெருமை நுமக்கே உள்ளது. ஆகையால் நீவிரே அக் காவியத்தை அமைத்தற்கு ஏற்ற அருந்திறல் படைத்தவர். யான் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் காவியமாக்குவேன்," என்று மறுமொழி பகர்ந்தார்.

நல்லிசைப் புலவராகிய சாத்தனாரின் உள்ளத்தை அறிந்து மகிழ்ந்த அடிகளார், மேலும் கண்ணகி பற்றிய செய்திகள் பலவற்றை அவர் வாயிலாக அறிந்தார். பாண்டியன் நெடுஞ்செழியனது ஆட்சித் திறனையும் அவன் காலத்தில் மதுரைமாநகரின் மாட்சி நலனையும் தெளிவுறக் கேட்டுத் தெரிந்தார். அக் காலத்திய சோழப் பேரரசின் சிறப்பையும் தலைநகராகிய புகார் நகரத்தின் பொற்பையும் தக்கார் வாயிலாகக் கேட்டுணர்ந்தார். தம் தமையனாகிய செங்குட்டுவன்பால் வடநாட்டுச் செலவைப்பற்றிய குறிப்புக்களை யெல்லாம் தொகுத்து வாங்கினார்.

இங்ஙனம் கண்ணகியின் காவியம் அமைத்தற்கு வேண்டிய செய்திகளை யெல்லாம் இளங்கோ விரைவில்

ஒருங்கு திரட்டினர். இடையிடையே தமிழாசிரிய ராகிய சீத்தலைச் சாத்தனாரின் சிறந்த துணையையும் பயன்படுத்திக்கொண்டார். நூலைப் பாடத் தொடங்கி னர். நூலுக்குப் பெயர்சூட்ட நுண்ணிதாக எண்ணி ஆராய்ந்தார். காவியத் தலைவர்களில் ஒருவர் பெயரை நூலின் பெயராக அமைப்பதில் சிறப்பில்லை யென்று கருதினர். கண்ணகியின் காற்சிலம்பன்றே கதையின் புதை பொருளாகக் காட்சியளிக்கிறது என்பதை நுட்பமாகக் கண்டார். சிலம்பால் விளைந்த கதை யாதலின் சிலப்பதிகாரம் என்ற பெயர் சூட்டுவேன் என்று குறிப்பிட்டார். சில திங்களில் சிலப்பதிகாரக் காவியத்தை உருவாக்கி விட்டார்.

சீத்தலைச் சாத்தனர் தலைமையில் செந்தமிழ்ப் புலவர் பேரவை வஞ்சிமாநகரில் கூடியது. இளங்கோ வடிகள் தாம் அமைத்த காவியத்தை அப் பேரவையில் பண்ணமையப் பாடிக் காட்டி அரங்கேற்றினர். செஞ் சொற் காவியமாகிய சிலப்பதிகாரம் எல்லோருடைய நெஞ்சையும் அள்ளுவதாயிற்று. சேரர் கோமானகிய செங்குட்டுவன் தம்பியாரைச் சிந்தை மகிழ்ந்து பாராட்டினன். சிலப்பதிகார அரங்கேற்ற விழா விற்குத் தலைமை பூண்ட சாத்தனர், சேர வேந்தனையும் இளங்கோவடிகளையும் உளங்குளிர வாழ்த்தினர். "சேரர் பெருமான் கண்ணகிக்குக் கற்கோவில் அமைத் தருளினன்; இளங்கோவோ அன்னவட்கு என்றும் அழியாத காவியக் கோவில் அமைத்தருளினர்; இரு பெருங்கோவில்களும் என்றும் நின்று நிலவுவனவாக!" என்று வாயார வாழ்த்தினர் சீத்தலைச் சாத்தனர்.

## கூ. இளங்கோவின் சமயம்

### சமயப் பொதுநோக்கு

தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே மக்கள் பல்வேறு சமயங்களைச் சார்ந்து வாழ்ந்தனர். சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலாய பல சமயத்தவரும் பூசலின்றி நேசமுடன் வாழ்ந்தனர். தமிழகத்தை ஆண்டுவந்த முடிமன்னர்களும் மக்கள் விரும்பும் சமய வாழ்வுக்குத் தடை செய்யாது தக்க வகையில் துணைபுரிந்தே வந்தனர். அதனால், மக்கள் தத்தம் சமயக் கொள்கைகளை உரிமையுடன் பெருமையாகப் பேசிவந்தனர். நாட்டில் சமயப்பூசல் சிறிதும் தலைகாட்டியதில்லை. இங்ஙனம் சமயத்தால் வேறுபட்ட மக்கள் மொழியால் ஒன்றுபட்டு, எல்லோரும் தமிழர் என்ற இனிய உணர்ச்சியுடன் வாழ்ந்தனர்.

இளங்கோவடிகள் தாம் அருளிய பெருங்காவியமாகிய சிலப்பதிகாரத்தில் பல சமயங்களின் உண்மைகளை அழகுற உரைக்கிறார். அவ்வச் சமயக் கடவுளரின் சிறப்பையெல்லாம் அவ்வச் சமயத்தவரே கண்டு வியப்புறுமாறு குறிப்பிடுகின்றார். அவர் எச் சமயத்தைப் பற்றி இயம்பத் தொடங்கினாலும் அச் சமயத்தில் ஆழ்ந்த பற்றுப்பூண்ட அன்பராகவே நின்று பேசுகின்றார். ஆதலால் அவர் மேற்கொண்ட சமயம் இதுதான் என்று ஒன்றை அறுதியிட முடியாத நிலையில் இருக்கிறது. சமயக் கருத்துக்களை நூலில் புகுத்த விரும்பும் புலவர்கட்கு இளங்கோவடிகள் ஏற்ற வழிகாட்டியாய் விளங்குகின்றார். அவரது வழியைப் பின்பற்றாத புலவர்கள் தமது முயற்சியில் தோல்வியே கண்டனர்.

பெரும்புலவர்கள் பலர் தாம் விரும்பும் சமயக் கொள்கைகளைத் தமது நூலில் பலவிடத்தும் விரித்துரைப்பர். அவர்கள் இயற்றும் நூல் தனிப்பட்ட சமயத்தைப் பற்றியதாக இருந்தால் அங்ஙனம் விரித்துரைப்பது குற்றமாகாது. உலகினர் அனைவர்க்கும் பயன்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் ஆக்கப்பெறும் நூல், குறிப்பிட்ட ஒரு சமய வயப்பட்டு விடுமாயின் ஆசிரியனது நோக்கம் நிறைவேறாது; மணிமேகலை, சிந்தாமணி போன்ற காவியங்கள், தாம் விளக்கப் புகுந்த சமய உண்மைகளால் தனிப்பட்ட சமய நூல்களாகவே ஆய்விட்டன. சிலப்பதிகாரம் ஒன்றே, குறிப்பிட்ட ஒரு சமயத்தைச் சார்ந்தது என்று கூறமுடியாத வகையில் தன்னேர் இல்லாத தமிழ்க் காவியமாக விளங்குகிறது.

**இளங்கோ சமணர்**

'மதுரைக்கு வழி வாயிலே' என்ற பழமொழி வழங்கும் தமிழ்நாட்டில் புகாரைவிட்டுப் புறப்பட்ட கோவலன், கண்ணகி ஆகிய இருவர்க்கும் மதுரைக்கு வழிகாட்ட ஒருவர் தேவையில்லை. என்றாலும் கவுந்தியடிகள் என்னும் சமணப் பெண் துறவி அவர்களுடன் வழித்துணையாக வந்துகொண்டிருக்கிறாள். அவள் வாயிலாகவே சமண சமய உண்மைகள் பலவற்றை இளங்கோவடிகள் அறிவுறுத்துகின்றார். இங்ஙனம் புதியதொரு பாத்திரத்தைப் படைத்துக்கொண்டு, காவியத்தின் சுவை குன்றாத வண்ணம் சமயக் கருத்துக்களைப் புகுத்தி உரைக்கும் புலமைமிக்க அடிகளார் திறமை பெரிதும் போற்றற்கு உரியதாகும். இத் துறையில் முழுவெற்றி கண்டவர் இளங்கோவடிகள் ஒருவரே என்று துணிந்து உரைக்கலாம்.

சமண் சமயக் கருத்துக்களைக் காவியத்தில் புகுத்து வதற்கென்றே கவுந்தியடிகள் என்னும் பாத்திரத்தைப் படைத்துக்கொண்ட இளங்கோவடிகள் சமண சமயத்தவரே என்பர் சிலர். அவர் இளமையில் துறவு பூண்டு வஞ்சிமா நகரின் கீழ்த்திசை அமைந்த குணவாயில் கோட்டத்தில் தங்கினார். கோட்டம் என்பது அருகன் கோயிலைக் குறிக்கும். குணவாயில் என்னும் சிற்றூரில் விளங்கிய அருகன் கோயிலில் அமர்ந்திருந்தார் என்று அவரே பதிகத்தில் குறித்தலால் அவர் சமணரே என்பர். மேலும் அடிகள் என்ற சொல் சமணத் துறவிகளைக் குறிக்குமாதலின் இளங்கோவடிகள் சமணரே என்பதில் யாதும் ஐயமில்லை என்பார் ஒரு சாரார்.

**இளங்கோ சைவர்**

இளங்கோவடிகளின் தமையனாகிய சேரன்செங்குட்டுவன் சிவனடி மறவாத சிந்தையினன். இவர்களுடைய பெற்றோரும் சிவனை வழிபடும் செம்மையுடையோர். இமயத்தினின்றும் செங்குட்டுவனைக் காணவந்த முனிவர் சிலர், "செஞ்சடை வானவன் அருளினில் விளங்க, வஞ்சித் தோன்றிய வானவ!" என்று விளித்து வடபுலத்து நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றை அவனுக்கு அறிவித்தனர். மாடலன் என்னும் மறையவன், செங்குட்டுவனை, "ஆனேறு ஊர்ந்தோன் அருளினில் தோன்றி, மாநிலம் விளக்கிய மன்னவன்," என்று குறிப்பிடுகின்றான். 'செஞ்சடை வானவன்' என்றும், 'ஆனேறு ஊர்ந்தோன்' என்றும் குறிக்கப்பெறும் கடவுள் சிவபிரானே அன்றோ! இங்ஙனம் சிவபிரான் திருவருளால் பிறந்தவன் செங்குட்டுவன் என்று இளங்கோவே தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல்லெடுத்தற் பொருட்டு இமயம் நோக்கிப் புறப்பட்டபொழுது சிவ பிரான் சேவடி பணிந்து, வஞ்சிமாலை புனைந்து தனது பட்டவர்த்தனக் களிற்றின்மீது ஏறி அமர்ந்தான். அப் போது அவ் வஞ்சிமா நகரிலுள்ள ஆடகமாடம் என் னும் கோவிலின்கண் அறிதுயில் அமர்ந்த திருமாலின் பிரசாதத்தைச் சிலர் கொண்டுவந்து தந்தனர். "தெண் ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள், வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின், ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத் தாங்கினன்" என்று இளங்கோவே குறிப் பிடுகின்றார். ஆதலின் அவன் தம்பியாகத் தோன்றிய இளங்கோ சைவரே என்பர் சிலர். மேலும் சிவபெரு மானே முழுமுதற்கடவுள் என்பதை வலியுறுத்தப், 'பிறவா யாக்கைப் பெரியோன்' எனவும், 'உலகு பொதி உருவத் துயர்ந்தோன்' எனவும் சிவனைச் சிறப்புறக் குறிப்பிடுகின்றார். இத்தகைய பல காரணங்களால் இளங்கோ சைவ சமயத்தவரே என்பர் வேறு சிலர்.

திருச்செங்குன்று மலைமேல் வேங்கை மரத்தின் நிழலில் நின்ற கண்ணகியைக் கோவலன் தேவர்கள் சூழ விமானத்தில் ஏற்றி அழைத்துச் சென்றான். அக் காட்சியைக் கண்ட மலைவாணர், கண்ணகியைத் தம் குலதெய்வமாகக் கருதி அவள் பொருட்டுக் குரவைக் கூத்து நிகழ்த்தினர். அப்போது மலைநாட்டுத் தெய்வ மாகிய குன்றுதோறாடும் குமரவேளைப் பாராட்டிப் பண் ணுடன் பாடுகின்றனர். அங்ஙனம் குன்றக்குறவர் பாடுவனவாக உள்ள பாக்கள் எல்லாம் முருகன் அருள் விளையாட்டுக்களை விளக்கும் பெருமையுடையனவாகும்.

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே

**பாரிநும் பௌவத்தின் உள்புக்குப் பண்டோருநாள்,**
**சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே."**

இதைப்போன்ற பல பாக்கள் குறிஞ்சித் தெய்வமாகிய குமரனைக் குறித்து உளமுருகிக் குறவர் பாடுவதாக அமைத்துள்ளார் இளங்கோவடிகள்.

## இளங்கோ வைணவர்

மதுரை மாநகரில் சிலம்பு விற்கச்சென்ற கோவலன் கொலையுண்டதும் கண்ணகி தங்கியிருந்த ஆயர் சேரியில் பலவகை உற்பாதங்கள் நிகழ்ந்தன. அவற்றைக் கண்ட மாதரி என்னும் ஆய்ச்சியர் தலைவி, தீங்கு நேராவண்ணம் திருமாலைப் பரவிக் குரவையாடுதற்கு ஏற்பாடு செய்தாள். ஆயர் மகளிர் எழுவர் கைகோத்து நின்று, கண்ணபிரானைப் பண்ணமையப் பாடியாடிப் பரவி வழிபட்டனர். அங்ஙனம் திருமாலைப் பரவுங்கால் பாடும் பாக்களாகப் பல அரிய பாடல்களை அமைத்துள்ளார் இளங்கோவடிகள். அவையெல்லாம் திருமாலிடத்துப் பத்தி பூண்ட வைணவப் பேரன்பர்கள் உள்ளத்தில் ஊறியெழும் சீரிய வாக்குகளாகவே திகழ்கின்றன.

**'சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே**
**திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே,'**
**'கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே**
**கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே,'**
**'படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது**
**நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே**
**நாராயணா வென்னா நாவென்ன நாவே.'**

என்பன போன்ற பாடல் அடிகள், திருமாலிடத்துப் பெரும்பற்றுக்கொண்ட அடியார்கள் வாக்குகளைப் போன்று அமைந்திருத்தலைக் காணலாம்.

மதுரையை நோக்கி வழிநடந்த கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் இடையே

சீரங்கத்தை அடைந்தனர். ஆங்கோர் சோலைக்கண் சமண் தருமம் சாற்றும் சாரணரைக் கண்டனர். அத் தரும சாரணரை மூவரும் அடிபணிந்து நின்றனர் அவர்கள் அருகன் பெருமையை வியந்து பேசினர்.

'அறிவன் அறவோன் அறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
.........................................
பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன்'

என்று பலவாறு பாராட்டிப் பகர்ந்தனர். அச் சாரணர் வாய்மொழி கேட்ட கவுந்தியடிகள் கைகளைத் தலை மேல் குவித்து அருகனை வழிபட்டாள்.

'அருகர் அறவன் அறிவோற் கல்லதென்
இருகையும் கூடி ஒருவழிக் குவியா,
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
தலைமிசை உச்சி தானணிப் பொறாஅது.'

என்று பாடிப் பரவசமுற்றாள். இங்ஙனம் அருகனைக் குறிக்குமிடத்து இளங்கோவடிகள் சமணராகவே நின்று தனிமொழி பேசுகின்றார்.

இவற்றை நோக்குங்கால் இளங்கோவடிகளைத் தனிப்பட்ட ஒரு சமயத்தவர் என்று துணிந்து கூற எவராலும் இயலாததாகவே இருக்கின்றது. எச்சமய உண்மைகளை எடுத்தியம்ப நேர்ந்தாலும், தாமும் அச் சமயத்தைச் சார்ந்தவராகவே நின்று ஆய்ந்துணர்ந்து பேசும் அடிகளாரின் திறம் வியப்பினும் வியப்பாகும். அவருடைய வாய்மொழி கொண்டு, அவரை எச்சமயத்தையும் சார்ந்தவராக ஆக்குதல் சாலாது. அவரைச் சமயப் பொதுநோக்குடைய சான்றோர் என்று கொள்ளுதலே சாலப் பொருத்தமாகும்.

# ஏ. சிலப்பதிகாரச் சிறப்பு

## முதல்தர இலக்கியம்

ஆன்றோர் நூல்களை மூன்று வகையாகப் பகுப்பர். சிலமணி நேரங்களே கற்றற்குரிய நூல்கள் ஒரு வகை; ஒருசில கால அளவே கற்றற்குரிய நூல்கள் மற்றொரு வகை; வாழ்நாள் முழுதும் ஓதியோதி உணர்ந்து இன்புறத்தக்க நூல்கள் இன்னொரு வகை. இம் மூவகை நூல்களுள் இறுதியில் குறிக்கப்பெற்ற வகையைச் சார்ந்த நூல்களே உறுதிபயக்கும் உயர்வுடையனவாகும். அவைகளையே 'நவில்தொறும் நயந்தரும் நன்னூல்கள்' என்று பாராட்டலாம். 'ஆயுந் தொறுந் தொறும் இன்பம் தரும்தமிழ்,' 'தேருந்தொறும் இனிதாம் தமிழ்' என்ற பாராட்டுக்குரிய நூல்கள் அத்தகையனவே. அவைகளே முதல்தரமான இலக்கியங்கள்.

தமிழ்த்தாயின் திருவடிக்கு அணிசெய்யும் மணிச் சிலம்பாகிய சிலப்பதிகாரம் வாழ்நாள் முழுவதும் கற்று இன்புறத்தக்க கன்னித் தமிழ்க் காவியமாகும். சொற்சுவையும் பொருட்சுவையும் செறிந்து விளங்கும் செந்தமிழ்க் கருவூலமாகும். கற்குந்தோறும் மீண்டும் கற்க வேண்டும் என்ற விருப்பினை ஊட்டும் சிறப்புடையதாகும். ஓதும்போதெல்லாம் உள்ளத்தில் புதுப்புதுச் சுவையை ஊட்டி நிற்பதாகும். இதனாலேயே 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாரதி பாராட்டினார்.

## பாயிரச் சிறப்பும் காவிய அமைப்பும்

ஒரு நூலை இயற்றும் புலவன், தனது நூலைக் கற்பவர் கற்றற்குச் செலவிடும் காலத்தை வீணே கழியுமாறு செய்யான். அதற்காக அவர் செலவிடும் காலம் அவரது வாழ்நாளின் ஒரு பகுதியாதலின், அது தக்க

பயனைத் தருதல் வேண்டும் என்ற குறிக்கோள் உடையவனாகவே நூலைச் சிறந்த முறையில் அமைப்பான். அவனது நூலைக் கற்றலால் விளையும் பயனையும், தான் நூல் இயற்றியதன் நோக்கத்தையும் தொடக்கத்திலேயே சுட்டிக் காட்டுவான். இதற்காகவே பாயிரம் என்ற பகுதியை நூலின் முதற்கண் அமைப்பான். அப்பாயிரத்துள் நூற்பயன் என்பது இன்றியமையாது அமையவேண்டிய ஓர் உறுப்பாகும். 'ஆயிரம் முகத்தான் அகன்ற தாயினும், பாயிரம் இல்லது பனுவலன்றே' என்று இலக்கணம் கூறும்.

இவ் உண்மையை இனிது உணர்ந்த இளங்கோவடிகள் நூலின் தொடக்கத்திலேயே, தாம் அந்நூல் செய்வதன் நோக்கத்தை விளக்குகின்றார்: 'அரசுமுறை தவறிய மன்னர்க்கு அறக்கடவுளே எமனாகும்; புகழ் அமைந்த பத்தினியைப் புவியினரே அன்றித் தேவரும் முனிவரும் போற்றுவர்; ஒருவன் செய்த வினை, அவனைவிடாது தொடர்ந்து வந்து பயனூட்டும்; இம் மூன்று உண்மைகளைத் திண்மையுற நிலைநாட்டும் நோக்குடனேயே நூலை ஆக்குவேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

" அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்.

என்பது இளங்கோவடிகளின் இனிய வாக்காகும்.

இங்ஙனம் தமது காவியத்திற்குப் பாவிகம் எனப்படும் உள்ளுறையை அமைத்துக்கொண்ட அடிகளார்

அதற்குப் பெயர் அமைத்த திறம் பெருவியப்பை அளிப்பதாகும். வரலாற்றுடன் பின்னிக்கிடக்கும் மூன்று பேருண்மைகளும் கண்ணகியின் காற்சிலம்பை எண்ணிய அளவில் நுண்ணிதில் புலனாகும். அக் கற்பரசியின் பொற்புடைய சிலம்பே கதைக்கு அடிப் படையாய் நிற்பது என்பதை நீளநினைந்து, சிலப்பதி காரம் என்று பெயர் நிறுவிய திறம் அடிகளாரின் ஆழ்ந்த புலமையைப் புலப்படுத்தும்.

மேலும், அவர் வலியுறுத்தும் மூன்று நீதிகளுள் நடுநின்ற பத்தினிச் சிறப்பே இலக்கியத்தின் உயிர்நாடி என்பதையும் அமைப்பு முறையால் விளக்கியருளினார். அதனாலேயே பதிகத்தை அடுத்து அமைத்த உரைபெறு கட்டுரையில் நாடெங்கும் பத்தினிக்குக் கோயில் அமைத்து விழா எடுத்த சிறப்பினைக் குறிப்பிட்டார். இங்ஙனம் இவர் தம் காவியத்திற்கு உளங்கவரும் வகை யில் பெயர் சூட்டி, நூற்பயனும் சொல்லிய திறம், வேறு எந்த நூலுக்கும் அமையாத தனிச்சிறப்பாகும்.

கண்ணகியின் கற்புமாண்பை விளக்கும் இக் காவியத்தில் அடிகளார் முதற்கண் தனிப்பட்ட எச் சமயக் கடவுளர்க்கும் வாழ்த்துக் கூறவில்லை. உலகி னர்க்கு இன்றியமையாது வேண்டப்படும் திங்களுக்கும் வெங்கதிரோனுக்குமே மங்கலவாழ்த்துக் கூறுகின்றார். காவியத் தலைவியின் வரலாறு, தமிழ்நாட்டின் மூன்று பகுதிகளிலும் நடைபெற்றதாகலின் அதனை முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டார். அவளது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள் மூவேந்தருடைய தலைநகரங்களி லேயே நடைபெற்றனவாதலின் அப் பெரும் பிரிவுகட் குப் புகார், மதுரை, வஞ்சி என்று பெயர் சூட்டினார்.

நூலின் முதற்பிரிவாகிய புகார்க்காண்டம் கண்ணகியின் மனையற வாழ்வைக் குறிப்பதாகும். இரண்டாவது பிரிவாகிய மதுரைக்காண்டம் அவள் கணவனை இழந்து கைம்மைக்கோலம் தாங்கிய அவல நிலையை விளக்குவதாகும். மூன்றாவது பிரிவாகிய வஞ்சிக்காண்டம் அவள் தெய்வமாகத் திகழ்ந்த சிறப்பைக் குறிப்பதாகும். புகார் என்று பெயர்பெற்ற காவிரிப்பூம்பட்டினத்தில் அவள் கோவலனை மணம்புரிந்து வாழ்வைத் தொடங்கினாள். மதுரைமாநகரில் தன் கணவனை இழந்தாள். வஞ்சிமாநகரில் கோவில் எடுத்துக்கொண்டாடும் தெய்வமானாள். இத்தகைய பத்தினித்தெய்வத்தின் வரலாற்றில் தமிழ்நாட்டின் முடிமன்னர் மூவரும் தக்க இடம் பெறுகின்றனர். புகார்க் காண்டத்தில் சோழன் பெருமை சொல்லப்படுகிறது. மதுரைக் காண்டத்தில் பாண்டியன் பெருமை பகரப்படுகிறது. வஞ்சிக்காண்டத்தில் சேரன் பெருமை கூறப்படுகிறது.

ஆசிரியர் இளங்கோவடிகள் தாம் சேரமரபினைச் சேர்ந்தவராயினும் சிறந்த புலமைநலம் கனிந்த தூய துறவியாராதலின் நடுவுநிலை பிறழாது மன்னர்களைப் பாராட்டுகின்றார். தமிழர்க்கே உரிய உயர்ந்த பண்பாடுகளை உரைக்கின்றார். பழந்தமிழர் மேற்கொண்டு ஒழுகிய சமயங்களைப் பற்றியெல்லாம் விருப்பு வெறுப்பின்றிக் குறிப்பிடுகின்றார். எச்சமயத்தவரும் ஏத்தி வணங்கும் பத்தினித் தெய்வத்தின் வரலாறு என்பதை நன்கு உணர்ந்து, தமது காவியத்தைப் பண்புற அமைத்துள்ளார். இவைபோன்ற பல சிறப்புக்களைக் கொண்ட சிலப்பதிகாரம் இணையற்ற தமிழ்க்காவியமாகும்.

# உ. சாத்தனர்

## க. பெயர்க்காரணம்

தமிழின் முதற்பெருங்காவியமாகிய சிலப்பதிகாரத்துடன் தொடர்புடைய மற்ருெரு பெருங்காவியம் மணிமேகலையாகும். அதனை இயற்றிய கவிஞர் **சாத்தனர்** ஆவர். இவரைச் சீத்தலைச் சாத்தனூர் என்றும், மதுரைக் கூலவாணிகன் சாத்தனுர் என்றும், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் என்றும் மூன்று விதமாகக் குறிப்பர்.

சாத்தன் என்ற பெயர், ஐயனர் பெயர் என்பர் ஒரு சாரார். புத்தர் பெருமானுக்குரிய பெயர்களுள் ஒன்று சக்ஸ்தன் என்பது. அதன் திரிபே சாத்தன் என்று வழங்கலாயிற்று என்பர் மற்ருெரு சாரார். சாத்து என்ற சொல், வாணிகத்தைக் குறிக்கும். வாணிகத்தால் வளம் பெற்ற ஓர் ஊரைச் சாத்தூர் என்று வழங்கக் காண்கிருேம். சிலப்பதிகாரக் காவியத் தலைவனுகிய கோவலன் தந்தை, காவிரிப்பூம்பட்டினத்துப் பெரு வணிகன் ஆவான். அவன் மாசாத்துவான் என்று வழங்கப் பெற்ருன். ஆதலின், மதுரை மாநகரில் பெரு வணிகராக விளங்கிய மணிமேகலை ஆசிரியர் சாத்தனுர் என்று பெயர்பெற்றிருக்கலாம்.

இவர் சோழநாட்டில் உள்ள சீத்தலை என்ற ஊரில் தோன்றியவர். சீத்தலை என்னும் ஊர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெருமளூர்த் தாலுக்காவில் உள்ளது. பெருஞ்சாத்தன், பேரிசாத்தன் முதலிய புலவர்களின் வேறுபடுத்த இவர் பெயரை ஊர்ப்பெய

ருடன் சேர்த்துச் சீத்தலைச் சாத்தனார் என்று உரைப்பாராயினர். சீத்தலை என்பது ஊர்ப்பெயர் என்று உணராத ஒரு சிலர் 'சீழ்ப்பிடித்த தலை' என்று பொருள் கொண்டு, அதற்கேற்பக் கதையொன்றும் கற்பனை செய்து அமைத்து வைத்தனர்.

கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராக விளங்கிய சாத்தனார் சொற்குற்றம் பொருட்குற்றம் உள்ள பாக்களை நோக்கும் பொழுதும் கேட்கும் பொழுதும் உள்ளம் வருந்துவராம். அப்போது தம் கையில்இருக்கும் எழுத்தாணியைக் கொண்டு, தம் தலையில் குத்திக் கொள்வாராம். அதனால் தலையில் புண் ஏற்பட்டு எப்போதும் சீழ் வடிந்து கொண்டிருக்குமாம். அங்ஙனம் சீழ் வடியும் தலையினராய் விளங்கிய புலவரைச் சீத்தலைச் சாத்தனார் என்று குறித்தனர் என்பர்.

சங்கத்துச் சான்றோருள் ஒருவராய்த் திகழ்ந்த மருத்துவன் தாமோதரனார் என்னும் புலவர், சாத்தனாரின் ஆருயிர் நண்பராய் விளங்கிவந்தார். அவர் சாத்தனாரைப் பற்றிப் பாடிய பாடல் ஒன்று திருவள்ளுவமாலையில் உள்ளது. அதனை ஆதாரமாக வைத்துக் கொண்டே 'சீழ்த் தலையர் சாத்தனார்' என்ற கதை கட்டப்பட்டது. அப் பாடலே மற்றோர் உண்மையைக் கற்றோர்க்குப் புலப்படுத்துவதாகும். தமிழ்ச் சங்கம் தழைத்தோங்கிய பண்டை நாளில் தமிழகத்தில் தோன்றும் நூல்கள் எல்லாம் சங்கத்தில் அரங்கேறிய பின்னரே நாட்டில் உலவலாம். நாட்டிற்குப்பயன் தராதனவாயும் கேட்டை விளைப்பனவாயும் அமைந்த நூல்களைச் சங்கத்தில் அரங்கேற்றவே இடங்கொடார். அங்ஙனம் அரங்கேற வரும் நூல்களின் தகுதியைக் கண்டு

கூறும் தண்டமிழாசானாகத் தலைசிறந்து விளங்கியவர் சாத்தனார் என்று துணியலாம்.

## உ. திருக்குறட் பற்று

தமிழ்ச்சங்கத்திற்கு வந்த நூல்களை எல்லாம் ஆராய்ந்து வெளியிடும் அரும்பணியை மேற்கொண்டிருந்த பெரும்புலவ ராகிய சாத்தனாருக்குத் தீராத தலைவலி நோய் ஏற்பட்டது. அதனை அறிந்த மருத்துவன் தாமோதரனார் என்னும் தமிழ்ப்புலவர், சாத்தனாரின் நோயைப் போக்குதற்குத் தக்க மருந்தொன்றைத் தயாரித்தார். அதனைச் சாத்தனாரிடம் கொடுத்து மோந்து பார்க்குமாறு வேண்டினார். தாமோதரனார் தந்த மருந்தால் சாத்தனாரின் தலைவலிநோய் தணியவில்லை. உலக முழுதும் கொண்டாடும் உயரிய நூலொன்று தமிழில் தோன்றவில்லையே என்ற வருத்தமே அவரது தலைவலிநோயை நாளுக்குநாள் பெருக்கி வந்தது. ஆதலின் தெய்வப்புலவர் ஆகிய திருவள்ளுவர் அருளிய திருக்குறள் நூலைக் கண்ட அன்றே சாத்தனாரின் தலைவலி தணிந்து நீங்கலாயிற்று. இதனைக் கண்ணுற்ற மருத்துவன் தாமோதரனார்,

> **‘சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்**
> **மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி**
> **மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்**
> **தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.’**

என்று பாடினார்.

இப் பாட்டால் சாத்தனாரைப் பற்றிய மற்றொரு செய்தியும் புலனாவதாகும். உலகப் பொதுமறையாகிய திருக்குறளிடத்து மிகுந்த பற்றுக்கொண்டவர் சாத்த

ஞர். அதனைத் தாம் பாடிய காவியமாகிய மணிமேகலை யில் நன்கு காட்டுகின்றார்.

'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்.'

என்று, திருக்குறள் ஒன்றை எடுத்தாள்வதுடன் திரு வள்ளுவரைப் பொய்யில் புலவன் என்றும், அவரது உரையைப் பொருளுரை என்றும் போற்றுகின்றார். இவ் அடிகளால் சாத்தனாரின் திருக்குறட் புலமையும் ஆர்வமும், அவர் திருவள்ளுவரிடத்துக் கொண்ட பெருமதிப்பும் புலனாகும்.

## ௩. ஆசிரியர் வரலாறு

**கூல வாணிகம்**

இளமையில் தமிழ்ப்புலமை பெற்ற சீத்தலைச் சாத் தனார் வணிகமரபின ராதலின் தமது வாணிகத்தை வளம்பெற நடத்தவும் தமிழ்நூல்களை ஆராயவும் தக்க இடம் மதுரைமாநகரே என்று எண்ணினார். அந் நகரை அடைந்து தமது வணிகத்தை நடத்தத் தொடங் கினார். எள்ளும் கொள்ளும் நெல்லும் தோரையும் முத லிய பதினெட்டு வகைத் தானியங்களை விற்கும் கடை யொன்றை அமைத்தார். வணிகத்திற்கே ஓர் எடுத்துக் காட்டாய் நெடுநுகத்துப் பகல்போல் நடுவுநின்ற நன்னெஞ்சினராய்ச் சிறந்த முறையில் கூலவாணி கத்தை நடத்தினார். சின்னாளில் மதுரைக் கூலவாணிகச் சாத்தனார் என்ற பெயர் நாடெங்கும் பரவியது.

கூலவாணிகத்தைத் திறம்பட நடத்திவந்த நன் னூற் புலவராகிய சாத்தனார் தமிழின்பம் காணுதற்

காக இடையிடையே தமிழ்ச்சங்க மண்டபத்திற்கும் வருவார். இவரைப்போன்றே வணிகர்பெருமக்கள் பலர் வண்டமிழ்ப் புலவர்களாக ஆங்கு விளங்கக் கண்டார். பொன்வாணிகனூர், அறுவைவாணிகன் இளவேட்டனூர், பண்டவாணிகன் இளந்தேவனூர் போன்ற வணிகர்கள் இவர் காலத்தில் புலவர்களாய்த் திகழ்ந்தனர். இவர்கள் புலமை ஒன்றற்காகவே தமிழை முயன்று பயின்றனர். இத்தகைய புலவர் பலர், பாண்டியன் அமைத்த பைந்தமிழ்ச்சங்கத்தில் உறுப்பினராக இருந்து விருப்புடன் தமிழை ஆராய்ந்தனர். சாத்தனூரின் பெருந்தமிழ்ப் புலமையை அறிந்த நக்கிரர் முதலான நற்றமிழ்ப் புலவர்கள் அவருக்குத் தக்க இடமளித்துத் தலைக்கொண்டு போற்றினர்.

### நன்மாறன் நட்பு

சாத்தனூர் மதுரையில் குடிபுகுந்த நாளில் முடி புனைந்து ஆண்ட பாண்டியன் **நன்மாறன்** என்பவன். சித்திரமாடம் என்ற செல்வ மாளிகையில் வாழ்ந்து இறந்தமையால் 'சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்' எனப் பெயர்பெற்றான். அவன் தமிழ்ப் புலவர்களைப் போற்றிக் காக்கும் புரவலனாக விளங்கினான். புலவர்களைக் காணாத நாளை வீணாளாக எண்ணும் இயல்பினன். அவன் சாத்தனூரைப்பற்றிக் கேள்வியுற்றான். அவரைக் கண்டு உரையாட விரும்பினான். அதனை அறிந்த சாத்தனூர், மன்னன் உறையும் சித்திரமாடத்தை நண்ணினார். புலவர் வரவை உணர்ந்த பாண்டியன் நன்மாறன் அவரை இன்முகத்துடன் வரவேற்று இருக்கை வழங்கி அன்புடன் உரையாடினான். அவனது தோற்றத்தையும் ஏற்றத்தையும் தமிழ் ஆர்வத்தையும்

தண்ணருள் நலத்தையும் கண்ணுற்ற கவிஞராகிய சாத்தனார் பாடல் ஒன்றால் பாராட்டி வாழ்த்தினார்.

"வழுதியர் பெருமானே! நீ மாலை அணிந்த மார்பினை உடையாய், முழந்தாள் அளவும் நீண்ட கரங்களை உடையாய்; புலவர்க்குப் புரவலன்; இரவலர்க்கு இனிய வள்ளல்; நீ கடலிடத்தே கதிர் வீசி எழுகின்ற ஞாயிறு போன்று பகைவரைக் காய்ந்து அழிப்பவன்; ஆனால், எம்போன்ற புலவர், பாணர், கூத்தர், விறலியர் முதலான பரிசிலர்க்குத் திங்களைப்போன்று தண்ணளி செய்பவன்; நீ நீடு வாழ்க!" என்று பாண்டியனைச் சுருங்கிய சொற்களால் உளங்குளிரப் பாராட்டினார்.

**நெடுஞ்செழியன் ஆட்சி**

நன்மாறன் தன்னைச் சாத்தனார் புகழ்ந்து பாடிய சிறு பாடலால் அவரது பெரும்புலமையைத் தெரிந்து மகிழ்ந்தான். அவருக்குப் பரிசில் பல வழங்கிப்பாராட்டினான். அன்றுமுதல் சாத்தனார் அரசனை இடையிடையே கண்டு அளவளாவி மகிழ்வதுண்டு. சில ஆண்டுகளில் நன்மாறன் தனது சித்திரமாடத்தே உயிர்நீத்தான். அவனுக்குப் பின்னர் அவன் வழிவந்த நெடுஞ்செழியன் என்பான் அரசுகட்டில் ஏறினான். அவன் வடநாட்டில் படையெடுத்து ஆரியப்படைகளைப் போரில் வென்று முறியடித்தவன். அதனால் அவனைப் புலவர் 'ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்' என்று போற்றுவாராயினர்.

நெடுஞ்செழியன் போராற்றலுடன் புலமையாற்றலும் பொருந்தியவன். அவன் சிறந்த கவிபாடும் செந்தமிழ்ப் புலமையுடையான். கல்வியின் பெருமையை நன்றாகக் கண்டவன். அதனால் தன் நாட்டில் கல்லாமையை ஒழிக்கப் பெரிதும் முயன்றவன். 'எக்குடிப்

பிறப்பினும் யாவரேயாயினும் கற்றவராயின் அவரே உயர்ந்தவர்,’ என்னும் சிறந்த கொள்கை உடையவன். அக் காரணத்தால் ‘உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே’ என்று, தன் நாட்டு மக்கட்கு நல்லுரை பகர்ந்தான். இவனே பொற்கொல்லன் சூழ்ச்சியால் கோவலனைக் கொல்வித்த பாண்டியன் ஆவான்.

**சோழன் நெடுமுடிக்கிள்ளி**

சீத்தலைச்சாத்தனார் காலத்தில் சோழநாட்டை ஆண்ட அரசன் நெடுமுடிக்கிள்ளி என்பவன். இவன் சேரன் செங்குட்டுவனுக்கு மாமன் மகனாகிய மைத்துனக் கேண்மையன். இவன் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு சோழநாட்டை ஆண்டு வந்தான். இவன் செங்குட்டுவன் பெருந்துணையால் அரசினைப் பெற்றவன். இவனுக்கு மாறாகச் சோழ மரபினர் பலர் கிளர்ச்சிசெய்தனர். செங்குட்டுவன் அன்னவரை எல்லாம் அடக்கி ஒடுக்கி நெடுமுடிக் கிள்ளியை அரசனாக்கினான். இவன் பாணர் மரபில் தோன்றிய பாவை ஒருத்தியை மணந்து, அவளையே கோப் பெருந்தேவியாகவும் கொண்டான். இவன் மகனே மணிமேகலையைக் காதலித்த உதயகுமரன் என்பான்.

**செங்குட்டுவன் தொடர்பு**

இவர்கள் காலத்தில் சேரப் பேரரசைச் சிறப்புற நடத்தியவன் செங்குட்டுவன் என்பான். இவனே இளங்கோவடிகளின் உடன் பிறந்த தமையனாவான். சேரப் பெருவேந்தனாகிய செங்குட்டுவனது செந்தமிழ்ப் பற்றையும், அவன் இளவலாகிய இளங்கோவின் வளமான தமிழ்ப்புலமையையும் கேள்வியுற்ற சாத்தனார்

சேரர் தலைநகராகிய வஞ்சிமாநகரை வந்தடைந்தார். செங்குட்டுவனையும் இளங்கோவையும் கண்டு உரையாடி இன்புற்றார். சீத்தலைச்சாத்தனாரின் செந்தமிழ்ப் புலமையைத் தெரிந்த செங்குட்டுவன் அவரைத் தனது அவைப் புலவராக்கி அகமகிழ்ந்தான். சேரன் பேரவைப் புலவராகவும் சிறப்புற்ற சாத்தனார், இளங்கோவடிகட்கு ஆசிரியராகவும் விளங்கி இருப்பாரோ என்று ஐயுற இடமுண்டு. இளங்கோவடிகள் தமது காவியத்தில் சாத்தனாரைக் குறிக்கும் இடமெல்லாம் சிறப்பான அடைமொழி கொடுத்தே குறிப்பார். தண்டமிழ்ச் சாத்தன், தண்டமிழாசான் சாத்தன், நன்னூற் புலவன் சாத்தன் என்று மிகவும் பெருமையாகப் பேசுவார்.

**கண்ணகியைக் காணுதல்**

மதுரைமாநகரில் சாத்தனார் வாழ்ந்துவரும் நாளில் ஒரு நாள் கோவலன் கொலையுண்டு இறந்தான். சாத்தனார் கூலவாணிகம் நடத்திய பெருவணிக ராதலின் காவிரிப்பூம்பட்டினத்துப் பெருங்குடி வணிகனாகிய மாசாத்துவானை நன்கு அறிவார். அவன் மகனாகிய கோவலனையும் அறிந்தவர். அவன் மதுரையில் கொலையுண்டான் என்ற செய்தியைத் தெரிந்ததும் அவன் கொலையுண்டு கிடந்த இடத்தை அடைந்தார். கோவலனது பிணவுடலைக் கண்டு பெரிதும் வருந்தினார். ஆங்குத் திரண்டு நின்ற மக்கள் பேசிய செய்தியெல்லாம் செவியாரக் கேட்டு உணர்ந்தார். கோவலன் மனைவியாகிய கண்ணகி, ஆய மகளிர் சூழ்ந்துவர, வீதி வழியே தலைவிரி கோலமாக அரற்றிக்கொண்டு வரும் அவலக் காட்சியைக் கண்டு உள்ளம் உருகினார். அன்று மதுரைமாநகரமே அலங்கோலமாகக் காட்சியளித்தது.

சிறிது நேரத்தில் கணவனை இழந்த கண்ணகி, மன்னன் அரண்மனை அடைந்து, தன் கணவன் கள்வ னல்லன் என்பதை நிலைநாட்டிய செய்தி நகரெங்கும் பரவியது. அரசன் நெடுஞ்செழியன் தான் நீதி தவறிய நிலையுணர்ந்து அரியாசனத்திலேயே உயிர் நீத்தான் என்று ஊரரெல்லாம் பேசிக் கொண்டனர். அன்றிர வில் சாத்தனார் பலர் வந்து கூடும் வெள்ளியம்பலத்தில் சென்று தங்கினார். எங்குப் பார்த்தாலும் கண்ணகியைப் பற்றிய பேச்சே நடந்துகொண்டிருந்தது. அவ் வெள்ளியம்பலத்தில் ஊரவரும் அயலவரும் ஒதுங்கி நின்றனர். அந் நேரத்தில் வீரமும் சோகமும் ஒருங்கு உருவெடுத்தாற் போன்ற கண்ணகி அவ் வெள்ளியம் பலத்தின் முன்னர் வந்து நின்றாள். மதுரைநகரம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அப்பொழுது மதுராபதி என்னும் தெய்வம், கண்ணகியின் முன்னர்த் தோன்றி அவளது முற்பிறப்பின் வரலாற்றை விளங்க உரைத்தது. அவள் கணவன் கொலையுண்டது முன் செய்த தீவினையால் என்பதைத் தெளிவுறுத்தியது.

**சேரநாட்டிற்குச் செல்லுதல்**

இவற்றை எல்லாம் நேரில் கண்ட சீத்தலைச்சாத்த னார் மதுரைமாநகர் தீக்கு இரையாயினமையால் வஞ்சி நகரை நோக்கி வழிநடந்தார். வஞ்சியைச் சார்ந்த சாத்தனார், செங்குட்டுவன் மலைவளம் காணப் புறப் பட்ட செய்தி உணர்ந்தார். அவரும் செங்குட்டுவ னுடன் ஒருங்கு புறப்பட்டுப் பேரியாற்றங் கரையை அடைந்தார். ஆங்கிருந்த மணல்மேட்டில் மன்னர் பெரு மானாகிய செங்குட்டுவனோடும் இளங்கோவடிகளோடும் இன்பமாக உரையாடி இருந்தார். அவ் வேளையில் சேர

னைக் காண வந்த மலைவாணர்கள், தாம், வேங்கை மரத் தின்நீழலில் கண்ட கண்ணகியைப் பற்றிய வியத்தகு நிகழ்ச்சியைச் சொல்லக் கேட்டார். அதன் உண்மை அறியாது திகைத்திருந்த சேரர் பெருமானுக்குச் சாத்த னார் மதுரைமாநகரில் தாம் நேரில்கண்ட செய்தி அனைத்தும் தெளிவுற உரைத்தார். உடனிருந்து அச் செய்திகளை நுட்பமாகக் கேட்டு உணர்ந்த இளங்கோ வடிகள், கண்ணகியின் வரலாற்றைக் காவியமாக்கினார்.

**சாத்தனார் பாடியவை**

இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் காவியம் செய் தற்கு வேண்டும் குறிப்புகளை யெல்லாம் தொகுத்துக் கொடுத்த சாத்தனார் தலைமையிலேயே அடிகளார் காவி யத்தை அரங்கேற்றினார். அதன் பின்னர்ச் சாத்தனார், கோவலனுக்கும் அவன் காதற் கணிகையாகிய மாதவிக் கும் பிறந்த மகள் மணிமேகலையின் வரலாற்றை அணி தரு காவியமாக அமைத்தருளினார். இக் காவியத்தை அன்றிச் சாத்தனாரால் பாடப்பெற்ற தனித்தனிப் பாக் கள் பத்து உண்டு. அவைகள் சங்க இலக்கியங்களுள் இடம் பெற்றுள்ளன. புறநானூற்றில் இவர் நன்மாற னைப் பாடிய பாடல் ஒன்று உள்ளது. அகநானூற்றில் இவரின் பாக்கள் ஐந்து இடம் பெற்றுள்ளன. நற்றிணை யில் மூன்றும் குறுந்தொகையில் ஒன்றும் இவருடைய பாக்களாகக் காணப்படுகின்றன. புறநானூற்றுப் பாடலை ஒழிந்த ஒன்பது பாக்களும் அகத்துறையைச் சார்ந்தனவாகும்.

## ௬. மணிமேகலைக் காவிய மாண்பு

ஐம்பெருங் காவியங்களுள் ஒன்றாக விளங்குவது மணிமேகலை என்னும் நூல். இது காவியத் தலைவியாகிய மணிமேகலையின் பெயரையே தன் பெயராகத் தாங்கி மிளிர்வதாகும். மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாராகிய நல்லிசைப் புலவர் இந் நூலைத் தமிழ்த்தாயின் இடையினை அணிசெய்யும் மணிமேகலையாக ஆக்கிப் புனைந்து அகமகிழ்ந்தார். இந் நூலும் சிலப்பதிகாரத்தைப் போன்று முதன்முதல் தமிழிலேயே தோன்றிய சிறந்த காவியமாகும். இந்நூல் கூறும் வரலாறு நிகழ்ந்த காலத்திலேயே வாழ்ந்தவர் சாத்தனார். அவர் வரலாற்றில் வரும் பல நிகழ்ச்சிகளைக் கண்ணாரக் கண்டவர் ஆதலின் உண்மை வரலாற்றை உரைக்கும் உயர்ந்த காவியம் மணிமேகலை.

இந் நூலாசிரியராகிய சீத்தலைச் சாத்தனார் சங்கத்துச் சான்றோருள் தலைமை சான்ற தமிழ்ப் புலவர். சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோவடிகட்குத் தமிழாசிரியராக விளங்கிய தகையுடையார். பல சமய நூல்களைத் தெளிவுறக் கற்றுத்தேர்ந்த திறமுடையார். பௌத்த சமயத்தில் ஆழ்ந்த பற்றும் தோய்ந்த அறிவும் உடையவர் ஆதலின் பௌத்த சமயச் சார்பினளாகிய மணிமேகலையின் வரலாற்றைச் சமய இலக்கியமாகவே சமைத்துவிட்டார். பௌத்த சமயக் கொள்கைகளையெல்லாம் நூல் முழுவதும் விரித்து உரைக்கின்றார். அவர் தமது சமய உணர்ச்சியை நூலில் மிகுதியாகவே காட்டியிருக்கின்றார். நூலின் பிற்பகுதி முழுதும் புத்த சமயக் கொள்கைகளுக்கு உயர்வு கற்பிக்கவே எழுந்தன என்று இயம்பலாம். எனினும் நூலின் முற்பகுதி,

காவியச் சுவைகாண விரும்புவார்க்குப் பெருவிருந்தாக அமைந்துள்ளது.

இந் நூல் சிலப்பதிகாரத்தினும் எளிமை வாய்ந்த நடை உடையதாகும். கற்பவரின் நுண்ணறிவிற்கு ஏற்பப் பண்ணமைந்த சுவை பயக்கும் சொல்நுட்பம் பொருள்நுட்பம் திட்பமுற அமைந்ததாகும். இதன்கண் காணப்படும் மலை, கடல், ஆறு, தீவு, காடு, நாடு, நகர் முதலியவற்றின் இயற்கை வருணனைகள், கற்பவர் உள்ளத்தில் நேரில் கண்டாற் போன்ற உணர்ச்சியை ஊட்டும் உயிரோவியங்களாக ஒளிர்கின்றன.

மேலும், இந் நூலின்கண் இக்காலத்தில் வேறொரு வகையாலும் விளங்காதனவாகிய சில தெய்வங்களின் பெயர்களையும் அத் தெய்வங்களை வழிபடும் முறைமையையும் அறியலாம். ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தின் சமயநிலையை உணர்தற்குத் தக்க கருவியாக விளங்குவது இந் நூல். அக் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம், வஞ்சி, காஞ்சி முதலிய பெருநகரங்கள் சிறப்புற்று விளங்கிய நிலையை இந் நூலால் அறியலாம். அற்றை நாளில் விளங்கிய சில அரசர், சில முனிவர் முதலியோருடைய வரலாறுகளையும் இதனால் அறியலாம்.

இத்தகைய மணிமேகலைக் காவியத்தின் சிறப்பை உணர்ந்த உரையாசிரியர்கள் பலர், தாம் வரைந்த உரைகளில் இந் நூலிலுள்ள பாடல் அடிகளையும் கருத்துக்களையும் மேற்கோளாக எடுத்துக் காட்டுகின்றனர். இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார் போன்ற இலக்கண உரையாசிரியர்களும், பரிமேலழகர், அடியார்க்குநல்லார் போன்ற இலக்கிய

உரையாசிரியர்களும் மணிமேகலை அடிகளைத் தத்தம் உரைகட்கு அரண்செய்ய எடுத்தாளுகின்றனர். இஃதொன்றே அந் நூலின் ஏற்றத்திற்குத் தக்க சான்றாகும்.

மணிமேகலை நூல் நுட்பங்களில் மனத்தைப் பறி கொடுத்தவர் பலர். அவருள் கற்பனைக் களஞ்சியம் என்று கற்றவர் போற்றும் நற்றவச் செல்வராகிய சிவப் பிரகாச முனிவர் தாம் அருளிச்செய்த திருவெங்கைக் கோவை என்னும் இனிய நூலில் உள்ள பாடலொன்றில் மூன்று நூல்களைப் பாராட்டுகின்றார். அவற்றுள் மணிமேகலை முதலிடம் பெறுவதாகும். அவர் இந் நூலின் சொற்பொருள் நுட்பங்களை வியந்து போற்று கின்றார். அவரால் பாராட்டப்பெற்ற மற்றைய இரு நூல்கள் சிந்தாமணியும் திருக்கோவையாரும் ஆகும். இவ் இருநூல்கட்கும் அமைந்த உரைநலத்தையே சிவப் பிரகாசர் வியந்துரைத்தார். ஆனால் மணிமேகலையை மிகவும் நுட்பம் வாய்ந்த நூலெனப் போற்றினார்.

**'கோந்தார் குழல்மணி மேகலை நூல்நுட்பம் கொள்வதெங்ஙன்'**

என்பது அவரது பாடல் அடியாகும்.

அம்பிகாபதி என்னும் அருந்தமிழ்ப் புலவர், தாம் பாடிய அம்பிகாபதிக்கோவை என்னும் நூலில் 'மாதவி பெற்ற மணிமே கலைநம்மை வாழ்விப்பதே' என்று பாராட்டினார். திருத்தணிகை உலாப் பாடிய ஆசிரியர்,

> **'சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்**
> **கந்தா மணிமே கலைபுனைந்தான்.'**

என்று பாடித் தமிழிலுள்ள முப்பெருங்காவியங்களைப் போற்றினார். இப் புலவர்கள் எல்லாம் மணிமேகலை நூற்பெயரைத் 'தொனிநயம்' தோன்றத் தத்தம்

பாக்களில் அமைத்தாலும் அதன் அருமைப்பாட்டை அறிந்தே பெருமையுறப் போற்றினர்.

இத்தகைய மணிமேகலைக் காவியம் முதற்கண் பதிகம் என்று வழங்கப்படும் கதைபொதிபாட்டைப் பெற்றுள்ளது. விழாவறை காதை முதலாகப் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை இறுதியாக முப்பது பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் நூலை வகைப்படுத்து அமைத்த ஆசிரியராகிய சாத்தனார், தம் நண்பராகிய இளங்கோவடிகளைத் தலைமையாகக் கொண்ட பேரவையிலேயே இந் நூலை அரங்கேற்றினார்.

> **‘இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப**
> **வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்**
> **மாவண் தமிழ்த்திறம் மணிமே கலைதுறவு**
> **ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனன்.’**

என்று சாத்தனாரே அச் செய்தியைச் சாற்றுகின்றார்

## ரு. மணிமேகலை வரலாறு

*மாதவி துறவு*

சோழ வளநாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் பெருங்குடி வணிகர் மரபில் பிறந்தவன் கோவலன். அவன் ஆடல், பாடல், அழகு ஆகிய மூன்றினும் சிறந்த நாடகக் கணிகையாகிய மாதவியிடம் காதல் பூண்டு ஒழுகினான். கற்பரசியாகிய கண்ணகி என்னும் காதல்மனையாளை மறந்து மாதவியின் மனையிலேயே அவன் தங்கிவிட்டான். இத்தகைய கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளே மணிமேகலையாவள்.

ஊழ்வினையால் மாதவியைப் பிரிந்த கோவலன் தன் மனைவியாகிய கண்ணகியுடன் மதுரைமாநகரை அடைந்தான். ஆங்குச் சிலம்பு விற்கச் சென்ற வேளையில் அரண்மனைப் பொற்கொல்லன் சூழ்ச்சியால் கள்வன் என்று குற்றம் சாற்றப் பெற்றான். பாண்டியனால் கொலைத்தண்டனை விதிக்கப்பெற்று இறந்தான். அவன் இறந்த செய்தியைத்தெரிந்த மாதவி தனது செல்வத்தை எல்லாம் தானம் செய்து தவக்கோலம் பூண்டாள். மாதவர் வாழும் தவச்சாலையை அடைந்தாள். ஆங்கிருந்த அறவண அடிகளின் அடிமிசை விழுந்து வணங்கினாள். அவர்பால் தன் காதலனாகிய கோவலன் மதுரை மாநகரில் அடைந்த கொடுந்துயரைக் கூறி வருந்தினாள்.

### அறவணர் அறவுரை

மாதவியின் துயரைக் கேட்ட மாதவராகிய அறவண அடிகள்,

> ' பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
> பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
> பற்றின் வருவது முன்னது, பின்னது
> அற்றோர் உறுவது அறிக. '

என்று நால்வகை வாய்மைகளையும் அவளுக்கு அருளிச் செய்தார். துக்கம், துக்க நிவாரணம், துக்கோற்ப[illegible] துக்க நிவாரண மார்க்கம் என்னும் அந் நா[illegible] வாய்மைகளையும் அறிவுறுத்திய அடிகள், கா[illegible] கொலை, கள், பொய், களவு என்னும் ஐந்தனையுட் முற்றத் துறத்தலாகிய ஐவகைச் சீலங்களையும் அ[illegible] மாதவிக்கு அறிவுறுத்தினார்.

இங்ஙனம் அறவண அடிகளிடம் நால்வகை வாய்மையும் ஐவகைச் சீலமும் ஆகிய அறவுரை கேட்ட

மாதவி தன் மகளாகிய மணிமேகலையுடன் புகார்நகரத்தி லுள்ள மலர் மண்டபத்தில் புகுந்து தூய துறவற வாழ்வைத் தொடங்கினாள். காவிரிப்பூம்பட்டினத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் இந்திர விழா வந்துற்றது. விழாக் காலத்தில் மாதவியும் மணிமேகலையும் தங்கள் ஆடல் பாடல்களால் நகர மாந்தர்க்கு நல்விருந்து ஊட்டுவர். இவ்யாண்டில் அவர்கள் விழாவில் கலந்து கொள்ளாமையைக் கண்ட ஊரினர் அலர் தூற்றினர்.

**ஊரலர் உரைத்தல்**

மாதவியின் தாயாகிய சித்திராபதி ஊரினர் தூற்றி உரைக்கும் அலர்மொழி கேட்டு உள்ளம் வருந்தினாள். மாதவியின் தோழியாகிய வயந்தமாலையை அழைத்து, 'ஊரார் கூறும் பழிமொழியை மாதவிக்கு உரைப்பாய்' என விடுத்தாள். வயந்தமாலை, மாதவி இருந்த மலர் மண்டபத்தை அடைந்து, அவளது தவத்தால் மெலிந்த மேனியைக் கண்டு வருந்தினாள். அவள் இந்திரவிழா வில் கலந்து கொள்ளாதது குறித்தும், மரபிற்கு ஒவ் வாத தவவொழுக்கம் பூண்டது குறித்தும் ஊரார் பழித்து உரைப்பனவற்றை எடுத்துரைத்தாள்.

வயந்தமாலையின் சொற்களைக் கேட்ட மாதவி, 'காதலன் உற்ற கடுந்துயர் கேட்டும் இறவாது உயிர் வாழ்ந்தேன்; மதுரை மாநகரை எரித்த மாபெரும் பத்தினியாகிய கண்ணகியின் மகளன்றோ மணிமேகலை; அவளையும் தவத்தில் செலுத்துவேனே அல்லாமல் இழிந்த பரத்தைமைத் தொழிலில் புகுத்தமாட்டேன்; அறவண அடிகளிடம் அறவுரை கேட்டுத் துறவறம் புகுந்தேன்; இச் செய்தியை என் தாய்க்கும் ஏனைய மகளிர்க்கும் இயம்புவாய்' என்று சொல்லி அனுப்பி

ளுள். மாதவியின் மொழியைக் கேட்ட அத் தோழி பெறலரும் மணியைப் பெருங்கடலில் வீழ்த்தியவர் போன்று வெந்துயருடன் மீண்டாள்.

### மணிமேகலை உவவனம் புகுதல்

மலர் மண்டபத்தில் தாயுடன் மலர் தொடுத்துக் கொண்டிருந்த மணிமேகலை தன் தந்தையாகிய கோவலனுக்கும் தாயாகிய கண்ணகிக்கும் மதுரையில் நேர்ந்த கொடுந்துன்பத்தைக் கேட்டுக் கண்ணீர் சொரிந்தாள். அவளது கண்ணீர் அவள் தொடுத்துக் கொண்டிருந்த மாலையை நனைத்தது. மாதவி அது கண்டு அவளது கண்ணீரைத் துடைத்தாள். அவள் மனத்துயரை மாற்றக் கருதி, 'இம் மாலை நின் கண்ணீரால் தூய்மை இழந்தது ; ஆதலின் வேறு மாலை தொடுத்தற்குச் சுதமதியுடன் சென்று புதுமலர் கொய்து வருவாய்' என்று அனுப்பினாள்.

### உதயகுமரன் பின்தொடர்தல்

புதுமலர் கொய்யப் புகுந்த மணிமேகலையும் சுதமதியும் விழாவயரும் வீதிகள் வழியாக நடந்து உவவனம் நோக்கிச் சென்றனர். தவக்கோலம் தாங்கிச் சென்ற மணிமேகலையைக் கண்ட நகர மாந்தர் அனைவரும் வருந்தினர். இவ்வேளையில் மதவெறியால் நகரைக் கலக்கித் திரிந்த காலவேகம் என்னும் களிற்றின் மதத்தை அடக்கிய உதயகுமரனாகிய அந்நாட்டு இளவரசன் தேரில் ஏறி ஆரவாரத்துடன் தெருவில் வந்து கொண்டிருந்தான். அவன் மணிமேகலை உவவனம் நோக்கிச் செல்வதை உணர்ந்து, தேரை விரைந்து செலுத்தி உவவனத்தின் வாயிலை அடைந்தான்.

### மணிமேகலை பளிக்கறை புகுதல்

மணிமேகலை தன்மீது கொண்ட காதல்வேட்கையனாய் உதயகுமரன் வருகிறான் என்பதைத் தெரிந்தாள். உடன் வந்த தோழியாகிய சுதமதியிடத்தே அச் செய்தியை உணர்த்தினாள். அதைக் கேட்ட சுதமதி அவளை ஆங்கிருந்த பளிக்கறையில் புகுத்தி, உள்ளே தாழிட்டு இருக்கச் செய்தாள். மணிமேகலையைத் தேடிக்கொண்டு உவவனத்தினுள்ளே புகுந்த உதய குமரன் பளிக்கறையின் பக்கமாக நின்ற சுதமதி யிடத்தே மணிமேகலையைக் குறித்து வினவினான். அவள் மக்கள் யாக்கையின் இழிநிலையை எடுத்துக் கூறி அவனைத் தெருட்ட முயன்றாள். அவளது மொழிகள் உதயகுமரன் செவியுள் புகவில்லை. இவ்வேளையில் பளிக்கறையின் உள்ளிருந்த மணிமேகலையின் உருவத்தை அவன் கண்டான். அப் பளிக்கறையுள் புகுதற்கு முயன்று அதன் வாயிலை நாடினான். அதனைக் காணமுடியாமையால் கவன்று, சுதமதியை நோக்கி, "மணிமேகலை எத்திறத்தினள்? இயம்புதி," என்றான்.

### சுதமதியின் அறிவுரை

உதயகுமரன் தீய உள்ளத்தை மாற்ற எண்ணிய சுதமதி, அவனை நோக்கி "மணிமேகலை தவ ஒழுக்கத்தை உடையாள். குற்றம் புரிந்தாரைச் சபிக்கும் ஆற்றலு முடையாள். காம விருப்பம் சிறிதும் இல்லாதவள். நீ அவளை விரும்புதல் தக்கதன்று," என்று கூறினாள். அது கேட்ட உதயகுமரன், 'வெள்ளம் மிக்குப் பெருகுமாயின் அதனைத் தடுத்து நிறுத்தும் தடையும் உளதோ? மணிமேகலையைச் சித்திராபதியால் எவ்விதத்திலும் சேர்வேன்,'' என்று வஞ்சினம் கூறி அகன்

ருன். அதன் பின்னர்ப் பளிக்கறையினின்று வெளிப் போந்த மணிமேகலை, தன் தோழியாகிய சுதமதியை நோக்கி, "உதயகுமரன் என்னைப் பலவாறு இகழ்ந்து உரைத்தானாயினும் அவன் பின்னே என் நெஞ்சு செல்லலுற்றது. இதுவோ காமத்தின் இயற்கை. இத் தன்மை கெடுவதாக," என்று சொல்லி நின்றாள்.

**மணிமேகலா தெய்வம் தோன்றுதல்**

இவ்வேளையில் இந்திரவிழாவைக் காண வந்த மணிமேகலா தெய்வம் உவவனத்தை அடைந்தது. ஆங்குப் பளிக்கறையில் உள்ள பாத பீடிகையை வலங்கொண்டு பலவாறு வாழ்த்தி நின்றது. இந்நிலையில் பகற்பொழுது கழிய அந்திமாலை வந்தடைந்தது. சிறிது நேரத்தில் திங்கட் செல்வன் எங்கணும் தண்ணிலவைப் பொழியத் தலைப்பட்டான். பின்னர் அம் மணிமேகலா தெய்வம் சுதமதியிடத்தே மணிமேகலையுடன் வனத்திற்கு வந்த காரணத்தையும் உற்ற துன்பத்தையும் கேட்டு அறிந்தது. "உதயகுமரனுக்கு மணிமேகலைபால் எழுந்த வேட்கை தணிந்திலது. இது முனிவர் உறையும் வனமென்பதை அறிந்து தீங்கு செய்யாது அகன்றான். இதனைக் கடந்து வெளிப் புகுந்தால் அவன் அகப்படுத்திக் கொள்வான். ஆதலின் நீவிர் இருவரும் இவ் வனத்தின் மேற்றிசை உள்ள வாயில் வழியே சக்கரவாளக் கோட்டத்திற்குச் செல்க," என்று சொல்லியது.

**உதயகுமரனுக்கு அறிவுரை**

அது கேட்ட சுதமதி, சுடுகாட்டுக்கோட்டம் எனப்படும் அதனைச் சக்கரவாளக் கோட்டம் என வழங்குதற்குக் காரணம் யாது? என அத் தெய்வத்தை வினவினாள். மணிமேகலா தெய்வம் அதன் வரலாற்றைச்

சொல்லிக்கொண்டிருக்கும் வேளையில் சுதமதி உறங்கலுற்றாள். உடனே அத் தெய்வம் மணிமேகலையை மயக்கி எடுத்துச் சென்று மணிபல்லவத் தீவில் கொண்டு சேர்த்தது. பின்பு அங்கிருந்து நீங்கிக் காம வேட்கையால் இரவு முழுதும் துயிலாதிருந்த உதய குமரனை அடைந்தது. அவன்முன் தோன்றி அரசு முறையின் இயல்பை அறிவுறுத்தியது.

'கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்.'

இங்ஙனம் அரசியல் முறையினை எடுத்தியம்பிய மணிமேகலா தெய்வம், "தவத்திறம் பூண்ட மணி மேகலையின்மீது கொண்ட தவறான எண்ணத்தை ஒழிப்பாய்," என்று உரைத்தது.

#### சுதமதிக்குச் செய்தி

பின்னர் அத் தெய்வம் உவவனத்தை அடைந்து ஆங்குத் துயின்று கொண்டிருந்த சுதமதியை எழுப்பி, "யான் மணிமேகலா தெய்வம்; இந்திரவிழாக் காணுதற்கு வந்தேன். மணிமேகலை அறநெறியில் புகும் நற்பொழுது வந்தமையால் அவளை எடுத்துச் சென்று மணிபல்லவத்தில் வைத்தேன். அவள் தனது பழம் பிறப்பை உணர்ந்து இற்றைக்கு ஏழாம் நாள் இங்கு வந்து சேர்வாள். அவள் வேறு வடிவம் கொள்வாளாயினும் நினக்குத் தன்னை மறைக்க மாட்டாள். அவள் இந் நகரில் புகும் நாளில் பற்பல அற்புதங்கள் நிகழும். இச் செய்திகளை அவள் தாயாகிய மாதவிக்குக்

கூறுக. அவட்கு என்னைத் தெரியும்,'' என்று சொல்லி அகன்றது.

**மணிமேகலையைப் பிரிந்து வருந்தல்**

மணிமேகலையின் பிரிவுத் துயரைப் பொறுத சுதமதி அச் சக்கரவாளக் கோட்டத்திலுள்ள உலக வறவியின் அருகே நின்று வருந்திக் கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கிருந்த தூணில் துலங்கிய தெய்வப் பாவை யொன்று சுதமதியை விளித்து, அவளது பழம்பிறப்பு, இப் பிறப்பு வரலாறுகளை எடுத்துரைத்தது. மேலும், 'இன்றைக்கு ஏழாம் நாளில் மணிமேகலை தனது முற்பிறப்பையும் உனது முற்பிறப்பையும் அறிந்து திரும்புவாள். நீ அஞ்சாதே' என்று ஆறுதல் கூறியது. அதனைக் கேட்டு இதயம் நடுங்கிய சுதமதி, கதிரவன் உதித்ததும் மாதவியிருந்த மலர்மண்டபத்தை அடைந்தாள். முதல்நாள் இரவில் நிகழ்ந்தவற்றையெல்லாம் அவளிடம் மொழிந்தாள். மணிமேகலையைப் பிரிந்த மாதவி மணி இழந்த நாகம் போல் வருந்தி இருந்தாள். சுதமதியோ உயிரிழந்த உடம்பைப்போல் செயலற்றுத் துயருற்று இருந்தாள்.

**மணிபல்லவத்தில் மணிமேகலை**

மணிபல்லவத்தே தனியே துயின்ற மணிமேகலை விழித்தெழுந்தாள். அவள் தான் இருக்கும் இடம் வேற்றிடமாதலை அறிந்து, பிறிதோர் இடத்துப் பிறந்த உயிர் போன்று பேதுற்றாள். 'இஃது உவவனத்தின் ஒருபுறமோ!' என்று எண்ணி அங்கும் இங்கும் அலைந்து திரிந்தாள். தோழியாகிய சுதமதியைக் காணாது கலங்கிக் கதறினாள். தன் தந்தையாகிய கோவலனை நினைந்து 'ஐயாவோ!' என்று அலறியழுதாள்.

**பழம்பிறப்பு உணர்தல்**

இங்ஙனம் மனம் மருண்டு கலங்கிப் புலம்பிய மணிமேகலையின் முன்னர்ப் பெருந்தவ முனிவனாகிய புத்தன் இருந்து அறம் உரைக்கும் தரும பீடிகை தோன்றியது. அதனைக் கண்டதும் மணிமேகலை மெய்ம்மறந்து தலைமேல் கைகூப்பி மும்முறை வலம்வந்து வணங்கினாள். அவள் பணிந்து எழும்பொழுதே பழம்பிறப்பை உணர்ந்தாள். முன்னைப் பிறப்பில் தன்னுடைய கணவனாக இருந்த இராகுலனது மறுபிறப்பை அறிய விருப்புற்றாள். மணிமேகலா தெய்வத்தை நினைந்து வருந்தினாள்.

**மந்திரம் உணர்தல்**

இவ்வேளையில் மணிமேகலா தெய்வம் அங்கு வந்தது. அங்கிருந்த தரும பீடிகையைப் புத்தனாகவே எண்ணிப் பணிந்து போற்றியது. அத் தெய்வத்திடத்தே மணிமேகலை, இராகுலனது மறுபிறப்பைப் பற்றி வினவினாள். அத் தெய்வம் அவனது மறு பிறப்பையும், சுதமதி, மாதவி ஆகியோரின் பழம்பிறப்பையும் பகர்ந்தது. மணிமேகலைக்கு எதிர் காலத்தில் நிகழ இருக்கும் செய்திகளையும் எடுத்தியம்பியது. வேற்றுருக் கோடல், வானில் திரிதல், பசியற்று இருத்தல் இவற்றிற்கு உதவும் மூன்று மந்திரங்களையும் அவளுக்கு அறிவுறுத்தி வானில் எழுந்து சென்றது.

**தீவதிலகையைக் காணுதல்**

மணிமேகலை அத் தீவிலுள்ள மணற்குன்றம், மலர்ச்சோலை, பொய்கை முதலியவற்றைப் பார்த்துக் கொண்டு பலவிடத்தும் உலவி வந்தாள். அப்பொழுது அவள்முன் தீவதிலகை என்னும் தெய்வப்பெண் தோன்றி 'நீ யார்?' என்று வினவினாள். மணிமேகலை

தனது முற்பிறப்பும் இப்பிறப்பும் சேரக்கூறிப் பின், "நீ யார்?" என்று தீவதிலகையை வினவினாள். அவள் தான் இந்திரன் ஏவலால் புத்த பீடிகையைக் காவல் புரியும் செயலையும் பீடிகையின் பெருமையையும் எடுத்துரைத்தாள்.

**அமுதசுரபியை அடைதல்**

பின்பு அத் தீவதிலகை மணிமேகலையை நோக்கி, "இந்நாள் புத்தன் அவதரித்த பொன்னாளாகும். வைகாசித் திங்கள் முழுநிலாப் பொழியும் விசாக நன்னாளாகும். இந்நாளில் இங்குள்ள கோமுகிப் பொய்கையில் அமுதசுரபி என்னும் அரிய தெய்வப் பாத்திரம் வெளிப்படும். அது முன்னைய நாளில் ஆபுத்திரன் கையில் இருந்தது. அது நின் கைக்குக் கிடைக்கும்.

> 'ஆங்கதில் பெய்த ஆருயிர் மருந்து
> வாங்குநர் கையகம் வருத்துதல் அல்லது
> தான்தொலை வில்லாத் தகைமைய தாகும்.'

அதன் வரலாற்றைக் காவிரிப்பூம்பட்டினம் சென்று அறவண அடிகள்பால் அறிந்துகொள்க," என்று சொல்லி, அவளைக் கோமுகிப் பொய்கைக்குக் கூட்டிச் சென்றாள். இருவரும் அக் குளத்தை வலஞ்செய்து நின்றனர். அப்பொழுது அதனின்று எழுந்த அமுதசுரபி, மணிமேகலையின் மலர்க்கரத்தில் வந்து அமர்ந்தது.

அமுதசுரபியைப் பெற்ற மணிமேகலை அளவற்ற மகிழ்ச்சியடைந்தாள். புத்தனைப் பலவாறு போற்றித் துதித்தாள். அப்பொழுது தீவதிலகை, பசிப் பிணியின் கொடுமையையும் அதனைத் தீர்ப்போரது பெருமையையும் மணிமேகலைக்குக் கூறினாள். "இனி நீ உணவளித்து உயிர் கொடுத்தலாகிய அறத்தைப்

புரிவாய்'' என்று வாழ்த்தினாள். மணிமேகலை, அவளை வணங்கிப் புத்த பீடிகையை வலங்கொண்டு, அமுத சுரபியுடன் வானில் எழுந்து புறப்பட்டாள்.

**புகார் நகரம் புகுதல்**

வான்வழி எழுந்த மணிமேகலை, புகார் நகரில் தன்னைக் காணாது வழிமேல் விழிவைத்து எதிர்நோக்கி இருக்கும் சுதமதியும் மாதவியும் வியப்படையுமாறு, அவர்கள் முன்னர்த் தோன்றினாள். அவர்களது முற்பிறப்பைப் பற்றி அறிவித்தாள். "இஃது ஆபுத்திரன் கையிலிருந்த அமுதசுரபி என்னும் தெய்வப் பாத்திரம்; இதனைத் தொழுமின்,'' என்று இயம்பினாள். அவர்களுடன் அறவண அடிகளைக் கண்டு தரிசித்தாள். அவள், தான் மலர்வனம் புகுந்தது முதல் இதுகாறும் நிகழ்ந்த அனைத்தும் அவரிடம் உரைத்தாள்.

பின்பு, அறவண அடிகள் மணிமேகலைக்கு மாதவி, சுதமதி ஆகிய இருவருடைய முற்பிறப்பு வரலாற்றைத் தெரிவித்தார். 'நீ இவ் அமுதசுரபியைக் கொண்டு மக்களது பசிப்பிணி தீர்க்கும் சீரிய பேரறத்தைச் செய்க!'' என்று வாழ்த்தி, ஆபுத்திரன் வரலாற்றையும் அறிவித்தார்.

**ஆதிரை பிச்சையிடல்**

அது கேட்ட மணிமேகலை பிக்குணிக் கோலம் தாங்கிப் பெருவீதி வழியே நடந்து வந்தாள். அவளது கோலத்தைக் கண்ட நகர மாந்தர் உள்ளம் குழைந்தனர். அவள் செல்லும் வழியில் காயசண்டிகை என்னும் விஞ்சைமகள் ஒருத்தி எதிர்ப்பட்டாள். அவள் மணிமேகலையை அணுகி, 'இந் நகரில் ஆதிரை என்னும்

கற்புடையாள் பொற்கரத்தால் முதன்முதல் பிச்சை யேற்றல் நன்று' என்று நவின்றாள். அங்ஙனமே மணி மேகலை, ஆதிரையின் அணிமனை அடைந்து புனையா ஓவியம் போல வாய் பேசாமல் நின்றாள். ஆதிரை வெளிப் போந்து மணிமேகலையைத் தொழுது வலம் வந்தாள். அவள் கையமர்ந்த அமுதசுரபியின் உள் ளிடம் நிறைய,

'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக.'

என்று வாழ்த்தி ஆருயிர் மருந்தாகிய அன்னத்தை இட்டாள்.

**காயசண்டிகையின் பசிப்பிணி தணித்தல்**

ஆதிரை நல்லாள் அன்புடன் அளித்த பிச்சையை அமுதசுரபியில் முதற்கண் ஏற்ற மணிமேகலை, அத னின்று எடுக்க எடுக்கக் குறையாத அன்னத்தை ஏற்ப வர்க்கெல்லாம் இனிது வழங்கினாள். அறநெறியில் தேடிய செல்வம் வழங்குந்தோறும் குறையாமல் வளர் வதுபோல அமுதசுரபியில் அன்னம் பெருகுவது கண்டு பேருவகை கொண்டாள். இதனைக் கண்ணுற்ற காய சண்டிகை என்னும் விஞ்சை மகள் மணிமேகலையைத் தஞ்சம் புகுந்தாள். 'தாயே! பல்லாண்டுகளாக எனக்கு ஏற்பட்டுள்ள தணியாத பசியையும் தணித்தருள்க' என்று மணிமேகலையை வணங்கி வேண்டினாள். உடனே மணிமேகலை அமுதசுரபியிலிருந்து ஒரு பிடி அமுதை எடுத்து அவள் கையில் கொடுத்தாள். அதனை உண்டதும் காயசண்டிகை என்றும் தீராக் கடும்பசி தீர்ந்தாள். மணிமேகலைக்குத் தனது வரலாற்றை உரைத்து உளங்குளிர வாழ்த்தினாள்.

**உலகவறவியை அடைதல்**

பின்னர் அக் காயசண்டிகை, மணிமேகலையை நோக்கி, "இந் நகரில் முனிவர் பலர் உறையும் சக்கர வாளக் கோட்டத்தில் உலகவறவி என்னும் அம்பலம் ஒன்று உண்டு. அங்கே பசியால் வருந்தும் பலர் தங்கி இருப்பர். ஆதலின் நீ அவ்விடம் செல்வாயாக," என்று வேண்டித் தன்னூருக்குச் சென்றாள். மணிமேகலை அங்ஙனமே உலகவறவியை அடைந்து, அதனை மும் முறை வலம் வந்து பணிந்தாள். வெயிலால் வெதும்பிய கானகத்தில் பெருமழை தோன்றினாற்போல அமுத சுரபியுடன் அவ் அம்பலத்தில் ஏறி நின்றாள். "இதோ! என் கையில் ஆபுத்திரன் கையிலிருந்த அமுதசுரபி இருக்கிறது. உணவருந்தும் விருப்புடையார் அனைவரும் வருக," என்று கூறினாள்.

மணிமேகலையின் கனிந்த மொழி கேட்ட பலரும் உலகவறவியைச் சூழ்ந்தனர். அவள் வாரி வழங்கிய உணவை உண்டு பசி தணிந்தனர். எந்த நேரத்திலும் மக்கள் உண்ணும் ஒலியே அந்த அம்பலத்தில் எழுந்தது.

**உதயகுமரன் அம்பலம் உறுதல்**

மணிமேகலை பிக்குணிக்கோலம் தாங்கி உலகவறவியில் புக்குத் தங்கிய செய்தியைச் சித்திராபதி கேள்வியுற்றாள். "கோவலன் இறந்தது கேட்டு மாதவியும் மணிமேகலையும் தவக்கோலம் தாங்கியது நமது குல ஒழுக்கத்திற்கு ஒவ்வாத செயலாகும்; பாணன் இறந்த பொழுது அவனுடன் இறவாத யாழினைப் போன்றவரன்றோ கணிகையர்! நறுந்தாது உண்டு வறும்பூத் துறக்கும் வண்டு போன்றவரன்றோ நம் குலப் பெண்டிர்! இம் மணிமேகலையின் தவக்கோலத்தை

மாற்றி, அவளைப் பன்னுளாக விரும்பும் மன்னன் மகன் உதயகுமரன் தேரில் ஏற்றி வருவேன்," என்று அவள் தன் குல மடந்தையரிடம் உறுதி கூறிப் புறப் பட்டாள். உதயகுமரனைக் கண்டு, மணிமேகலை உலக வறவியில் தங்கியுள்ள செய்தியை உணர்த்தினுள்.

சித்திராபதியின் மாய மொழிகளால் மனம் மாறிய உதயகுமரன் தேரேறி உலகவறவியைச் சார்ந்தான். மணிமேகலையைக் கண்டு, "நீ தவக்கோலம் தாங்கிய தற்குக் காரணம் யாது?" என்று வினவினுன். மணி மேகலை பழம்பிறப்பில் உதயகுமரன் தனக்குக் கணவ ஞக இருந்ததை நினைந்து வணங்கினுள்.

> 'பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
> இறத்தலும் உடையது இடும்பைக் கோள்கலம்
> மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
> மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்.'

என்று மறுமொழி பகர்ந்து, ஆங்கிருந்த சம்பாபதியின் கோயிலுள்ளே புகுந்தாள். பின்பு அங்கிருந்து தனது மந்திர வன்மையால் காயசண்டிகை வடிவு கொண்டு அமுதசுரபியைக் கையிலேந்தி வெளிவந்தாள்.

மணிமேகலை வேற்றுருக் கொண்டு வெளிவந்ததை உணராத உதயகுமரன் சம்பாபதித் தெய்வத்தை வணங்கி, மணிமேகலையைக் காட்டியருளுமாறு பாடு கிடந்தான். அப்போது அங்கு விளங்கிய சித்திரத் தெய்வம் ஒன்று உதயகுமரன் கேட்குமாறு, "நீ எம் தேவியின் முன்னர் ஆராயாது சூளுறவு கூறினுய்; அதனுல் சிறிதும் பயனில்லை," என்று பகர்ந்தது. அவ் வுரையைக் கேட்டு உள்ளம் வருந்திய உதயகுமரன் வியப்பும் திகைப்பும் உற்றவனுய் அரண்மனை அடைந் தான்.

### சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்குதல்

காயசண்டிகை வடிவத்துடன் வெளிப் போந்த மணிமேகலை அவ்வடிவத்தை மாற்றுமலேயே தனது அறச்செயலை ஆற்றி வந்தாள். ஒருநாள் அவள் அப் புகார் நகரத்திலுள்ள சிறைக்கோட்டத்தின் பக்கத்தே சேர்ந்தாள். அங்குப் பசியால் வந்துற்ற மக்களை அருளுடன் நோக்கி அமுதூட்டினாள். அவள் ஒரு பாத்திரத்திலிருந்தே பலருக்கும் உணவளித்தலைக் கண்ட சிறைக் காவலர் பெருவியப்புக் கொண்டனர். அச் செய்தியைச் சோழனாகிய மாவண்கிள்ளிக்கு அறிவித்தனர். அம் மன்னன், மணிமேகலையை வரவழைத்து, அவள்பால் அமுதசுரபியின் சிறப்பைக் கேட்டு அறிந்தான். அவளை நோக்கி, "யான் செய்ய வேண்டுவது யாது?" என்று கேட்டான். அவள், "இச் சிறைக்கோட்டத்தை அழித்து அறவோர் வாழும் அறக்கோட்டமாக ஆக்குதல் வேண்டும்," என்று அன்புடன் வேண்டினாள். சோழன், அன்றே அவள் விரும்பிய வண்ணம் அச் சிறைச்சாலையைச் சிறந்த அறச் சாலையாக்கி அகமகிழ்வித்தான்.

### காஞ்சனன் வாளால் எறிதல்

மன்னன் மகனாகிய உதயகுமரன் மணிமேகலைபால் கொண்ட விருப்பம் குன்றாதவனாய், மீண்டும் அவள் இருக்கும் உலகவறவியை அடைந்தான். அப்பொழுது காயசண்டிகையைக் காணுதற்கு வந்த அவள் கணவனாகிய காஞ்சனன் என்னும் விஞ்சையன், காயசண்டிகை வடிவத்துடன் அறச்செயல் புரியும் மணிமேகலையைக் கண்டான். அவள், தன் மனைவியே என்று நினைந்து அவள் அருகில் சென்று காதல் நட்பினைப் புலப்படுத்தும் கனிந்த மொழிகளைப் பேசினான். அவள்

அவற்றைச் சிறிதும் மதியாமல் ஆங்கு நின்ற உதய குமரனை நெருங்கி, அவனுக்கு இளமைநிலையாமையைக் குறித்து அறிவுறுத்த முற்பட்டாள்.

அப்பொழுது மணிமேகலை இயல்பாக அங்கு வந்த நரைமூதாட்டி ஒருத்தியை உதயகுமரனுக்குக் காட்டினாள். இவளுடைய உறுப்புக்கள் இளமையில் விருப்பினை விளைக்கும் வனப்புடையனவாக இருந்தன; இம் முதுமைப் பருவத்தில் அவை இயல்பு திரிந்து எழில் கெட்டு வெறுக்கத் தக்கனவாய் இருத்தலைக் காண்;

**‘ பூவினும் சாந்தினும் புலால்மறைத் தியாத்துத்**
**தூசினும் மணியினும் தொல்லோர் வகுத்த**
**வஞ்சம் தெரியாய் மன்னவன் மகனே.’**

என்று அறிவுரை கூறி நின்றாள்.

அவள் அவ்வாறு கூறுதலைக் கேட்ட காஞ்சனன், ‘காதல் குறிப்புடனேயே காவலன் மகனுக்கு நீதி ஓதுகின்றாள் இவள்; அவன்மீது கொண்ட காதலால் நம்மை மறந்தாள்’ என்று தவறாக எண்ணினான். புற்றில் அடங்கும் அரவைப்போல் அவ் உலகவறவியில் புகுந்து அற்றம் நோக்கி இருந்தான். மணிமேகலையின் அறிவுரை கேட்டு அகன்ற உதயகுமரன் மீண்டும் நள்ளிருளில் உலகவறவியை நண்ணினான். இவனது வரவை எதிர்நோக்கி இருந்த காஞ்சனன் கடுஞ்சினத்துடன் விரைந்து எழுந்து சென்று அவன் தோளைத் துணித்து வீழ்த்தினான். பின்னர்க் காயசண்டிகையைக் கைப் பற்றக் கருதி அவள் அருகே சென்றான்.

**காஞ்சனன் உற்ற கவலை**

அப்பொழுது அங்குள்ள கந்திற்பாவை அக் காஞ்சனனை நோக்கி, “இவள் உன் மனைவியாகிய காய

சண்டிகை யல்லள். மணிமேகலையே அவளது வடிவத்தைத் தாங்கியுள்ளாள். நின் மனைவி பசி நோய் நீங்கி வான் வழியே செல்லும்பொழுது விந்தமலைக்கு நேராக மேலே சென்றாள். அம் மலையைக் காக்கும் விந்தாகடிகை என்பவள் அவளைச் சாயையினால் இழுத்துத் தன் வயிற்றில் அடக்கிக்கொண்டாள். அதனாலேயே அவள் நின்னை வந்தடையவில்லை," என்று உரைத்தது. அதுகேட்ட காஞ்சனன் மனம் கன்றித் தன் நகர் நோக்கிச் சென்றான்.

**கந்திற்பாவை கட்டுரைத்தல்**

காஞ்சனன் கை வாளால் உதயகுமரன் வெட்டுண்டு இறந்த செய்தியை மணிமேகலை தெரிந்தாள். உடனே அவள் கொண்ட வேற்றுருவை ஒழித்தாள். உதயகுமரன் இறந்து கிடந்த இடத்தை அடைந்து முற்பிறப்பு, இப் பிறப்புச் செய்திகளைக் கூறிப் பலவாறு புலம்பினாள். அவனது உடலைத் தீண்டும் விருப்புடன் அருகில் சென்றாள். அப்பொழுது அங்கிருந்த ந்திற்பாவை, "நீ இவன்பால் செல்லாதே; இவன் றந்தது குறித்து வருந்தாதே," என்று தெய்வ வாக் ரல் தெளிவுறுத்தியது.

அதுகேட்ட மணிமேகலை அக் கந்திற்பாவையிடத்தே உதயகுமரன் வெட்டுண்டு இறந்ததற்கு உற்ற காரணத்தைக் கேட்டு அறிந்தாள். பின்னர்த் தனக்கு நடக்கவிருக்கும் எதிர்கால நிகழ்ச்சிகளையும் சொல்லக் கேட்டாள். கந்திற்பாவையின் மொழிகளைக் கேட்டுக் கவலையும் மயக்கமும் நீங்கினாள். அவ்வளவில் கதிரவன் உதயமானான்.

### மணிமேகலை சிறைப்படல்

பொழுது புலர்ந்ததும் உதயகுமரன் வெட்டுண்டு இறந்த செய்தியைச் சக்கரவாளக் கோட்டத்தில் வாழும் தவமுனிவர்கள் அறிந்தனர். அவர்கள் அரசன் கோயிலை அடைந்து நடந்த செய்தியை அரசனுக்கு அறிவித்தனர். அதுகேட்ட அரசன், தன் மகன் மடிந்ததற்குச் சிறிதும் மனம் வருந்தவில்லை. உடனே, தன் அமைச்சனாகிய சோழிகவேனாதியை அழைத்தான். "மனுவேந்தன் மரபில் ஒரு தீவினையாளன் பிறந்தான் என்ற பழிச்சொல் ஏனைய மன்னர்களின் செவியில் சேர்வதற்குமுன் உதயகுமரன் உடலைப் புறங்காட்டில் கொண்டு பொசுக்குக; கணிகையின் மகளாகிய மணிமேகலையையும் சிறைப்படுத்துக," என்று கட்டளையிட்டான். அரசன் ஆணையைச் சிரமேல் கொண்ட அமைச்சன் அவ்வாறே செய்தான்.

### அரசமாதேவிக்கு அறவுரை

மகனை இழந்த துயரால் வருந்திய இராசமாதேவி சிறைப்பட்ட மணிமேகலையை வஞ்சித்து வருத்தும் கருத்துடையவளாய் அவளை விடுதலை செய்யுமாறு வேந்தனை வேண்டினாள். அரசனும் அங்ஙனமே மணிமேகலையை விடுதலை செய்தான். அவளைச் சிறையினின்றும் விடுவித்த இராசமாதேவி அவளைத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றாள். அவட்கு மயக்கும் மருந்தூட்டியும், கற்பை அழிக்குமாறு கல்லா இளைஞனை ஏவியும், புழுக்கறையுள் அடைத்துப் பூட்டியும் பலவாறு துன்பம் செய்தாள். அவள் ஒன்றாலும் துன்பம் சிறிதும் இன்றி மலர்ந்த முகத்துடன் இருந்தாள்.

மணிமேகலையின் பேராற்றலைக் கண்டு வியந்த பெருந்தேவி, அவளை நோக்கி, "மகனை இழந்த பெருந் துயர் பொறுக்கலாற்ருது இத் தீங்குகளைச் செய்தேன்; இவற்றைப் பொறுத்தருள வேண்டும்," என்று வேண்டினுள். அரசியின் தெளிவைக் கண்ட மணிமேகலை அவட்கு அறவுரை பகர்ந்து அருளுடன் அவளைத் தேற்றினுள்.

'உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ
உடற்கழு தனையேல் உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது
அவ்வுயிர்க் கன்பினை யாயின் ஆய்தொடி
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்.'

என்று அரியதொரு பொருளுரை பகர்ந்தாள்.

இங்ஙனம் மணிமேகலை தனது ஞானமாகிய நீரை இராசமாதேவியின் செவியில் வார்த்தாள். அவளது துயரமாகியநெருப்பினை அந்நீரால் அவித்தாள். அதனுல் உள்ளம் தெளிந்த கோப்பெருந்தேவி, மணிமேகலையை வணங்கினுள். அவள் அதனைப் பொருளாகித் தானும் அரசியை வணங்கினுள்.

**மணிமேகலை ஆபுத்திரன் நாடு அடைதல்**

இவ் வேளையில் சித்திராபதி இராசமாதேவியை நெருங்கி மணிமேகலையைத் தன்னுடன் அனுப்புமாறு வேண்டினுள். இராசமாதேவி அதற்கு இசையாது மறுத்துரைத்தாள். அதே சமயத்தில் மணிமேகலையை மீட்டற்கு அறவணவடிகள், மாதவி, சுதமதி இருவருடனும் ஆங்கு வந்துற்றனர். இராசமாதேவி அடிகளின் திருவடிகளை இறைஞ்சினுள். அவர் அவட்கு அறவுரை

யருளி, மணிமேகலையை நோக்கி, "நீ பல்வேறு இடங்கட்குச் சென்று நல்லறங்களைக் கேட்டுத் திரும்புக," என்று சொல்லி விடையளித்தார். மணிமேகலையும் அவ்விடத்தினின்று நீங்கி வான்வழியே ஆபுத்திரன் புண்ணியராசனுய்ப் பிறந்து ஆட்சி புரியும் நாட்டை அடைந்தாள்.

ஆபுத்திரன் நாட்டை அடைந்த மணிமேகலை அங்கிருந்த தருமசாவகன் என்னும் தவமுனிவனது இருக்கையில் தங்கினுள். அங்கு வந்த புண்ணியராசன் தவச்சாலையில் இருந்த மணிமேகலையைப் பற்றித் தெரிந்தான். அவள் அவ்வரசனது பழம்பிறப்பை அவனுக்கு விளங்க உரைத்தாள். "நின் கையிலிருந்த அமுதசுரபியே என் கையில் புகுந்தது; உன் பழம்பிறப்பை அறிய என்னுடன் மணிபல்லவத்திற்கு வருக," என்று சொல்லி மணிமேகலை வான்வழியே மணிபல்லவம் சென்று தரும பீடிகையை வணங்கி நின்ருள்.

**மணிமேகலை வஞ்சிமாநகர் புகுதல்**

சின்னுட்களில் புண்ணியராசன் மணிபல்லவத்தை வந்து நண்ணினுன். அவனை மணிமேகலை எதிர்கொண்டு வரவேற்றுத் தரும பீடிகையைத் தரிசிக்குமாறு செய்தாள். அவன் அதனை வணங்கித் தன் பழம்பிறப்பைத் தெரிந்து மகிழ்ந்தான். அப்பொழுது அங்குத் தோன்றிய தீவதிலகை காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்ட செய்தியையும், மாதவி, சுதமதி, அறவணர் ஆகியோர் வஞ்சிமாநகர் சென்று சேர்ந்த செய்தியையும் மணிமேகலைக்குத் தெரிவித்தாள். அது கேட்ட மணிமேகலை, பிரியமாட்டாது வருந்தும் புண்ணியராசனைத் தேற்றி, அவனது நாட்டிற்கு ஏகுமாறு

வழி கூட்டினாள். பின்னர், வான்வழியாக வஞ்சிமா நகரை அடைந்து, தன் தாயாகிய கண்ணகித் தெய்வத்தின் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டு நின்றாள்.

**அறவுரை கேட்டு அறிதல்**

பத்தினித் தெய்வம் தன்னை வழிபட்ட மணிமேகலைக்கு எதிர்காலத்தில் தனக்கு நிகழவிருக்கும் நிகழ்ச்சிகளைக் கூறினாள். பல்வகைச் சமயவாதிகளைக் கண்டு, அவர்தம் அறங்களைக் கேட்டு உணருமாறும் அதற்கு வேற்றுருக்கொள்ளுமாறும் அறிவுறுத்தினாள். தாயின் நல்லுரை கேட்ட மணிமேகலை, தனக்கு மணிமேகலா தெய்வம் தந்த மந்திரத்தால் ஒரு மாதவன் வடிவைத் தாங்கினாள். சமயக்கணக்கர் பலர் வாழும் இடங்கட்குச் சென்றாள். பிரமாணவாதி முதல் பூதவாதி ஈறாக உள்ள பலரையும் கண்டு அவர்தம் அறங்களையெல்லாம் கேட்டறிந்தாள். அங்குள்ள பௌத்தப் பள்ளியை அடைந்து, ஆங்குத் துறவு பூண்டு வாழும் கோவலன் தந்தையைக் கண்டு, தனக்கு நேர்ந்தவற்றை எல்லாம் கூறினாள். அவனும் தன் வரலாற்றைக் கூறி, அங்கு வந்த அறவணர் முதலான மூவரும் காஞ்சிமா நகருக்குச் சென்ற செய்தியை அறிவித்தான். "மழை வளம் இல்லாமையால் காஞ்சியில் மக்கள் கடும்பசியால் வாடுகின்றனர்; அங்குச் செல்க," என்று வேண்டினான்.

**அறவணர் அறவுரை பெறுதல்**

மாசாத்துவான் சொல்லிய செய்தியைக் கேட்ட மணிமேகலை தன் உண்மை வடிவத்துடன் காஞ்சிமா நகரை அடைந்தாள். அங்குப் பசிப்பிணியால் வருந்தும் மக்கட்கு அமுதசுரபியைக்கொண்டு இன்னமுதூட்டி

இன்னல் களைந்தாள். இவளது அறச்செயல் நாடெங்கும் பரவியது. அதனை உணர்ந்த அறவணவடிகளும் மாதவியும் சுதமதியும் மணிமேகலை இருந்த அறச்சாலைக்கு வந்தனர். அவர்களை மணிமேகலை மகிழ்ச்சியுடன் வரவேற்று உணவளித்து உபசரித்தாள். அறவண அடிகளைப் பணிந்து, புத்தன் அருளிய புத்தமுதாம் மெய்யறத்தைச் சித்தம் தித்திக்குமாறு உபதேசிக்க வேண்டினாள். அவர் புத்த சமய உண்மைகளைச் சித்தம் கொள்ளுமாறு மணிமேகலைக்கு அறிவுறுத்தினார்.

**பவமறத் தவம்புரிதல்**

அறவண அடிகளின் அருளுரை கேட்ட மணிமேகலை அவர் திருவடிகளை வணங்கி நின்றாள். அவர் புத்தர் பிரானின் புண்ணிய வரலாற்றை உரைத்தருளி, 'நின் அகவிருள் அகல்வதாக' என்று வாழ்த்தினார். மணிமேகலை, அவர் காட்டிய ஞான விளக்கின் துணைகொண்டு, தவத்திறம் பூண்டு தருமம் கேட்டு, இப்பவத்திறம் அறுவதாக என்று அந்நகரிலேயே தவம் செய்திருந்தாள். இம் மணிமேகலை, வள்ளுவர் சொல்லிய தவத்தின் இலக்கணமாகிய,

'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.'

என்ற வாய்மொழிக்குத் தக்க சான்றாய்த் திகழ்ந்தாள்.

## ௩௰. மணிமேகலையில் ஒளிரும் மணிகள்

சீத்தலைச் சாத்தனார் செந்தமிழ்த் தாயின் சிற்றிடையினை அணி செய்யும் மேகலையாக அமைத்தருளிய மணிமேகலைக் காவியத்தில் சுடர் வீசும் மணிகளைப் போன்று பல அறங்கள் சொல்லப்படுகின்றன. காவியத் தலைவி

யாகிய மணிமேகலை புத்த மதத்தைச் சார்ந்த பெண் துறவியாகத் தூயவாழ்வு நடத்தினள். ஆதலின் அம் மதச் சார்புடைய அறங்கள் பல ஆங்காங்கு விரித்து உரைக்கப்படுகின்றன.

மணிமேகலையின் தாயாகிய மாதவி, தன் காதலனாகிய கோவலன் மதுரை மாநகரில் அடைந்த கொடுந் துயர் கேட்டு மனைவாழ்வைத் துறந்தாள். அறவண வடிகளின் அடிமிசை விழுந்து பணிந்து, காதலன் உற்ற கடுந்துயரைக் கூறி வருந்தினள். அவர் அவட்குப் புத்த மதத்தின் பொன் போன்ற அறங்களாகிய நால்வகை வாய்மைகளையும் ஐவகைச் சீலத்தையும் அறிவுறுத்தினர்.

**'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்**
**பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்**
**பற்றின் வருவது முன்னது பின்னது**
**அற்றோர் உறுவது அறிக.'**

என்பது அறவணர் அருளிய அறவுரையாகும். பிறப்பால் வருவது பெருந்துன்பமே என்றும், பிறவாமையே பேரின்பம் என்றும், ஆசை காரணமாகவே பிறவி ஏற்படுகிறது என்றும், பிறவாமையை அடைதற்கு உலகப் பற்றையெல்லாம் ஒருங்கே துறக்கும் துறவே உயர்ந்த வழியென்றும் துறவின் உயர்வை அம் மாதவிக்குத் தெளிவுறுத்தினர்.

உதயகுமரன், மணிமேகலையின்மீது கொண்ட காதல் மயக்கத்தால் உவவனம் அடைந்து, ஆங்குத் தனித்து நின்ற சுதமதியிடம் அவள் தன்மையாதெனக் கேட்டான். அச் சுதமதி அவன் அறிவு திருந்துமாறு மக்கள் உடலின் மிக்க இழிநிலையைத் தக்கவாறு எடுத்துரைத்தாள்.

'வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கின் புலால்புறத் திடுவது
மூப்பு விளிவுடையது தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவில் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இது.'

"வினைப்பயனால் வந்த இவ் உடம்பு வினைக்கே விளைநிலமாக உள்ளது. மணந்தரு பொருள்களால் புனையப்படவில்லையாயின் புலால் நாற்றம் வீசுவது. முதுமையுற்று அழியும் இயல்புடையது. பொல்லாத நோய்கட்கும் பொருந்தாத பற்றுக்களுக்கும் புகலிடமானது. அரவு அடங்கும் புற்றைப் போலச் செற்றத்திற்கு உறைவிடமானது. அவலம், கவலை, கையாறு, அழுங்கல் ஆகிய நான்கும் அகலாத உள்ளத்தைத் தன்னிடத்தே உடையது. இத்தகைய இழிந்த உடம்பின்மீது நினக்கு இத்துணைக் காதல் எழுவானேன்?" என்று சுதமதி சொல்லிய நல்லற உரைகள், மக்கள் யாக்கையின் இழிநிலையைத் தெளிவுற விளக்குவனவாகும்.

உவவனத்தினின்று நீங்கிய உதயகுமரன் இரவுப் பொழுது முழுதும் துயிலாது, மணிமேகலையைப் பற்றியே எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தான். அவன் முன்னர் மணிமேகலா தெய்வம் தோன்றி, அரசியலைப் பற்றிய அறவுரையைக் கூறியது. தவத்திறம் பூண்ட மணிமேகலைபால் கொண்ட காதல் தவறுடையதாகும் என்று அறிவுறுத்தியது. அரசன் மகனாகப் பிறந்து, இத்தகைய அவச்செயல் புரிதல் தக்கதன்று என்று இடித்துரைத்தது.

'கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்.'

என்று சிறந்த அரசியல் அறத்தை எடுத்துரைத்தது.

மணிபல்லவத்தில் மணிமேகலை அமுதசுரபியாகிய தெய்வப் பாத்திரத்தைப் பெறுதற்கு உறுதுணை புரிந்த தீவதிலகை, அவட்கு அருளறத்தின் சிறப்பினை அழகுற விளக்குகின்றாள். பல பாவங்களையும் துணிந்து செய்யத் தூண்டும் பாவியாகிய பசிப்பிணியின் கொடுமைகளைத் தொகுத்து உரைத்தாள் அத் தீவதிலகை.

'பசிப்பிணி என்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்(கு) என்நா நிமிராது.'

பசியால் வருந்தும் ஏழைமக்கட்கு உணவூட்டிப் பசியாற்றும் அருளறத்தின் மாண்பு அளவிடற்கு அரியது. அதனைப் புரிவோரது புகழை நாவால் நவில இயலாது என்று மணிமேகலைக்கு நன்கு அறிவுறுத்தினாள் அத் தெய்வ நங்கை. மேலும், செல்வர்க்கு ஒரு பொருளை உதவுவோர் அறத்தினை விலை கூறுவோரே. உண்மையான அறநெறி வாழ்க்கை என்பது வறிஞர்களின் அரிய பசியை அகற்றுவோரது வாழ்க்கையே. ஆதலின் வறுமையால் வாடுவோர்க்கு வளமான உணவை வழங்குவோர் உயிரை வழங்கும் உத்தமராவர்.

'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே.'

என்று அருளறம் புரிவாரது அருமையையும் அத் தீவதிலகை விளக்கினாள்.

உலகவறவியில் உதயகுமரன், காஞ்சனனால் வெட்டுண்டு இறந்த செய்தியைச் சக்கரவாளக்கோட்டத்துத் தவமுனிவர்கள் அரசனுக்கு அறிவித்தனர். காமத்தால் அறிவிழந்த காளையர் பலர் கற்புடைய மகளிரை நெருங்கியும், தவமகளிரை விரும்பியும் தண்டிக்கப்பட்ட பண்டை வரலாறுகளை அவனுக்கு எடுத்துரைத்தனர். அப்போது அவர்கள் 'அறமே உயிர்க்கு அருந்துணையாவது' என்னும் உண்மையை அரசனுக்கு வலியுறுத்துகின்றனர்:

> **'இளமையும் நில்லா யாக்கையும் நில்லா**
> **வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா**
> **புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்**
> **மிக்க அறமே விழுத்துணை யாவது.'**

என்பது அவர்கள் அரசனுக்கு உரைத்த அறவுரையாகும். 'யாம் இதுபொழுது இளம்பருவத்தினை உடையோம்; ஆதலின் பின்னர் அறம் செய்து கொள்ளலாம் என்று எண்ணாமல் கையில் பொருள் உள்ள காலத்திலேயே கரவாது அறத்தைச் செய்க; அதுவே பொன்றுங்கால் பொன்றாத் துணையாக நின்று உதவும்' என்று கூறிய வள்ளுவர் வாய்மொழியை நன்கு வலியுறுத்தியது அத் தவமுனிவர்களின் அறவுரை.

இனி, மகனை இழந்த பெருந்துயரால் வருந்தியிருந்த இராசமாதேவிக்கு மணிமேகலை கூறிய அறவுரை அவளது தெளிந்த அறிவை விளக்குவதாகும். "அரசியே! நீ உன் மகனது உடலின் பொருட்டு அழுதாயோ? உயிரின் பொருட்டு அழுதாயோ? அவனது உடம்பு ஒழிந்ததற்கே வருந்தி அழுதேனென்றால் அவ் உடலைச் சுடலையில் கொண்டு எரித்தற்குக் கொடுத்தது நீயன்றோ? அன்றி, உயிர் நீங்கியதற்கு அழுதேனென்றால்

அவ்வுயிர் நிலைபேறுடையதாகலின் அது செய்த வினை வழியே ஓர் உடல் எடுத்திருக்கும். அவ் உடல் இன்னதெனத் தெரிதல் அரிதாகும். அவ் உயிர்க்கு அன்பு செய்ய விரும்பினால் எவ்வுயிர்க்கும் இரங்கல்வேண்டும். அங்ஙனம் இரங்கினால் பலவாகிய உயிர்க் கூட்டத்துள் நின் மகன் உயிரும் ஒன்றுமாதலின் அதற்கு அன்பு செய்தனையாவாய்," என்று மணிமேகலை, இராசமா தேவிக்கு அறந்தரும் மணிமொழி பகர்ந்தாள். அவள் அருளறத்தை மேற்கொண்டு ஒழுகுமாறு அறவுரை வழங்கினாள்.

இங்ஙனம் மணிமேகலை, தன்னைப் பலவாறு துன்புறுத்திய அரசமாதேவியை மன்னித்ததேயன்றி அறவுரை கூறி, அவள் துயரம் ஆறுமாறு செய்தாள். 'துன்பம் செய்தவர்க்கும் இன்பம் செய்தலே இணையற்ற சால்பு' என்று பொருளுரை யருளிய பொய்யில் புலவரின் பொன்மொழிக்குப் பொருந்திய சான்றாய் மணிமேகலை திகழ்ந்தாள் அன்றோ!

மேலும், இந் நூலாசிரியர் பல இடங்களில் கற்புடை மகளிரின் மாண்பினைப் பொற்புற எடுத்துப் போற்றுகின்றார். காம இன்பத்தின் இழிவினைக் கடிந்துரைக்கின்றார். மக்கள் யாக்கையின் நிலையாமையைப் பலவிடத்தும் வலியுறுத்துகின்றார். வினையுணர்வை நூல் முழுதும் விளக்கிச் செல்கின்றார். தூய துறவற வாழ்வே பேரின்பத்தை நல்குவது என்று சொல்லுகின்றார். இங்ஙனம் பற்பல அறவுரைகளாகிய மணிகளை இடையிடையே பதித்துத் தமது காவியமாகிய அணியினை ஒளி வீசுமாறு செய்த சீத்தலைச் சாத்தனாரின் செந்தமிழ்ப் புலமைத்திறம் கற்பார்க்குக் கழி பேருவகை தருவதாகும்.

# ந. சேக்கிழார்

## க. ஆசிரியர் வரலாறு

### தொண்டை நாட்டு வேளாளர்

'சான்றோர் உடைத்து' என்று ஆன்றோரால் போற்றப் பெற்ற தொண்டைநாடு பண்டை நாளில் இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் புலியூர்க் கோட்டம் என்பதொன்று. அது கோயூர், பூவிருந்தவல்லி, குன்றத்தூர் முதலிய ஊர்களைக் கொண்ட நிலப்பகுதியாகும். அது புலியூரைத் தலைநகரமாகக் கொண்ட கோட்டமாதலின் புலியூர்க் கோட்டம் என்று பெயர்பெற்றது.

பெரியபுராணப் பெருங்காவியத்தை அருளிய சேக்கிழார் தொண்டை நாட்டுப் புலியூர்க் கோட்டத்திலுள்ள குன்றத்தூரில் தோன்றினர். காடு கெடுத்து நாடாக்கிய சோழன் கரிகாலன் தொண்டைநாட்டை வளப்படுத்த நாற்பத்தெண்ணாயிரம் குடிகளை அந்நாட்டில் குடியேற்றினன். அங்ஙனம் குடியேறினர் அனைவரும் தொண்டைமண்டல வேளாளர் என்று வழங்கப்பெற்றனர். அவர்கள் கிழார் என்ற சிறப்புப்பெயரால் குறிக்கப்பட்டனர். அவருள் கூடல் கிழான், புரிசை கிழான், வெண்குளப்பாக் கிழான், சேக்கிழான் என்பவர் குடிகள் சிறப்புற்று விளங்கின.

### சேக்கிழார் பெயர்க்காரணம்

கிழான் என்பது கிழமை என்ற பண்படியாகப் பிறந்த சொல். அதற்கு 'உரிமையுடைய தலைவன்' என்பது பொருள். கூடல்கிழான் என்பது கூடல் என்

னும் ஊருக்கு உரிமைபூண்ட தலைவன் என்று பொருள் படும். **சேக்கிழார்** என்பது சேவூர்க்கிழான் என்பதன் மரூஉப் பெயர் என்பர் சிலர். அது சே என்ற ஊருக்குத் தலைவன் எனப் பொருள்படுவதாகும். இச் சேக்கிழான் குடியில் பிறந்து பெருமையுற்றவரே **சேக்கிழார்** என்னும் செந்தமிழ்ப் புலவர்.

இனி, சே என்னும் சொல் காளையைக் குறிக்குமாதலின், காளையைக் கொண்டு உழவுத்தொழில் புரியும் வேளாளர்க்குப் பொதுப் பெயராய்ச் சேக்கிழான் என்பது விளங்கிற்று என்பர் சிலர். அன்றிச் சேக்கிழான் என்பது காளை வாகனத்தை உடைய கடவுளாகிய சிவபெருமானைக் குறிக்கும்; அப்பெயரைத் தனக்குப் பெயராகக்கொண்ட வேளாளன் ஒருவனது மரபில் உதித்தவரே பெரியபுராண ஆசிரியர் என்று பேசுவார் வேறு சிலர்.

**குன்றத்தூர் அமைப்பு**

சேக்கிழார் தோன்றும் சிறப்பெய்திய குன்றத்தூர் தன்பால் குன்றம் ஒன்றைக் கொண்டதாகவே இன்றும் விளங்குகின்றது. அவ்வூரில் இன்றும் சேக்கிழார் மரபினராகிய வேளாளர் சிறந்து விளங்குகின்றனர். அவ்வூர் திருநாகேசுவரம், நத்தம் என்னும் இருபிரிவுகளைக் கொண்டுள்ளது. திருநாகேசுவரம் என்பது சேக்கிழார் பெருமான் கட்டிய திருநாகேசுவரம் கோவிலைத் தன்னகத்தே கொண்ட தனிப்பகுதியாகும். அக்கோவிலைச் சுற்றியுள்ள இடங்களில் செங்குந்த மரபினர் வாழ்கின்றனர். மற்றொரு பகுதியாகிய நத்தம், சேக்கிழாரும் அவர் மரபினராகிய வேளாளப் பெருமக்களும் வாழ்ந்த இடமாகும். அந் நாளில் சேக்கிழார் வாழ்ந்த இல்லம்

இன்று அவரது திருக்கோவிலாக இருக்கின்றது. சேக்கிழார் கோவிலை அடுத்துப் 'பாலறாவாயர் குளம்' என்பதொரு நீர்நிலை அமைந்துள்ளது. அதனை இப்பொழுது 'பல்லவராயர் கேணி' என்று சொல்லுகின்றனர். பாலறாவாயர் என்பவர் சேக்கிழாரின் தம்பியாராவர்.

**சேக்கிழார் புராணம்**

நம் தமிழகத்தில் வாழ்ந்த பழந்தமிழ்ப் புலவர்கள் தங்கள் வரலாற்றை வரையாது மறைந்தனர். மற்றையோரும் அதனைச் செய்ய மறந்தனர். ஆனால், தமிழ்நாடு செய்த தவப்பயனாலும், சிறப்பாகச் சைவ உலகம் செய்த தவப்பேற்றாலும் சேக்கிழாருக்குச் சிறந்த வரலாற்றுநூல் கிடைத்துள்ளது. சைவசமய சந்தான குரவருள் ஒருவராய **கொற்றவன்குடி உமாபதிசிவனார்** 'சேக்கிழார்புராணம்' செய்துவைத்துள்ளார். உமாபதி சிவனார் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த பைந்தமிழ்ச் சைவசித்தாந்தப் பேரறிஞர். இவர் சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் சிவப்பிரகாசம் முதலிய எட்டு நூல்கள் இயற்றியவர். இவர் சங்கற்ப நிராகரணம் என்னும் தமது நூலை இயற்றிய காலம் சாலிவாகன சகாப்தம் கஉஙரு என்று குறித்துள்ளார். அது கி.பி. 1313 ஆகும். இவர் சேக்கிழார் புராணத்தை எப்பொழுது இயற்றினார் என்பது தெரியவில்லை. சேக்கிழார் பெரியபுராணம் இயற்றிய காலம் **இரண்டாம் குலோத்துங்க சோழ மன்னன்** காலமாகிய பதினோராம் நூற்றாண்டின் இறுதி என்று சரித ஆசிரியர்கள் கணித்துள்ளனர். ஆகவே, சேக்கிழார் காலத்திற்கு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகட்குப் பிற்பட்டவர் உமாபதி சிவனார். அவர் இயற்றிய சேக்கிழார் புராணம் உண்மையான வரலாறு என்பதைத் திண்மை செய்யும் கல்வெட்டுச் சான்றுகள் பலவுள.

### பெற்றோரும் இயற்பெயரும்

தொண்டை மண்டல வேளாளர் குலத்தவராகிய **வெள்ளியங்கிரி முதலியார்** சேக்கிழாரின் தந்தை என்றும் தாய் **அழகாம்பிகை** என்றும் காதுவழிச் செய்தியொன்று வழங்குகின்றது. சேக்கிழாரின் பெற்றோரைப்பற்றி உமாபதிசிவனார் யாதும் உரைக்கவில்லை. இவரது இயற்பெயர் **அருண்மொழித்தேவர்** என்பர். திருமழபாடிச் சிவன் கோவிலிலுள்ள கல்வெட்டு ஒன்றில் "ஜெயங் கொண்ட சோழ மண்டலத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் இராமதேவனான உத்தமசோழப் பல்லவராயன்," என்று சேக்கிழார் குறிக்கப்படுகின்றார். ஆதலின் சேக்கிழாரது இயற்பெயர் **இராமதேவன்** என்று கல்வெட்டு ஆராய்ச்சியாளர் சொல்லுவர். நரசிங்கமுனையரையர், புருடோத்தம நம்பி போன்ற சிவனடியார்கள் வைணவப்பெயர் தாங்கியிருந்தமை போன்று, சேக்கிழாரும் இராம தேவன் என்ற இயற்பெயரைப் பெற்றிருக்கலாம்.

### சேக்கிழார் புலமைத்திறம்

சேக்கிழான் குடியில் பிறந்தவராகிய இராம தேவன் என்பார் இளமையிலேயே தமிழிலுள்ள சிறந்த இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். பல் வேறு சமயசாத்திரங்களைக் கற்றுணர்ந்தார். இவரது நுண்ணறிவைச் சோழன் அறியும் வாய்ப்பொன்று நண்ணியது. அந்நாளில் சோழநாட்டை ஆண்ட அநபாயன் என்னும் மன்னன், ஒருகால் தன் பேரவையில் இருந்த அறிஞர்களை நோக்கி, "நிலம், கடல், மலை இவற்றில் பெரியன யாவை?" என்று வினவினான். ஆங்கிருந்தாருள் எவரும் அதற்கு விடையிறுத்தாரில்லை.

அப் பேரவைக்கண் வேளாளர் குலத்தினராகிய அரசியல் அலுவலாளர்களும் அமர்ந்திருந்தனர். அவ ரெல்லாம் அரசன் வினவைப்பற்றிப் பலவாறு பேசிக் கொண்டிருந்தனர். அதனைச் செவியுற்ற இராம தேவன் அரசனது வினவிற்கேற்ற விடையினை ஓலை யொன்றில் எழுதி அரசன் பார்வைக்கு அனுப்பினர்.

**சேக்கிழார் அமைச்சராதல்**

இராமதேவனுகிய சேக்கிழார் எழுதியனுப்பிய விடையினை வேந்தன் அநபாயன் கண்டு வியந்தான். அவ் விடை, உலகப் பொதுமறையாகிய திருக்குறளி லிருந்து எடுத்து எழுதப்பெற்றிருந்தது.

> **‘காலத்தி னற்செய்த நன்றி சிறிதெனினும்**
> **ஞாலத்தின் மாணப் பெரிது,’**
>
> **‘பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
> **நன்மை கடலிற் பெரிது,’**
>
> **‘நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்**
> **மலையினும் மாணப் பெரிது.’**

சிறந்த அறநூலாகிய திருக்குறளில் காணும் இம் மூன்று பாக்களும், தான் கேட்ட வினவிற்கு ஏற்ற விடையாக விளங்குவதைச் சோழன் கண்டான். இவற்றைக் கண்டெழுதிய தண்டமிழ்ப் புலவரைப்பற்றிப் பல துறை அறிஞர்களிடமும் உசாவி அறிந்தான். இராம தேவன் சோழப் பேரரசின் அமைச்சுரிமை பெறு தற்குப் பெரிதும் தகுதியுடையவர் என்பதைப் பல வகையாலும் அநபாயன் ஆராய்ந்து அறிந்தான். அவரை வரவழைத்துத் தனது பேரரசுக்கு முத லமைச்சராக்கினன். அவர்வழி நின்றொழுகினன்.

**பட்டம் பெறுதல்**

சோழ நாட்டு முதலமைச்சராகப் பதவியேற்ற சேக்கிழான் இராமதேவன் தமது அமைச்சுத் தொழிலைத் திறம்பட நடத்தினர். அரசியல் பொறுப்பு முழுவதையும் அமைச்சரே ஏற்று ஆற்றலுடன் நடத்துவது கண்ட அநபாயன் அவருக்கு **உத்தம சோழப் பல்லவன்** என்னும் உயரிய பட்டத்தை வழங்கிப் பாராட்டினான். இவ் அநபாயன் சிறந்த சிவபக்தன். தில்லைக் கூத்தப்பெருமானிடத்து எல்லையற்ற பத்தி பூண்டவன். இவன் புவனமுழுதுடையாள் என்ற இராசமாதேவியுடன் தில்லைக்குச் சென்று கூத்தப்பெருமானை வழிபட்டான். ஆங்குத் தேரோடும் திருவீதிகள் நான்கையும் பொன்னகரப் பெருவீதிகளும் பின்னடையுமாறு பேரழகு செய்தான். கூத்தப்பெருமான் குடிகொண்ட பேரம்பலத்திற்குப் பொன்வேய்ந்தான். இவ் அரசர்பெருமான், "கூத்தப்பெருமான் பாத தாமரையில் உள்ள தேனைப்பருகும் ஈப்போன்றவன்," என்று திருவாரூர்க் கல்வெட்டுக் குறிக்கின்றது.

**அநபாயன் சிந்தாமணி ஆர்வம்**

இவ் அநபாயன் காலத்தில் சோழநாட்டின் தலைநகரமாக விளங்கியது **கங்கைகொண்ட சோழபுரம்.** எனினும் அவன் தில்லைப் பெருமானிடத்துக் கொண்ட காதலால் அத் தில்லையில் இருந்த அரண்மனையில் தங்கித் தமிழ்நூல்களிலும் சமயநூல்களிலும் சிந்தையைச் செலுத்தினன். ஒருகால் தனது அவைப் புலவர்கள் **சிந்தாமணிக்** காவியத்தைப்பற்றிச் சொல்லக் கேட்டான். அதனைப் புலவர்கள் பலகால் வாசிக்கக் கேட்டு மகிழ்ந்தான்.

**சிந்தாமணியின் சிறப்பு**

சிந்தாமணி ஐம்பெருங்காவியங்களுள் ஒன்றாகும். அது சமண்சமய உண்மைகளை விளக்கும் உயர்ந்த அழகிய நூல். சீவகன் என்பானுடைய வரலாற்றைச் சித்திரிப்பது. அவன் தனது அறிவும் திறனும் காரணமாகப் பல மகளிரை மணந்து இன்புற்ற வரலாற்றை விளக்குவது. அதனால் மணநூல் என்றே பெயர் பெற்று விளங்குவது அந் நூல். அது பத்தாம் நூற்றாண்டில் எழுந்த பைந்தமிழ்க் காவியம். திருத்தக்க தேவர் என்னும் பெருந்தமிழ்ப் புலவர் சொல்லழகும் பொருள் நுட்பமும் பொருந்த விருத்தப்பாவால் ஆக்கிய அருந்தமிழ் நூல். அந் நூலின் இனிமையை உணர்ந்த அநபாயன் எப்பொழுதும் அதனையே கற்பதும் பிறர் சொல்லக் கேட்பதுமாகிய செயலில் ஈடுபட்டிருந்தான்.

**அநபாயனுக்கு அமைச்சர் அறிவுரை**

அநபாயன் கொண்ட சிந்தாமணிப் பற்றினைச் சேக்கிழார் தெரிந்தார். சமணப் பெருங்காவியமாகிய அதனைக் கற்பதாலும் கேட்பதாலும் அரசனது சைவப் பற்றுக் குறைதலுங் கூடும் என்று சேக்கிழார் எண்ணினார்.

> ' அறிகொன்(று) அறியான் எனினும் உறுதி
> உழையிருந்தான் கூறல் கடன்.'

என்று தெய்வப்புலவர் வகுத்தருளிய அமைச்சனது கடமையை அவர் நன்கு உணர்ந்தவர். ஆதலின் ஒரு நாள் அரசனை அணுகி, "சைவம் தழைக்க வந்த தமிழ்ப் பேரரசே! சிந்தாமணி சிறந்த காவியமேயாயினும் தங்களைப் போன்ற அரசன் ஒருவனது வரலாற்றை விரித்துரைப்பதுதானே! அதனைக் கற்பதால் இம்மைக்கோ

மறுமைக்கோ எந்த நலனும் விளையாது. நம் சைவ சமயத்தில் கைம்மாறு கருதாது கடவுள் தொண்டாற்றித் திருவடிப்பேறு எய்திய சிவனடியார்கள் பலர் உளர். அவர்களுடைய வரலாற்றைக் கற்றால் இருமைக்கும் பெரும்பயன் விளையும்; பேரின்ப வீட்டையும் பெறலாம்,'' என்று பணிந்து மொழிந்தார்.

**அடியவர் வரலாறு அறிதல்**

அமைச்சராகிய சேக்கிழார் கூறிய அன்புமொழிகளைப் பண்புடன் கேட்ட அநபாயன், "சிவனடியார் வரலாறுகள் விரிவாகவும் தெளிவாகவும் நமக்குக் கிடைக்கவில்லையே. சுந்தரரின் திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியும் தகுந்த விளக்கத்தைத் தரவில்லையே. அவற்றை விளக்கும் வேறு சான்றுகள் உண்டோ?'' என்று கேட்டான்.

சேக்கிழார், மன்னனைப் பணிந்து, "தாங்கள் குறித்த இரு நூல்களும் சிவனடியார் வரலாறுகளைத் தெளிவாக அறிதற்குப் போதா. நம்பியாண்டார் நம்பி சம்பந்தரைப் பற்றி ஆறு சிறு நூல்கள் பாடியுள்ளார். அப்பரைப் பற்றி ஒரு நூல் பாடியுள்ளார். சம்பந்தரும் அப்பரும் சுந்தரரும் தந்தருளிய தேவாரத் திருமுறைகள் உள்ளன. சேரமான் பெருமாள் பாடிய அந்தாதியும் உலாவும் உள்ளன. காரைக்காலம்மையார் பாடிய சிறு நூல்கள் இருக்கின்றன. திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் நூல் உள்ளது. அடியார்கள் பிறந்தருளிய தலங்களில் மக்களிடையே வழங்கும் பல வரலாறுகள் உண்டு. பல திருக்கோவில்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் இவ் வரலாறுகட்கு உதவி செய்கின்றன. ஆங்காங்குக் காணப்படும் சிற்பங்கள்

வாயிலாகப் பல செய்திகள் புலனாகின்றன. இராசராசப் பெருவேந்தரால் நிறுவப் பெற்ற தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்கள் சுந்தரர் வரலாற்றின் பெரும் பகுதியை விளக்குகின்றன. இவற்றை எல்லாம் அடியேன் ஒருங்கு தொகுத்து வைத்துள்ளேன்,'' என்று அவன் உள்ளம்கொள்ளுமாறு சொல்லி நின்றார்.

### காவியம் இயற்ற வேண்டுதல்

சேக்கிழாரது வாக்கு வன்மையையும் சிறந்த நோக்கையும் கண்ட பேரரசனாகிய அநபாயன் பெருவியப்பும் பேருவகையும் கொண்டான். அவரது பெருமுயற்சியைப் பாராட்டினான். அவரது மதிநுட்பத்தையும் அடியார்மீதுகொண்ட அளவற்ற பற்றையும் எண்ணி யெண்ணி இன்புற்றான். சேக்கிழாரைக் கொண்டே சிவனடியார் வரலாற்றைச் சிறந்த காவியமாக அமைக்கத் துணிந்தான். அவரை அழைத்து, "அமைச்சரே! நீவிர் இன்றே நம் நாட்டு அமைச்சர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுத் தில்லைக்குச் செல்ல வேண்டும். ஆங்கு அமர்ந்து, சிவனடியார் வரலாற்றைச் செந்தமிழ்க் காவியமாகப் பாடியருளவேண்டும். நீரே அவ் அருஞ்செயலை முடிக்க முற்றிலும் தகுதி பெற்றவர். நுமக்குத் தில்லையில் வேண்டும் வசதிகள் எல்லாம் செய்து தரப்படும்,' என்று அன்புடன் கூறினான்.

### தில்லையில் சேக்கிழார்

அரசனது அன்பு நிறைந்த சிந்தையையும் சிவபத்தியையும் கண்ட சேக்கிழார், 'இஃது இறைவன் திருவருள் போலும்' என்று எண்ணி, அரசன் வேண்டுகோளை ஏற்றனர். அன்றே தில்லைத் திருநகருக்குப் புறப்படலாயினர். அரசியல் அலுவலாளர் பலர் அவருக்கு

வேண்டும் உதவிகளைச் செய்ய உடன் சென்றனர். அரசன் ஆணைப்படி அவருக்கு வேண்டிய பொருள்களை எல்லாம் எடுத்துக்கொண்டு பணியாளர் பலர் பின் தொடர்ந்தனர். எல்லோரும் தில்லையை அடைந்து சேக்கிழார் தங்குதற்கென அமைத்த தனி மாளிகையில் புகுந்தனர்.

**சேக்கிழார் காவியத் திருப்பணி**

சேக்கிழார், தொண்டர் காவியத்தைப் பாடத் தொடங்குதற்குத் தூய நாள் ஒன்றைக் குறித்தார். அன்று அவர் காலையில் நீராடி வெண்ணீறு அணிந்து, மாலையாகப் புனைந்து சிவக்கண்மணி தரித்துக் கூத்தப் பெருமான் திருக்கோவிலை அடைந்தார். தில்லைப் பொன்னம்பலத்தை மும்முறை வலம்வந்து பெருமான் திருவடி இறைஞ்சிப் போற்றினர். "பெருமானே! தொண்டர்தம் பெருமை சொல்லவும் படுமோ! அறிதற்கு அரியதும் அளவிடற்கு அரியதுமான அடியார் பெருமையை அடியேன் எங்ஙனம் சொல்ல வல்லேன்? நின் திருவருள் துணையின்றி எளியேனால் யாதும் இயற்ற முடியாது," என்று உள்ளமும் ஊனும் ஒருங்கு உருகப் பெருமானிடத்து முறையிட்டார். அப்போது 'உலகெலாம்' என்ற திருவாக்கு அங்கு நின்றார் அனைவரும் கேட்க வானில் எழுந்தது.

அவ்வாறு இறைவன் எடுத்துக்கொடுத்த 'உலகெலாம்' என்ற மங்கலத் தொடரையே முதலாகக் கொண்டு காவியத்தைப் பாடத் தொடங்கினர். சில காலத்தில் தொண்டர் புராணமாகிய தண்டமிழ்க் காவியம் நிறைவுற்றது. இக் காலத்தில் அரசன் அநபாயன் சேக்கிழார் தில்லையில் தங்கிச் செய்துவரும் காவியப்

பணியைப் பற்றி ஒற்றர், தூதர் வாயிலாக உணர்ந்த வண்ணமாக இருந்தான். காவியம் நிறைவுற்ற செய்தி காதுக்கு எட்டியவுடன் அநபாயன் அளப்பரிய களிப் புற்முன். அக் காவியத்தை அரங்கேற்ற நன்னுள் ஒன் றைக் குறிப்பிடுமாறு சேக்கிழாருக்கு ஓலை போக்கினுன். சேக்கிழார், சித்திரைத் திருவாதிரையில் காவியத்தை அரங்கேற்றலாமெ ன அரசனுக்குச் செய்தி யனுப்பினூர். அம் மங்கலச் செய்தியைப் பலநாட்டு மன்னர்க்கும் அறிவித்து அநபாயன் ஓலை போக்கினுன்.

**திருத்தொண்டர்புராண அரங்கேற்றம்**

அநபாய சோழ மன்னன் தொண்டர்புராண அரங் கேற்ற விழாவைக் கண்டு மகிழப் புறப்பட்டான். அவன் படைகள் புடைசூழப் பேராரவாரத்துடன் தில்லைத் திருநகரைச் சேர்ந்தான். சிவவேடப் பொலிவுடன் விளங்கிய சேக்கிழார் பெருமானைக் கண்டு வணங்கினுன். தன்னை எதிர்கொண்ட தில்லைவாழந்தணர்கள், மட பதிகள் முதலியோருடன் திருக்கோவிலை அடைந்து அம்பலக் கூத்தன் அடிகளைப் பணிந்தான். அப்போது எல்லோரும் கேட்குமாறு, "அரசனே! 'உலகெலாம்' என்று நாம் அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழான் திருத்தொண்டர் புராணத்தைச் செய்து முடித்துள் ளான். நீ அதனைக்கேட்டு அகமகிழ்வாயாக!" என்று இறைவன் அருள்வாக்கு வானில் எழுந்தது. அவ் வொலியுடன் இறைவன் திருவடிச் சிலம்பொலியும் அடியவர் செவிகுளிரக் கேட்டது.

இவ் வொலிகளைக் கேட்ட அரசன் அநபாயனும் தில்லைவாழந்தணர்களும் சித்திரைத் திருவாதிரைத்திரு நாளில் புராண அரங்கேற்றத்தைத் தொடங்குமாறு

சேக்கிழாரை வேண்டினர். அவ் அரங்கேற்ற விழாவிற்கு நாட்டிலுள்ள பெருமன்னர்களும் குறுநில மன்னர்களும் பெருஞ்செல்வர்களும் அரசியல் அலுவலர்களும் தில்லையில் வந்து திரண்டனர். அநபாயன் விழாவைக் காணவருவார் யாவர்க்கும் வேண்டும் வசதிகளைச் செய்து கொடுத்தான். தில்லைக் கூத்தப்பெருமானுக்கு நாள்தோறும் சிறப்பொடு பூசனை நடக்குமாறு பணித்தான். திருக்கோவில் ஆயிரக்கால் மண்டபத்தில் சிவ பத்தி மிக்க செந்தமிழ்ப் பெருவேந்தனாகிய அநபாயன் திருமுன்பு சேக்கிழார் பெருமான் தமது காவியத்தை வாசித்துப் பொருள் விரித்துரைக்கத் தொடங்கினார். அடுத்த ஆண்டு சித்திரைத் திருவாதிரையில் அரங்கேற்றம் நிறைவுற்றது. தொண்டர்புராண அரங்கேற்றம் நடைபெற்ற ஓராண்டுக் காலமும் தில்லைத் திருநகரம் தேவகயிலாயமாகத் திகழ்ந்தது. நாள்தோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்து தெய்வத் தொண்டர் திருச்சரிதங்களை உளமுருகக் கேட்டு உவகையுற்றனர்.

**சேக்கிழாருக்குச் சிறப்புச் செய்தல்**

திருத்தொண்டர்புராணம் அரங்கேறியவுடன் மன்னன் அநபாயன் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையில்லை. சேக்கிழார் பெருமானுக்குத் தக்க சிறப்புக்கள் செய்யப் பேராவல் கொண்டான். தில்லைக்கூத்தன் திருமுன்பு பசும்பட்டால் அணிசெய்த அறுகாற்பீடத்தில் புராணத்தை ஏற்றினான். அதனைத் தில்லைவாழந்தணர்கள் சிவமூல மந்திரத்தால் பூசித்தார்கள். அதன் பின் அதனைப் பொற்பேழையில் வைத்து, அரசன் தனது பட்டவர்த்தனக் களிற்றின் தலைமேல் எழுந்தருளச் செய்தான். சேக்கிழார் பெருமானையும் அவ்யானையின்

பிடரியில் ஏற்றினான். அரசன் தானும் ஏறிச் சேக்கிழா பின்னே அமர்ந்துகொண்டு, தன் இரு கைகளாலும் அவருக்குச் சாமரை வீசினான். எண்ணற்ற இன்னியங்கள் முழங்கத் தில்லை நகரத்தை வலம் செய்வித்தான். 'யான்செய்த தவப்பயன் இதுவன்றோ!' என்று மகிழ்ந்தான். இறைவன் அருண்மொழியை முதலாகக் கொண்டு புராணம் பாடிய அமைச்சராகிய சேக்கிழாரை 'அருண்மொழித்தேவர் நீடு வாழ்க!' என்று வாயார வாழ்த்தினான்.

நகர்வலம் முடிந்து, எல்லோரும் தில்லைக்கூத்தன் சந்நிதியை அடைந்தனர். திருமுறை கண்ட சோழனாகிய இராசராசன் காலத்தில் நம்பியாண்டார் நம்பிகளால் வகுக்கப் பெற்றிருந்த பதினொரு திருமுறைகளுடன் திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்த்துச் செப்பேடு செய்யுமாறு அநபாயன் ஆணையிட்டான். "இன்று முதல் சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும்" என்று நாடெங்கும் பறையறையப் பணித்தான். சேக்கிழார் பெருமானுக்குத் 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற பட்டத்தை அன்றே வழங்கினான். அவருக்கு ஞானமுடி சூட்டி அடி பணிந்து வணங்கினான்.

**சேக்கிழார் ஓய்வு நாட் பணி**

அதன்பின் சேக்கிழார் தமது அமைச்சுப் பதவியினின்று விலகி ஓய்வு பெற்றார். தமது பிறப்பகமாகிய குன்றத்தூரை அடைந்தார். தாம் தேடிய பெருநிதியத்தைக் கொண்டு சிவபிரானுக்குத் திருக்கோயில் ஒன்று அமைக்க விழைந்தார். அவர் அமைச்சராக விளங்கிய நாளில் நாட்டிலுள்ள பல்வேறு நகரங்களையும் சிறந்த சிவத்தலங்களையும் பார்வையிடச் செல்வார். அங்ஙனம்

சென்ற காலத்தில் அவரது சிந்தையைக் கவர்ந்த தலம் திருநாகேசுரம் என்பதாகும். அத் தலத்தையே சேக்கிழார் தமது ஆன்மார்த்த தலமாக நேசித்துப் பூசித்தார். அதனால் அவர் தம் ஓய்வுக் காலத்தில் தமது ஊராகிய குன்றத்தூரில் திருநாகேசுரம் திருக்கோவிலைப் போன்றதொரு கோவிலை எடுத்தார். அதற்கும் திருநாகேசுரம் என்றே திருப்பெயர் அமைத்தார்.

சேக்கிழார் சோழநாட்டுச் சிவத்தலமாகிய திருநாகேசுரத்தைப் பெரிதும் விரும்பினார் என்பதற்கு இன்றும் அத் தலத்தில் தக்க சான்றுகள் உண்டு. சேக்கிழார், அவர் தம்பியாராகிய பாலறாவாயர், அவர் தாயாராகிய அம்மையார் ஆகிய மூவருடைய திருவுருவங்களும் அத் திருக்கோவிலில் அமைக்கப்பெற்றுள்ளன. சேக்கிழார் அமைச்சராக விளங்கிய காலத்தில் பெரும்பாலும் இத் தலத்திலேயே தங்கித் தம் அரசியல் அலுவல்களைக் கவனித்து வந்தார் என்பர்.

**பாலறாவாயர் பதவி பெறுதல்**

சேக்கிழார் ஓய்வுபெற்ற பின்னர் அவர் குடியினை ஆதரிக்கவேண்டும் என்று கருதிய அநபாய சோழன் அவர் தம்பியாராகிய பாலறாவாயரை அழைப்பித்தான். அவருக்கே அமைச்சர் பதவியை வழங்கிப் போற்றினான். அமைச்சர் பாலறாவாயரும் அண்ணலாரைப் போன்றே அருந்திறலுடன் அரசியற் காரியங்களைக் கவனித்துவந்தார். ஆதலின் அநபாயன் அவருக்குத் 'தொண்டைமான்' என்ற பட்டத்தை வழங்கிப் பாராட்டினான். அவர் தமது ஊரில் தங்கியிருந்தே அமைச்சுப் பணியை ஆற்றிவந்தார். ஆதலின் அவர் 'தொண்டை மண்டலம் நின்றுகாத்த பெருமாள்' என்று பெயர் வழங்கப்பெற்றார்.

## ௨. பெரியபுராணம் ஒரு பெருங்காவியம்

நந்தம் செந்தமிழ் மொழியில் எத்தனையோ புராணங்கள் இருக்கின்றன. வடமொழியில் பதினெண் புராணங்கள் வழங்குகின்றன. அவ் வடமொழிப் புராணங்கள் எல்லாம் சிவன், மால், அயன், சூரியன், அங்கி முதலிய தெய்வங்களைப் பற்றியனவாகும். தமிழிலுள்ள புராணங்கள் பலதிறப்பட்டனவாகும். அவையனைத்தும் சமயத்தொடர்புடைய நூல்களே. தேவர், அரசர், முனிவர், அடியார்கள் ஆகியோர் வரலாற்றை உயர்வு நவிற்சி அமையக் கற்பனை நலங்கனியப் புனையப் பெற்றதே புராணமாக விளங்கக் காண்கிறோம். சிறந்த தலங்களின் வரலாறுகள் தல புராணங்களாக நிலவவும் காண்கிறோம். அவைகளில் பெரும்பாலன, கவிஞர்களின் கற்பனைத்திறனைப் பொற்புறக் காட்டும் கண்ணாடிகளாகவே அமைந்துள்ளன. எனினும் அப் புராணங்கள், மக்கள் உணர்ந்து உய்யத்தக்க உயர்ந்த உண்மைகள் பலவற்றைத் தம்முள்ளே பொதிந்து பொலிகின்றன.

சேக்கிழார் பெருமான் செய்தருளிய பெரியபுராணம் பிற புராணங்களைப் போன்றதன்று. இறைவன்பால் நிறையன்பு செலுத்தி வீடெய்திய தமிழ்நாட்டு மெய்த் தொண்டர் வரலாறுகளைப் பெருங்காப்பிய நயங்களோடு தொகுத்துரைக்கும் பெருமையுடையது. இதைப்போன்றதொரு புராணம் தென்மொழியிலும், வடமொழியிலும் வேறில்லை என்றே சொல்லலாம். இதனைப் பல்கதைக் கோவை என்று சிலர் கருதுகின்றனர். பெரியபுராணம் அத்தகையதன்று. தந்நிகரில்லாத தலைவர் ஒருவரது வரலாற்றையே காவிய நலங்கள் கனியக் கவினுற உரைப்பது அந்நூல்.

திருத்தொண்டர்புராணம் பாடுவதற்குத் திருத்தொண்டத் தொகையாகிய முதல்நூலைத் தந்த சுந்தரரே பெரியபுராணப் பெருங்காவியத்தின் தலைவர். அவர் கயிலாயத்தில் சிவபிரானுக்கு அணுக்கத்தொண்டராய் விளங்கிய ஆலாலசுந்தரர் என்னும் அடியவர் பெருமான். அவர் மாதவம் செய்த தென்றிசை வாழவும், தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரவும் கமலினி, அநிந்திதை என்னும் இருதோழியருடன் நிலவுலகில் அவதரித்தார். அவரே நம்பியாரூரர், வன்றொண்டர், தம்பிரான் தோழர் என்ற பெயர்களுடன் விளங்கித் திருவாரூரில் பரவையாரையும் திருவொற்றியூரில் சங்கிலியாரையும் திருமணம் புரிந்தார். கயிலாயத்தில் இறைவியின் தோழியராக விளங்கிய கமலினியும் அநிந்திதையுமே முறையே பரவையார், சங்கிலியாராகப் பாருலகில் தோன்றினர்.

'மணக்கோலம் தாங்கி வரும் சுந்தரரைக் காணக் கண்கள் எண்ணில்லாதனவேண்டும்' என்று கண்டவர் எல்லோரும் கொண்டாடும் கட்டழகு வாய்ந்த சுந்தரர் காவியத் தலைவராக விளங்குதற்குப் பெரிதும் தகுதியுடையவரன்றோ! கண்கொள்ளாக் கவின்பொழியும். திருமேனியுடைய சுந்தரரது வரலாற்றைச் சந்தமுறச் சொல்லும் செந்தமிழ்க் காவியமன்றோ பெரியபுராணம். பரவையாரும் சங்கிலியாரும் இக் காவியத்தின் தலைவியராவர். திருத்தொண்டத் தொகை பிறந்ததும் பரவையார் காதல்மணம் நிகழ்ந்ததும் ஆகிய சோழநாடும் திருவாரூருமே இப் பெருங் காவியத்திற் பேசப்பெறும் நாடும் நகருமாகும். சிவபத்தி, அடியார் பத்தி என்ற இருவகைப்பட்ட பத்திநெறியே இக் காவியத்தின் உள்ளுறை பொருளாகும்.

காவியத் தலைவராகிய சுந்தரர் கயிலையின் நீங்கி நிலவுலகில் தோன்றிய செய்தி, நூலின் தொடக்கத்தில் திருமலைச் சருக்கத்தில் சொல்லப்படுகிறது. நூலின் இறுதியில் உள்ள வெள்ளை யானைச் சருக்கத்தில் மீண்டும் அவர் வெள்ளை யானையின் மீது ஏறிக் கயிலாயம் சென்று சேர்ந்த செய்தி கூறப்படுகிறது. சேக்கிழார், சுந்தரரது வரலாற்றை நான்கு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டார். முதற் பகுதியைத் தடுத்தாட் கொண்ட புராணம் என்று அமைத்தார். இரண்டாம் பகுதியை ஏயர்கோன் கலிக்காமர் வரலாற்றுடன் இணைத்தார். மூன்றும் பகுதியைக் கழறிற்றறிவார் புராணத்துடன் கலந்தார். நான்காம் பகுதியை நூலிறுதியில் வெள்ளை யானைச் சருக்கத்தில் விளம்பினார்.

தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரர் திருவாரூரில் பரவையாரை மணம் புரிந்து, திருத்தொண்டத் தொகை பாடியது முடியவுள்ள வரலாறு பேசப்படுகிறது. ஏயர்கோன் கலிக்காமர் புராணத்தில் அவர் தலயாத்திரை செய்து, சங்கிலியாரை மணம் புரிந்து, திருவாரூர்க்குத் திரும்பியது வரையுள்ள வரலாறு பேசப்படுகிறது. கழறிற்றறிவார் புராணத்தில் சுந்தரர் சேரமான் பெருமாளுடன் நட்புக்கொண்டு கொங்கு நாட்டிலும் சேர நாட்டிலும் தல யாத்திரை செய்தது பற்றிய வரலாறு கூறப்படுகிறது. வெள்ளையானைச் சருக்கத்தில் சுந்தரர், சேரமான் பெருமாளுடன் கயிலைக்குச் சென்ற வரலாறு கட்டுரைக்கப்படுகிறது. அத்துடன் பெரியபுராணம் முற்றுப் பெறுகிறது.

இங்ஙனம் பெரியபுராணத்தில் நான்கு பகுதிகளாகப் பிரித்துப் பேசப்படும் சுந்தரர் வரலாற்றுக்கு

இடையே பல அடியார்களின் வரலாறுகள் சொல்லப் படுகின்றன. அவையெல்லாம் நூலின் துணைக்கதை களாகவே விளங்குவனவாகும். அவ் வரலாறுகள் அனைத்தும் சுந்தரரால் திருத்தொண்டத் தொகையில் குறிக்கப் பெற்றவை. ஆதலின் அவரது வரலாற் றுடன் இணைந்த அங்கங்கள் என்றே அவை சொல்லத் தக்கன. அக் கருத்தை வலியுறுத்தும் நோக்கத்துட னேயே சேக்கிழார், நூலிலுள்ள பதின்மூன்று சருக்கங் களின் இறுதியிலும் சுந்தரரது வரலாற்று நிகழ்ச்சி யொன்றைச் சுட்டிக்கொண்டே செல்கின்றார்.

மேலும், இந் நூலைச் சேக்கிழார் இரு காண்டங் களாகப் பிரித்து, ஒவ்வொரு காண்டத்தையும் பல சருக்கங்களாகவும் வகுத்துள்ளார். சருக்கங்களின் உட் பிரிவுகளாக அடியார்களின் புராணத்தைத் தனித் தனியே அமைத்துள்ளார். நூலுள்ளே தக்க இடங் களில் மலை, ஆறு, கடல், கதிரவன் உதயம், திங்களின் தோற்றம் முதலியன ஆசிரியரால் அழகுற வருணிக்கப் படுகின்றன.

பெருங்காவியம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கையும் உணர்த்த வேண்டும். பெரும்பாலான காவியங்கள் முதல்மூன்றை மட்டுமே அறிவுறுத்தும் மொய்ம்புடையனவாகும். இறுதியிலுள்ள வீட்டைப் பற்றியும் உறுதி தோன்ற விளக்கும் உயர்வு, பெரியபுராணத்திற்கு உண்டு. இங்ஙனம் பெருங்காவியத்திற்கு அமைய வேண்டிய இலக்கணங்கள் எல்லாம் ஒருங்கு இயைந்து விளங்கும் பெரியபுராணம் ஒரு பெருங்காவியமே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## ௩. பெரியபுராணத்தின் பெருமை

பன்னிரண்டாம் நூற்றுண்டில் தோன்றிய பைந் தமிழ்ப் பெருங்காவியமாகிய பெரியபுராணம், இறைவன் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்கப் பாடப் பெற்ற பெருமையுடையதாகும். இறைவன் திருவரு ளைப்பெற்று வீடுபேறுற்ற சிவனடியார்களின் சிறந்த வரலாறுகளைத் தெய்வ மணக்கும் செய்யுளால் விளக் கும் சிறப்புடையதாகும். சிவபெருமானைத் தோழராகப் பெறும் தவப்பேறு எய்திய சுந்தரரைக் காவியத் தலைவ ராகக்கொண்டு பாடப்பெற்ற தனிப்பெருமை உடைய தாகும்.

'செயற்கரிய செய்வார் பெரியர்' என்று பெரி யார்க்கு இலக்கணம் வகுப்பார் திருவள்ளுவர். பெரிய புராணத்தில் பேசப்படும் அடியார்கள் அனைவரும் செயற்கரிய செயல்களைப் புரிந்தருளிய பெருமக்கள். அவர்களுடைய உண்மையான வரலாறுகள் பத்திச் சுவை சொட்டச்சொட்டப் பசுந்தமிழால் பாடப்படு கின்றன. சொல்நயம், பொருள்நயம் பொருந்திய சிறந்த பாக்களால் அமைக்கப்பட்டுள்ளன. மங்கல மல்லாத சொற்களே மருவாதவண்ணம் அருள்மணம் கமழ ஆக்கப்பெற்ற அரிய காவியம் பெரியபுராணம்.

இந் நூல் முதன்முதல் தமிழிலேயே இயற்றப் பெற்றது. காவியத் தலைவராகிய சுந்தரர்க்குத் திருவா ரூர்ப் பெருமான் அடியெடுத்துக் கொடுக்கப் பாடிய திருத்தொண்டத்தொகைப் பதிகத்தையே முதல் நூலா கக் கொண்டு மொழியப்பெற்றது. திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் நல்லருள் பெற்ற நம்பியாண் டார் நம்பி பாடியருளிய திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டத்தொகையின் வழிநூலாக அமைந்தது.

இவ் விரண்டையும் ஆதாரமாக வைத்துக் கொண்டே சேக்கிழார் பெரியபுராணமாகிய சார்புநூலைப் பாடியருளினார். இவற்றை முறையே தொகைநூல், வகைநூல், விரிநூல் என்று குறிக்கலாம். இக் கருத்தைச் சிவஞானமுனிவர்,

> "தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
> வாக்கி னாற்சொல்ல வல்ல பிரான்."

என்று குறித்தருளுவார்.

கி. பி. நான்காம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை 'தமிழகத்தின் இருண்ட காலம்' என்று வரலாற்று ஆசிரியர்கள் பேசுவர். அக் காலத்தில் தமிழகம் இருந்த நிலையைத் தெரிந்து கொள்ளத்தக்க சான்றுகள் இல்லை. அதற்குப் பிற்காலத்தில் தமிழகத்தை ஆண்ட பல்லவ மன்னர்களின் கால நிலையைக் காணுதற்கும் போதிய ஆதாரங்கள் இல்லை. இக் குறைகளை ஓரளவு நீக்க வல்லதாகப் பெரிய புராணம் உள்ளது. வரலாற்றில் இருண்ட பகுதியை விளக்கும் மணிவிளக்காகப் பெரியபுராணம் விளங்குகிறது என்று சொல்லலாம்.

சோழன் கோச்செங்கணான் சிறந்த சிவத் தொண்டன். அவன் பெரியபுராணத்தில் பேசப்படும் அடியார்களுள் ஒருவன். அவனது வரலாற்றால் தமிழக வரலாற்றின் இருண்டகாலம் ஓரளவு ஒளி பெறுகின்றது. திருநாவுக்கரசர் வரலாற்றால் மகேந்திர வர்மனது வரலாறு தெளிவடைகின்றது. சிறுத் தொண்டர் வரலாற்றால் நரசிம்மவர்மன் வரலாறு நன்கு புலனாகின்றது. பூசலார் வரலாற்றால் காடவர்கோன் கழற்சிங்கன் வரலாறு காணக்கிடைக்கிறது. கழற்சிங்கர் வரலாற்றால் மூன்றாம் நந்திவர்மன் வரலாறு விளக்கம்

பெறுகின்றது. இங்ஙனம் நான்காம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையுள்ள ஐந்நூறு ஆண்டுகளின் தமிழக வரலாற்றை அறிதற்குப் பெருந்துணையாகப் பெரியபுராணம் விளங்குகின்றது. வரலாற்று உண்மைகளையெல்லாம் தெளிவாகத் தெரிந்து தமது காவியத்தில் புகுத்தியுள்ள சேக்கிழாரது மதிநுட்பத்தை வரலாற்று அறிஞர்கள் வியக்காதிருக்க முடியாது.

அக் காலத்தில் தமிழகத்தில் நிலவிய சைவம், சமணம், பௌத்தம் முதலிய சமய உண்மைகளும் ஆங்காங்கு நூலில் இடம்பெற்றுள்ளன. காவியத்தில் பேசப்படும் அடியார்கள் வாழ்ந்த கால நிலைமையையும் அக் கால மரபுகளையும் உணர்ந்து சிறிதும் பிறழாது அமைக்கின்ற சேக்கிழார் புலமைத்திறம் பெருவியப்பூட்டுவதாகும். அடியார்கள் வாழ்ந்த நகரங்கள், ஆங்கு வாழும் அவர் வழிவந்தோர், சமயகுரவர் மூவரும் தலயாத்திரை செய்த வழிகள் இவற்றையெல்லாம் ஆசிரியர் நேரில் சென்று கண்டு சிறிதும் பிறழாது விளக்குகின்றார். திருக்கோவில்களில் காணப்படும் கல்வெட்டுக்களையெல்லாம் நன்றாக ஆராய்ந்து அவற்றிற்கு மாறுபடாமல் வரலாறுகளை அமைக்கின்றார்.

இங்ஙனம் சிறந்த ஆராய்ச்சி அறிவுடன் பெரிய புராணத்தைப் பாடியருளிய சேக்கிழார் சோழப் பேரரசின் முதலமைச்சராவர். பல நாடுகளையும் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு அவருக்கு உண்டு. அவர்தம் ஏவலை விரைந்து முடிக்கும் பணியாளர் அளவிலராக இருந்திருப்பர். நாட்டு மக்களை நல்வழிப்படுத்தும் நன்னோக்கத்துடனேயே இந் நூலை ஆக்கியருளினார். இந் நூலைத்

தவிரச் சேக்கிழார் ஒரு வரிகூடப் பாடியவரல்லர். அவர் தம்முடைய முழுப்புலமையையும் பெரியபுராணம் ஒன்றற்கே செலவிட்டார். அதனுல் இந் நூல் இணை யற்ற சைவக் காவியமாக எழிலுருப் பெற்றது.

சைவசமயத்தைச் சார்ந்த மூன்று புராணங்களைச் சைவ நன்மக்கள் தெய்வக் காப்பியங்களாகச் சிரமேல் கொண்டு போற்றுவர். அவை பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் என்ற மூன்றுமாகும். கந்தபுராணம் சிவபெருமானது செந்தழற் கண்ணுகச் சிறப்பிக்கப்படும். திருவிளையாடற் புராணம் அப்பெருமானது இடக்கண்ணுகக் குறிக்கப்படும். பெரியபுராணமோ அப் பெருமானின் வலக்கண்ணுக மதிக்கப்படும்.

உமாபதிசிவனர் தமிழில் உயர்ந்த நூல்களென ஆறு நூல்களைத் தேர்ந்து உரைக்கின்ருர். அவற்றைத் 'தண்டமிழின் மேலாம் தரம்' என்று கொண்டாடுகின்ருர். திருக்குறள், திருவாசகம், தொல்காப்பியம், பரிமேலழகர் உரை, திருத்தொண்டர்புராணம் ஆகிய பெரியபுராணம், சிவஞானசித்தியார் என்னும் ஆறு நூல்களும் தமிழில் முதல்தரமான நூல்கள் என்று மொழிந்தருளினர். அவர் பெரியபுராணத்தை 'ஒள்ளிய சீர்த் தொண்டர் புராணம்' என்று அதன் உயர்வு தோன்ற அடைமொழிகள் கொடுத்துக் குறித்தார். மெய்ஞ்ஞானமும் மேதினிஞானமும் ஒருங்கு பயக்கும் உயர்வுடையது பெரியபுராணம் என்பதை வலியுறுத்தவே அவர் ஒண்மை, சீர்மை என்ற இரண்டு அடைமொழிகளால் பாராட்டினர். இங்ஙனம் பல்வகையாலும் சிறப்புற்று விளங்கும் பெரியபுராணம் அரிய சைவத் தமிழ்க் கருவூலமாகும்.

## ௬. சேக்கிழார் புலமைச் சிறப்பு

பெரியபுராண ஆசிரியராகிய சேக்கிழார் பெருமானைத் தெய்வப் புலமைச் சேக்கிழார் என்றே அறிஞர் பாராட்டுவர். இளமையிலேயே இலக்கிய, இலக்கண, சமய நூல்களை ஐயந்திரிபற ஓதியுணர்ந்த உயர்ந்த புலமையைச் சேக்கிழார் பெற்றிருந்தமையைத் தெரிந்தே அநபாய சோழன் தனது பேரரசுக்கு அவரைத் தலைமை அமைச்சராகத் தேர்ந்தெடுத்தான். மதிநுட்பம் நூலோடுடைய சேக்கிழார் அமைச்சுரிமைத் தொழிலில் காட்டிய ஆற்றலைக் கண்டு அநபாயன் பெருவியப்புக் கொண்டான். அதனாலேயே அவருக்கு 'உத்தமசோழப் பல்லவன்' என்ற உயரிய பட்டத்தைக் கொடுத்துப் பாராட்டினான்.

சேக்கிழார் காலத்திற்கு இருநூறு ஆண்டுகட்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த பெருஞானியாகிய உமாபதிசிவனார் சேக்கிழார் புராணம் பாடினார். அவர் தில்லைக் கூத்தன் திருவருளைப் பெரிதும் பெற்றவர். அப்பெருமான் திருவருளால் பல அற்புதங்களை நிகழ்த்தியவர். தில்லைக் கூத்தன் திருமுகம் அனுப்பியவாறே 'பெற்றான் சாம்பான்' என்ற அடியவனுக்கு முத்தி கொடுத்தருளியவர். அவ் உண்மையை நிலைநாட்ட மன்னனும் மக்களும் காணுமாறு முள்ளிச் செடிக்கும் முத்தி நல்கியவர். இத்தகைய வித்தகப் பேரருளாளராகிய உமாபதி சிவனார் தாம் பாடிய புராணத்தில் சேக்கிழாரது புலமையைப் பலவாறு வியந்து பாராட்டுகின்றார்.

"வடமொழியில் இராமாயணம் வகுத்த வான்மீகி, பாரதம் பாடிய வேதவியாசன், ஆயிரம் நாப்படைத்த ஆதிசேடன், பொதியத் தமர்ந்த முனிபுங்கவன் ஆகிய

இவருள் எவரும் சேக்கிழாருக்கு ஒப்பாகார். கலைமகள் தன் கணவனாகிய நான்முகன் நாவை மறந்து சேக்கிழாரது செந்தமிழ் நாவிலேயே குடிகொண்டுவிட்டாள். கடல் அலைகளைக் கணக்கிட்டு விடலாம்; கடற்கரையில் உள்ள மணலை எண்ணிவிடலாம்; கடலுள் வாழும் மீன்களையும் கணித்துவிடலாம்; வானில் ஒளிரும் மீனினங்களையும் வகுத்து எண்ணிவிடலாம்; ஆனால் சிவனடித் தொண்டர்கள் பெருமையை அளவிட்டு உரைத்தல் என்பது சேக்கிழார்க்கு எளிதாகுமே அல்லாமல் தேவர்கட்கும் அரிதாகும்.'' இங்ஙனம் பலவாறு சேக்கிழாரது புலமை நலத்தை வியந்து புகழ்ந்தார் உமாபதிசிவனார்.

சேக்கிழார் காலத்திற்கு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகட்குப் பின்னர்க் கவியரசராகிய கம்பர் விளங்கினார் என்பர். அவர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் விளங்கிய கவிஞர். சேக்கிழாரோ இரண்டாம் குலோத்துங்கனாகிய அநபாயனுக்கு அமைச்சராக விளங்கியவர். ஆதலின் கம்பர், சேக்கிழார் பெருமையை நன்கு உணர்ந்திருக்க வேண்டும். அதனாலேயே அவர் தாம் பாடிய இராம காவியத்தின் முதற் பாட்டிலேயே சேக்கிழாரைப் பின்பற்றிவிட்டார்.

'உலகெலாம்உணர்ந் தோதற் கரியவன்' என்று தொடங்கும் பெரியபுராணம், 'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்' என்று தொடங்கும் இராம காவியம். இரண்டும் ஒத்த சந்தமுடைய ஓரினப் பாடல்கள். இங்ஙனம் கம்பர் தம் காவியத்தில் பல இடங்களில் சேக்கிழாரது வாக்கையும் நோக்கையும் எடுத்தாண்டுள்ளார். இதுவன்றிக் கம்பர் தாம் பாடிய திருக்கை வழக்கம் என்னும் நூலில் சேக்கிழார் வாழ்க்கை

நிகழ்ச்சியொன்றைக் குறிப்பிட்டு, அவரது புலமையைப் பாராட்டுகின்றார்.

> 'காவலவன்
> மண்ணிற் கடலின் மலையிற் பெரிதேனென
> எண்ணியெழு திக்கோடுத்த ஏற்றக்கை'

என்று சேக்கிழார் திருக்கரத்தைக் கம்பர் சிறப்பித்துள்ளார்.

ஏறத்தாழ நூற்றெண்பது ஆண்டுகட்கு முன்னர் விளங்கிய மாதவச் சிவஞான சுவாமிகள் தாம் பாடிய காஞ்சிப்புராணம் கடவுள்வாழ்த்துப் பகுதியில் சேக்கிழார் பெருமானுக்கும் வணக்கம் செலுத்துகின்றார்.

> 'தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
> வாக்கி னற்சொல்ல வல்ல பிரான்எங்கள்
> பாக்கி யப்பய னப்பதி குன்றைவாழ்
> சேக்கி ழானடி சென்னி இருத்துவாம்.'

என்பது அவரது துதிப்பாடலாகும். இப் பாட்டுள் 'எங்கள் பாக்கியப் பயன் சேக்கிழார்' என்று சிறப்பித்தருளினர் சிவஞானமுனிவர்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பெருந்தமிழ்ப் புலவராகிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சேக்கிழார்மீது பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் பாடியுள்ளார். அது பிற்காலத்தில் எழுந்த மிக உயர்ந்த பிரபந்தமாகும். அதிலே அவர் சேக்கிழாரைப் 'பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று வாயார வாழ்த்துகின்றார். அவருடைய பாடற் சிறப்பைக் குறிப்பிட வந்த மகாவித்துவான், 'தெய்வ மணக்கும் செய்யுளெல்லாம்' என்று சிந்தை குளிரப் பாராட்டுகின்றார். அவர் சேக்கிழாரது புலமைச் சிறப்பை விளக்கும் வகை

யில் அழகிய பாடலொன்றைச் சப்பாணிப் பருவத்தில் அமைத்துள்ளார்.

ஆசிரியர்கள் தம் அறிவாலும் திறனாலும் தகுதி வேறுபாடு உடையவராக விளங்குவர். ஒரு சிலர் நூல் இயற்றும் ஆற்றலே பெற்றிருப்பர்; அன்னார் நூலாசிரியர் ஆவர். வேறு சிலர் உரை எழுதுவதில் திறமை உடையவராய்த் திகழ்வர்; அவர்கள் உரையாசிரியர் எனப்படுவர். மற்றும் சிலர் சமய உண்மைகளைப் போதிப்பதில் புலமை சான்றவராக விளங்குவர்; அவர்கள் போதகாசிரியர் என்று போற்றப்பெறுவர். இன்னும் சிலர் இறைவன் இன்னருளைப் பெறுதற்கு நன்னெறி காட்டுவர். அவர்கள் ஞானாசிரியர் என்று தலைக்கொண்டு போற்றும் தகுதியுடையர். 'பெரியபுராணப் பெருங்காவியத்தை அருளிய சேக்கிழார் பெருமானே நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் போதகாசிரியராகவும் ஞானாசிரியராகவும் சிறப்புற்று விளங்கும் திறப்பாட்டை அவரது அரிய நூலொன்றாலேயே அறியலாம்' என்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மிகவும் அழகுறப் பாராட்டியுள்ளார்.

இங்ஙனம் பல துறையிலும் பெரும்புலமை பெற்று விளங்கிய சேக்கிழார் பெருமானை முதலமைச்சராகப் பெறும் பேறு பெற்ற அநபாய குலோத்துங்கன் பெருமைதான் என்னே! அவருடைய கலைநலத்தைக் கண்டு காவியம் செய்தருளுமாறு வேண்டிய அவனது சமயப் பற்றை என்னென்பது! அரசும் அமைச்சும் கலந்து உருவாக்கிய திருத்தொண்டர் புராணத்தின் சிறப்பை அளவிடலாகுமோ!

Prescribed for Non-Detailed Study in Tamil, under Second Set, for the Madras S. S. L. C. Public Examination 1959, vide page 289 of the Fort St George Gazette, dated 28th May 1958.


பதிப்பாளர்:

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
1/140, பிராட்வே, சென்னை-1.

தலைமை நிலையம்:

98, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.


விலை ரூ. 0-87.


அப்பர் அச்சகம், சென்னை - 1.